

## குப்பை விவகாரம்:
### "அரசு சூழல் தாக்க மதிப்பீட்டை முறையாகச் செய்யவில்லை"
07



## துருவ மயமாகும் அரசாங்கம் திரிசங்கு நிலையில் சிவில் சமூகம்
05








# மீள்பார்வை

மீල්පාර්වෙ
Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038
Meelparvai Fortnightly
meelparvai.net
සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்
இதழ் - 415 • 15 மார்ச் 2019 வெள்ளிக்கிழமை • ரஜப் 1440 • விலை 40.00






# ஜனநாயக ரீதியில் போராட்டம் தொடரும்




அறுவாக்காட்டில் குப்பை கொட்டுதற்கான முயற்சிகள் தொடருமானால் அதற்கெதிரான எமது ஜனநாயக ரீதியான போராட்டமும் தொடரும் என அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் தெரிவித்தார். அறுவாக்காட்டில் குப்பை கொட்டுவதைத் தடுப்பதற்காக பாராளுமன்ற குழு அறையில் பாராளுமன்ற உறுப்பினர் களைச் சந்தித்துப் பேசியமை தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதிகம் செலவழித்து குப்பைகளை இன்னோரிடத்துக்கு எடுத்துச் செல்வதை விட அந்தந்தப் பிரதேசங்களிலேயே குப்பைகளைப் பராமரிக்க முடியும் என் றும், கொழும்பிலேயே இதனை மீள்சுழற்சி செய்ய முடியும் என்றும் நாங்கள் எடுத்துக் காட்டினோம். மீள்சுழற்சிக்குப் பின்னர் எஞ்சிய 200- 300 மெற்றிக் தொன்களைத் தான் இங்கு கொண்டு வந்து கொட்டு வதென்றால் இவ்வளவு பெரிய ஏற்பாடுகள் ஏன் (பக். 02)

# பெற்றோர் வெளிநாட்டிலென்றால் பிள்ளைகளுக்கு இலவசமாக வைபை




**- பிரதமரின் திட்டம்**

பெற்றோர் வெளிநாட்டில் வேலை செய்யும் பெற்றோரது, பாடசாலையில் அல்லது பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு இலவசமாக வீட்டு வைபை வழங்குவதற்கு அர சாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடைய ஆலோச னையின் பேரில், தொலைத் தொடர்புகள்,

(பக். 02)

# உயர் கல்விக்கான புலமைப் பரிசில் தொகை அதிகரிப்பு



இலங்கை உயர்கல்வி தொழில்நுட்ப நிறுவனத்தில் மாணவர்களுக்கு இதுவரை செலுத்தப்பட்ட மஹாபொல புலமைப் பரிசில் நிதியுதவி தவணைக் கொடுப்ப னவான ரூபா 1500 வை, ரூபா 2500 வரையில் அதிகரிப்பதற்காக நகர திட்ட மிடல் நீர் விநியோகம் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் சமர்ப் பித்த ஆவணத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

உயர்கல்விக்காக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹா பொல மற்றும் மாணவர் உதவி தொகை 2015ஆம் ஆண் டில் அதிகரிக்கப்பட்டதுடன் பல்கலைக்கழக மாணவர்களுக்காக ரூபா 5000 மாதாந்த புலமைப்பரிசில் நிதி உதவியும், ரூபா 4000 மாதாந்த பல்கலைக்கழக புலமைப் பரிசிலும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் மாணவர் ஒரு வருக்கு 1500 ரூபா புலமைப்பரிசிலும் உரித்தாகின் றது. இந்தத் தொகையே தற்போது 2500 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

(பக். 02)

# ஊழல் மோசடி முறைப்பாட்டுக் காலம் 19 வரை நீடிப்பு

2015.01.15 முதல் 2018.12.31 வரையான காலப்பகுதியில் அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாகக் கண்டறிவ தற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு மனுக்களையும் முறைப் பாடுகளையும் முன்வைப்பதற்கான காலக்கெடு இம் மாதம் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. (பக். 14)



# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்: சு.க. எதிர்ப்பு

அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்துள்ள புதிய பயங் கரவாத எதிர்ப்புச் சட்டத்தை சிறி லங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்கும் என சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜய சேகர தெரிவித்தார். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பலப்படுத்த வேண்டி யது அவசியம் எனத் தெரிவித்த அவர்,

(பக். 14)

# அடுத்த வருடம் சாம்பல் மாத்திரமே புத்தளத்துக்கு



கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் இரண்டு மின்னுற்பத்தி நிலையங்களை இந்த வருட இறுதிக்குள் நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது நடைமுறைக்கு வந்தால் மேல் மாகாணத்தின் சகல குப்பைகளையும் அதற்குப் பயன் படுத்த முடியும். அவ்வேளையில் அருவாக்காட்டுக்கு குப்பைகளை எரித்த சாம்பலை மட்டுமே அனுப்ப வேண்டியிருக்கும் என அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார். (பக். 02)

# கல்முனை இந்துக் கோவிலை அகற்றுவதை நிறுத்துவதற்கான வழக்கு ஒத்திவைப்பு

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தில் உள்ள இந்துக் கோவிலை அகற்றக் கோரி கல்முனை மாநகர மேயர் சட்டத் தரணி ஏ.எம். ரஹீப், கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு தொடர்பான உத்தரவு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பிறப்பிக்கப்படவுள்ளது.

கல்முனை தமிழ் பிரதேச சபை ஊழியர்களின் வழிபாட் டுக்காக 1990 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கோவிலை விஸ்தரிப்பதற்காக அப்போதைய தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர், மாநகர சபை ஆணையாளரிடம் அனுமதி கோரிய போதும் இற்றைவரை அனுமதி வழங்கப்படாமல் உள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# புத்தளம் குப்பை விவகாரம் ஜெனீவா செல்கிறது

சுமார் பல ஆண்டுகளாக தங்களது அடிப்படை உரிமைகளுக்காக கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ அருவாக்காடு செயற்திட்டத்துக்கு எதிராக (கொழும்பு குப்பைகள் புத்தளத்திற்கு வேண்டாம் என) குரல் கொடுத்துவரும் புத்தளத்து சமூகம் இலங்கையில் இருக்கும் அரசாலுல் அதன் பங்காளிகளாலும் முற்றாக புறந்தள்ளப்பட்டு எந்த ஒரு தீர்வும் கிட்டாத நிலையில், ஐக்கிய நாடுகளின் உலக மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்திற்கு கொண்டு செல்கிறார்கள் Clean Puttalam செயற்பாட்டாளர்கள்.

உலக மனித உரிமைகள் மீறல் நிலைமைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் தான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில். இது ஒரு சர்வதேச அரசாங்க அமைப்பு ஆகும். மனித உரிமைகள் பிரச்சினைகளை தீர ஆராய்ந்து, ஆண்டு முழுவதும் அதன் கவனத்தைத் தேவைப்படும் சூழ்நிலைகளில் செலுத்தி அதைப் பற்றி விவாதிக்கும் திறனை இது கொண்டுள்ளது.

இது ஜெனீவாவில் ஐ.நா. அலுவலகத்தில் ஒவ்வொரு வருடமும் சந்திப்பது வழக்கம், ஐ.நா பொதுச்சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 47 ஐ.நா. உறுப்பு நாடுகளால் இந்த கவுன்சில் அமைந்துள்ளது. இந்த கவுன்சிலின் 40வது கூட்டத்தொடர் பெப்ரவரி 25 முதல் மார்ச் 22 வரை அங்கு நடைபெறும், தற்போது நடைபெற்று வரும் இந்த தொடரில் புத்தளம் குப்பை பிரச்சினையை இலங்கை சமூகத்திற்கான ஐரோப்பிய மையத்தின் உதவியோடு Clean Puttalam போராட்டத்தின் ஆரம்ப கர்த்தா சகோதரர் இஷாம் மரிக்கார் கொண்டு செல்கிறார் என்று தகவல் கிடைத்துள்ளது

கடந்த 38வது உலக மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் திகன கலவரத்திற்காக தனி அறை ஒன்று ஒதுக்கப்பட்ட பல குழு கலந்துரையாடலின் பின்பு முடிவுகள் எடுக்கப்பட்டது போன்று இந்த விடயத்தையும் 40வது தொடரின் முற் கொண்டு செல்ல உள்ளதாக இலங்கை சமூகத்திற்கான ஐரோப்பிய மையத்தின் முக்கிய பிரான்ஸ் நாட்டு வட்டாரங்கள் எமக்கு அறியத் தந்தது. இதே தொடரில் இலங்கையின் போர் குற்ற கலந்துரையாடலும் மிகச் சூடாக நடைபெறப் போவதாகவும், அதற்காக சுமார் 20க்கும் மேற்பட்ட இலங்கை மேல்மட்ட அமைச்சர்கள் அரசின் செலவில் அங்கு செல்ல இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கு மத்தியில் தனது சொந்த செலவில் சென்று அவர்களை எதிர்த்து ஊருக்காக பேச இருக்கிறார் சகோதரர் இஷாம் மரிக்கார். என்றாலும் இந்த கூட்டத்தொடரில் கிளீன் புத்தளம் விவகாரம் கொண்டு செல்லப்படக்கூடாது என்றும், அதனால் எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளை நாம் சந்திக்க நேரிடும் என்றும் பிரபல ஐக்கிய ராஜ்யத்தின் புத்தள சட்டத்தரணி ரவுப் நிஸ்தார் பொதுக் கருத்தொன்றை வெளியிட் டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இத்தனையும் தாண்டி ஜெனீவா செல்ல தேவையான அனைத்து ஆவணங்களையும் அவரின் வேண்டுகோளின் படி புத்தளத்தில் இயங்கி வரும் சட்டத்தரணிகள் குழு தயாரித்துவருகின்றனர். எது எப்படியோ, குப்பை விவகாரம் ஜெனீவா சென்றால் நிச்சயம் அது இலங்கை அரசுக்கு ஒரு அழுத்தத்தை கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

நன்றி: Puttalam online

# ஜெனிவா பயணம் நன்மைக்குப் பதிலாக தீமைகளையே விதைக்கும்

## பரிஸ்டர் ரவூப் நிஸ்தார் எச்சரிக்கை




எதை, எங்கு, யாரிடம், எப்போது சொல்வதென்பது அனைவரினதும் தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் பொதுவிடயத்திலும் கொடுக்கப்படல் வேண்டும். இந்த அடிப்படையில் ஜெனீவா விடயத்தில் தெரிந்தோ தெரியாமலோ என் பெயரும் இழுக்கப்படுள்ளதால் அது பற்றி சிறிய விளக்கம் ஒன்றின் தேவை இருப்பதால் இதனை பதிவிடுகின்றேன்.

உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு குப்பை புத்தளத்தில் தட்டல் திட்டத்திற்கு எதிராக ஜெனிவாவில் மனித உரிமை அதிதிகளுக்கான ஒன்றுகூடலில் ஒரு பிரேரணையுடன் கூடிய விளக்கம் அளிக்க France, Switzerland நாடுகளில் உள்ள நம்மூர் காரர்களும், வேறு சிலருமாக யோசித்து அதில் UK யில் உள்ள புத்தளத்தவர்களின் நிலைப் பாட்டை PCS &Puttalam Community Services & (UK) என்ற எமது அமைப்பின் தலைவர் பமீம் (Carder Fameem) ஊடாக France சில் வசிக்கும் எம்மூர் திரு.இஸ்ஸத் ரஹுமான் (செல்லங் கண்டல் விதானை/பரியாரியின் மகன்) என்னுடன் தொடர்பு கொண்டார்.

France, Switzerland, Germany, UK போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து உலகத்தின் எப்பாகத்திலும் நடக்கும் முஸ்லீம்களுக்கு எதிரான விடயங்களுக்காக ஜெனீவாவில் வருடம்தோறும் குரல் கொடுப்பதாக சொன்னார். அத்துடன் என்னை அங்கு ஒரு 10 அல்லது 15 நிமிட Presentation ஒன்றை செய்யும் படியும் வேண்டிக் கொண்டார். இதில் கலந்து கொள்வதின் சரி பிழைகளை உடனடியாக சொல்ல முடியாது, எனவே இரண்டு நாள் அவகாசம் தரும் படி கேட்டுக் கொண்டேன்.

இதற்கிடையில் சுமார் 250 பேர் அங்கம் வகிக்கும் The Puttalam Politics என்ற பெயரில் புத்தளத்தில் இயங்கும் WhatsApp குழுமத்தில் இது பற்றிய அபிப்பிராயம் கேட்டிருந்தேன். மூவர் அல்லது நால்வர் பதில் அளித்திருந்தனர். இதில் மூவர் ஜெனீவா செல்வது நல்ல விடயம் என்றும் அதற்கான காரணத்தையும் சொல்லியிருந்தன்ர். அதில் ஹிஷாம் மரிக்காரின் நியாயம் இங்கு குறிப்பிடத்தக்கது. அதாவது. இந்த ஜெனீவாவில் இதுவரை செய்யப்பட்டுள்ள எத்தனையோ பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைத்ததா இல்லையா என்று தனக்கு தெரியாதென்றும், ஆனால் புத்தளத்தின் இந்த பிரச்சினையை இன்னார் ஜெனீவா கொண்டு சென்றார் என்ற விடயம் புத்தள வரலாற்றில் பதியப்படும் என்றும், ஆகவே, அங்கு செல்லும் படியும் உற்சாகப் படுத்தினார். தன் பக்க நியாயமாக இதை முன்வைத்தார்.

அவருக்கும் ஏனையோருக்குமான என் பதில் இன்னார் இதை இங்கு கொண்டு சென்றார் என்ற வரலாற்றுப்பதிவை பார்த்து பரவசப்படுவதை விட, கொண்டு செல்வதால் ஏற்படும் ஏதாவது எதிர்விளைவுகளை தவிர்க்க, கொண்டு செல்வதை தடுத்து அதனால் நன்மை ஏற்படுமானால் அதில் ஏற்படும் திருப்தி போதுமானது. ஆகவே இது ஜெனீவா கொண்டு செல்லவேண்டிய தேவையில்லை. காரணம் இந்த பிரச்சினையை எதிர்கொள்ள உள்நாட்டில் ஏற்பாடுகள் உள்ளன.

அதாவது வழக்குத் தொடர்தல் இன்னும் செய்யப்படவில்லை. எமக்கு இந்த குப்பை பாரதூரமான பிரச்சினை. ஆனால் ஜெனீவாவுக்கு இது ஒரு பிரச்சினையே அல்ல என்பதோடு இது ஒரு அற்ப விடயம். நாம் ''தும்மலுக்கும், இருமலுக்கும், தலையிடிக்கும், காய்ச்சலுக்கும் ஜெனீவா செல்ல முடியாது'' என்பதோடு, எமது ஒட்டு மொத்த இனத்திற்கும், அல்லது சமயத்துக்கும் நாட்டில் எல்லா பாகத்திலும் பிரச்சினை என்றால் அதற்காக செல்வதையும் கூட இந்த குப்பைக்கான பயணம் பிற்காலத்தில் பெறுமதியற்றதாக்கும் என்றேன்.

**என் நிலைப்பாடு சரியானது என்பதற்கு இரண்டு உதாரணங்கள்:**

1. ஜம்மியத்துல் உலமா தமிழர்களுக்கு எதிராகவும், ராஜபக்ச ஆட்சிக்கு ஆதரவாகவும் ஜெனீவா சென்ற போது அதை வெளிப்படையாக விமர்சித்தேன். அத்துடன் லண்டன் High Commission னினால் UK இலங்கை முஸ்லிம்கள் ஜெனீவா செல்ல மூன்று சொகுசு வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போது அதில் செல்ல முற்பட்ட இலங்கை முஸ்லிம்களையும் காரசாரமாக விமர்சித்து அவர்களை போகாமல் பண்ணினேன்.

அப்போது எனக்கெதிராக அமெரிக்க, இஸ்ரேலிய முகவர் பட்டம் கொடுத்தவர்கள், அடுத்த வருடமே தாங்கள் பிழை செய்து விட்டதாகவும் எனது அன்றைய நிலைப்பாடு சரி என்றும் கூறினார்கள். அடுத்த வருடமே அளுத்கமைக்காக அவர்கள் ஜெனீவா செல்ல ஏற்பட்டது. ஆனாலும் ஜம்மியத்துல் உலமா தாம் செய்த பிழைக்காக இன்னும் தமிழரிடம் மன்னிப்பு கோரவில்லை. இது இஸ்லாத்துக்கு எதிரான சமூக அநீதி.

மேலும் ஜெனிவா செல்வது பற்றி எமது PSC (UK) அமைப்பு பெரிதாக விரும்பவில்லை. காரணம், திகன சம்பவத்திற்கு இங்கிருந்து சென்ற நம் புத்தள சகோதரர்கள் வெறுமனே ஜெனீவா முற்றத்தில் கூடி, கோசம் எழுப்பி விட்டு வந்த கசப்பான அனுபவம். இவற்றை சொல்லி UK யில் இருந்து புத்தளத்தவர் எவரும் வர மாட்டார்கள் என்று France சுக்கு தகவல் அனுப்பினேன். ஆனால் இது முக்கிய விடயம், ஜெனீவாவுக்கு சென்றே ஆக வேண்டுமென்றால் நாங்கள் தடுக்கவில்லை என்றும், ஏதாவது ஆவணங்கள் தேவைப்படின் எடுத்துத் தர ஆர்வமாக உள்ளோம் என்ற செய்தியையும் சொன்னோம்.

ஆகவே ஜெனீவா செல்வது நன்மைக்கு மாறாக தீமையாகவே அமையும் என்ற முடிவில் இன்னும் உறுதியாக இருக்கின்றேன். நாங்கள் சொல்லும் 10 நிமிட செய்தியை கேட்டு விட்டு உலக அதிதிகள் ஒற்றை கேள்வியை முன்வைத்தால், அதாவது, இது தொடர்பாக உள்நாட்டில் நாம் எடுத்துள்ள ஏதாவது காத்திரமான நடவடிக்கை என்ன?, உதாரணமாக, நமக்கு இருக்கும் உரிமையைப் பாவித்து ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் போன்றல்லாமல் சுயாதீனமாக இயங்கும் நீதித் துறையினூடாக நாம் எடுத்த நடவடிக்கைகள் என்ன? நமது பதில் இன்னும் Documents சேர்த்துக் கொண்டிருக்கின்றோம் என்பதா!!. ஆகவே, ஜெனீவா சென்றும் நாம் ''பூஆருவாக்கள்'' என்பதை நிரூபிக்க வேண்டுமா என்பதே என் கேள்வி. இதை மீறி செல்வோருக்கு என் வாழ்த்துக்கள்.

நன்றி: Puttalam online

## ஜனநாயக ரீதியில்... (01 ஆம் பக்கத் தொடர்)

இங்கு நடக்கின்றன என்றும் புத்தளம் தான் குப்பைகளைப் பொறுப்பெடுக்க வேண்டுமா என்றும் கேள்வி எழுப்பினோம்.

இது தொடர்பான அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிடம் இது தொடர்பில் பேசுவது என கூட்டத்தில் பேசப்பட்ட போதும், அவரிடம் பேசிப் பலனில்லை என்ற கருத்துக்கள் வந்ததனால் பிரதமருடன் பேசுவது எனவும், அதற்கு அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ரங்கே பண்டார ஆகியோர் ஒழுங்கு செய்து தருவது எனவும் முடிவாகியது என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னரும் அறுவாக்காட்டில் குப்பை கொட்ட முயற்சிகள் எடுக்கப் பட்ட போதும் அதனால் விலங்குகள் பாதிக்கப்படும் எனக் கூறி அப்போது அது நிறுத்தப்பட்டது. ஆனால் மனிதர்களுக்குப் பாதிப்பு என எவ்வளவு எடுத்துக் கூறியும் அதை நிறுத்துவதாக இல்லை எனக் கூறிய அவர், எனவே எமது போராட்டத்தை ஜனநாயக ரீதியாக தொடர்ந்தும் கொண்டு செல்வோம்.

15 ஆம் திகதி (இன்று) தேசிய சர்வதேச ஊடகங்களை அழைத்து நாங்கள் இத னைத் தெரியப்படுத்துவோம். 19 ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலில் பாரிய எதிர்ப்புப் பேரணியொன்றையும் நடத்தவுள்ளோம். மக்களுடைய கருத்துக்கு எதிராக நடந்தால் அதற்கெதிராக நீதிமன்றத்தையும் நாடவுள்ளோம் எனவும் கிளீன் புத்தளம் அமைப்பின் அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிம் தெரிவித்தார்.

## பெற்றோர்... (01 ஆம் பக்கத் தொடர்)

வெளிநாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டு அமைச்சர் ஹறீன் பெர்னாண்டோவினால் இந்தத் திட்டம் அமுலுக்கு வருகிறது. ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனம் இதற்கு அனுசரணை வழங்குகிறது.

வைபர், வட்ஸ் அப் மூலமாக தமது பெற்றோருடன் தொடர்பு கொள்வதற்கு வசதியளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் எனச் சொல்லப்படுகிறது. இலவசமாக வைபை வழங்குவதற்குத் தகுதியான வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் தகவல்கள் தற்போது திரட்டப் படுகின்றன. இன்னும் இரண்டு மாதங்களில் இவர்களுக்கான ரௌட்டர் மற்றும் சிம் கார்டுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

## அடுத்த வருடம்... (01 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட இரண்டாவது வாசிப்பின் மீதான ஆறாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அருவாக்காட்டில் அமைக்கப்பட்டுள்ள குப்பை அகற்றும் தொகுதி சூழலுக்குத் தீங்கேற்படுத்தாத வகையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. கொழும்புக் குப்பை கொலன்னாவையில் குவிக்கப்பட்டு மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தியது. இதற்கு மாற்றமாக முறையான வெளியேற்றத்தின் ஊடாக கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து நிலையான தீர்வினை வழங்கியுள்ளோம். இதற்கென நிர்மாணிக்கப்படவுள்ள கழிவிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையங்களை இவ்வருட இறுதிக்குள் செயற்படுத்துவோம். இதற்கான நிலையமொன்று குளியாப்பிட்டியவிலும் அமையப்பெறவுள்ளது என்றும் அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்தார்.

## உயர் கல்வி... (01 ஆம் பக்கத் தொடர்)

இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் தொழில்நுட்ப கல்வி தொடர்பில் தேசிய டிப்ளோமாவை வழங்குவதற்காக இந்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள முக்கிய நிறுவனமாகும். பிரதேச மட்டத்தில் உள்ள 19 மத்திய நிலையங்களிலும் 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தேச ஹஜ் உம்ரா யாத்திரைச் சட்டம்

(ஹஜ் உம்ரா பயணங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டமொன்றை இயற்றுவதற்காக, முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சு பொதுமக்களிடம் இருந்து கருத்துக்களைக் கோரியிருந்தது. இது தொடர்பில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவை ஒரு நகல் சட்டத்தைத் தயாரித்து அமைச்சிடம் கையளித்தது. அதிலிருந்து சில விடயங்கள் தொகுக்கப்பட்டு இங்கு வழங்கப்பட்டுள்ளன)

### கமிட்டி

இலங்கை ஹஜ் மற்றும் உம்ரா கமிட்டி என்ற பெயரிலான கமிட்டி ஒன்று முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டு நியமிக்கப்பட வேண்டும். இந்தக் கமிட்டியானது அசையும் அசையாச் சொத்துக்களை வாங்கவும், விற்கவும், நம்பிக்கை நிதியமொன்றை தாபிக்கவும், ஒப்பந்தங்களில் ஈடுபடவும், வழக்குத் தொடரவும் தொடரப்படவும் சட்டத்தால் இயலுமாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். கமிட்டியின் தலைமை அலுவலகம் முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தில் இயங்க வேண்டும். பிராந்திய அலுவலகங்கள் உருவாக்கத் தேவைப்படுமிடத்து, குறித்த மாகாணத்தின் முதலமைச்சரின் அனுமதியுடன் உருவாக்கிக் கொள்ள முடியும்.

### கமிட்டியின் அங்கத்தவர்கள்

கமிட்டியின் அங்கத்தவர்களாக பின்வருவோர் அமைய முடியும்;

1. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி வழியாக
2. சபாநாயகரினால் நியமிக்கத்தக்கதான முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரொருவர் பதவி வழியாக. பாராளுமன்ற உறுப்புரிமை இழக்கப்படும் போது கமிட்டியில் இவரது அங்கத்துவம் இழக்கப்படுவதாக அமைய வேண்டும்.
3. ஹஜ் மற்றும் உம்ரா பயண முகவர்கள் சங்கத்தினால் (Haj and Umra Travel Operators Association) நியமிக்கப்படும் இருவர்.
4. பின்வரும் வகையினில் இருந்து அமைச்சரால் நியமிக்கப்படும் 07 பேர்

i) பொது நிர்வாகம், நிதி, கல்வி, கலாச்சாரம் மற்றும் சமூகப் பணிகளில் சிறந்த அறிவுள்ள 03 பேர். இவர்களில் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்.

ii) மார்க்க அறிவிலும் சட்டத்திலும் சிறந்த அறிவுள்ளவர்கள் இருவர்

iii) வைத்தியர்கள் இருவர். இவர்களில் ஒருவர் பெண்ணாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு கமிட்டிக்கான 11 பேரும் தெரிவு செய்யப்பட்டதும், வர்த்தமானியூடாக அமைச்சர் இவர்களை நியமனம் செய்ய வேண்டும். இந்தக் கமிட்டிக்கான பதவிக் காலம் இவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்களாக அமைதல் வேண்டும். அங்கத்தவர்களின் தவணைக் காலம் அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலில் அறிவிப்பதனூடாக மேலும் ஆறு மாதங்களுக்கோ அல்லது ஒரு வருடத்துக்குக் குறையாத காலத்துக்கோ நீடிக்கப்பட முடியும். நியமிக்கப்பட்டு 45 நாட்களுக்குள் அமைச்சர் முதலாவது கூட்டத்தைக் கூட்டி தலைவரை நியமிக்க வேண்டும். கமிட்டியின் அங்கத்தவர்கள் அனைவரும் அரசாங்க ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும்.



### கமிட்டியின் பணிகள்

1. யாத்திரிகள் சவூதி அரேபியாவில் தங்கி இருக்கும் காலங்களில் அவர்களது நலன் பேணுதல் தொடர்பிலும் வீசா விவகாரங்கள் தொடர்பிலும் சவூதி அரேபிய அரசுடன், அமைச்சரின் ஆலோசனையின் பேரில், உடனுக்குடன் தொடர்பாடல்களைப் பேணுதல்

2. ஹஜ் காலங்களில் மக்காவிலும் மதீனாவிலும் அலுவலகங்களையும் மருத்துவ நிலையங்களையும் ஸ்தாபிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை சவூதி அரசாங்கத்துடன் மேற்கொள்வது.

3. ஹஜ் மற்றும் உம்ரா பயண ஏற்பாட்டாளர்களைத் தெரிவு செய்தல், பதிவு செய்தல், கண்காணித்தல், ஒழுங்குபடுத்தல் என்பவற்றுக்கான முறையொன்றை வகுத்தல்

4. ஹஜ்ஜாஜிகளைத் தெரிவு செய்வதற்கான முறைமை ஒன்றையும், அவர்கள் சுலபமாகவும், குறைந்த செலவிலும், சௌகரியமாகவும் ஹஜ் செய்வதற்கான முறைமை ஒன்றையும் வகுத்தல்

5. ஹஜ்ஜாஜிகளுக்கான சலுகைக் கட்டணங்களைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் விமானப் போக்குவரத்து நிறுவனங்களுடன் பேரம் பேசுதல்

6. யாத்திரிகளுக்குத் தேவையான தகவல்களைத் தேடி வழங்குதலும், அவர்களுக்கான பயிற்சிகளை ஒழுங்கு செய்தலும்

7. வரும் போதும் போகும் போதும் இலங்கையிலிருந்து புறப்படும் இடத்தில் யாத்திரிகளுக்கு தடுப்பூசி, மருத்துவப் பரிசோதனை, பாஸ்களை விநியோகித்தல், பணம் மாற்றுதல், தேவையான விடயங்களில் அரச அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தல் போன்ற விடயங்களில் வழிகாட்டலும் உதவுதலும்

8. அல்லலுறும் வேளைகளில் நிவாரணம் அளித்தல்

9. இலங்கை முஸ்லிம்களின் பல்வேறு தெரிவுக் குழுக்களுக்கும் மானிய விலையைப் பெற்றுக் கொடுப்பதற்காக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு முறையொன்றை வகுத்துக் கொடுத்தல்

10. அமைச்சரின் அங்கீகாரத்துடன் வருடாந்த ஹஜ் திட்டத்தை இறுதிப்படுத்தலும், பயணம், தங்குதல் போன்ற ஒழுங்குகளைச் செய்தல் உள்ளிட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்தலும்

11. நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னரே வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்து அமைச்சருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெறுதல் (பக்.14)

---

# இலங்கை முஸ்லிம்கள் ஜெனீவா செல்கிறார்கள்?

• பி.எம். முஜீபுர் ரஹ்மான்

இலங்கை பல மொழி பேசுகின்ற, பல் இன சமூகத்தைக் கொண்ட நாடு. ஆங்கிலேயர் இலங்கையை கைப்பற்றிய காலம் முதல் காலத்துக்குக் காலம் பல இன முரண்பாடுகள் இங்கு தோன்றியுள்ளன. 1915ஆம் ஆண்டு முஸ்லிம் சிங்கள கலவரம், . சேகுவேரா போராட்டம் (ஜே.வி.பி.யினர்) அதேபோல் தமிழர் தனிநாட்டுக் கோரிக்கைப் போராட்டம் என பல போராட்டங்கள் நடந்தேறியுள்ளன.

அதேநேரம், தமிழீழத் தனிநாடு கோரிப் போராடிய விடுதலைப் புலிகள் வடகிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மை முஸ்லிம்களை கொன்று குவித்தார்கள். காத்தான்குடியில் இருந்து ஹஜ்ஜு சென்று திரும்பியவர்களின் படுகொலை (குருக்கள் மடம்), காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை, அளிஞ்சிப்பொத்தானை படுகொலை, ஏறாவூர்ப் படுகொலை, பல முஸ்லிம் கல்விமான்கள், செயற்பாட்டாளர்களின் படுகொலை என விதம் விதமாகக் கொன்று குவித்தார்கள்.

அதேபோல், தென்னிலங்கையில் ஒரு காலத்தில் புரட்சியின் மூலமே ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கில் சேகுவேரா போராட்டத்தில் ஈடுபட்ட சிங்கள இளைஞர்கள் (ஜே.வி.பி) பல முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள்.

இவைகளுக்கு அப்பால், தொடர்ச்சியாக தென்னிலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை முஸ்லிம்களின் உடமைகள் சிங்கள பேரினவாத சக்திகளினால் தீயிட்டு அழிக்கப்பட்டன (அளுத்கம, திகன). மதஸ்தலங்கள் கடுமையாகத் தாக்கப்பட்டன. தொழில்தளங்கள் எரிக்கப்பட்டன.

இவ்வாறு நாளாந்தம் வேதனைக்கு மேல் வேதனைகளை சந்தித்த இலங்கை முஸ்லிம்கள் தொடர்ந்தும் இலங்கைக்குள்ளேயே நீதியை வேண்டி நின்றார்கள். இலங்கை நீதித்துறை மீது அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் சர்வதேச நீதியையோ, கலப்பு நீதிமன்ற முறையையோ வேண்டி நிற்கவில்லை.

### நிலைமாறு காலமும் முஸ்லிம்களும்

ஆனால், நிலைமாறு கால நீதி என்பது பொறுப்புக்கூறல், நீதியை அடைதல், நஷ்டஈடு வழங்குதல், உத்தரவாதம் அளித்தல். பாதிக்கப்பட்ட தரப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்திய தரப்பு பொறுப்புக் கூறு வேண்டும்.

இந்நிலைமாறு நீதியை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தோடு 2015 செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்திற்கு இலங்கை அரசாங்கம் இணை அனுசரணை வழங்கியது. அதன்படி நிலைமாறு கால நீதியை ஸ்தாபிப்பதற்கென்று ஏறக்குறைய 25 பொறுப்புக்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. இப்பொறுப்புக்களில் பெரும்பாலானவற்றை 2017 ஆம் ஆண்டுவரை அரசாங்கம் நிறைவேற்றி இருக்கவில்லை.



மீண்டும் 2017 இல் மற்றொரு தீர்மானத்தின் மூலம் அரசாங்கத்திற்கு இரு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த அவகாசம் 2019 மார்ச் மாதத்தோடு முடிவடைகிறது. இக்காலப் பிரிவில் இலங்கை முஸ்லிம்களுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டன.

ஆனால், அரசாங்கத்தின் நிலைமாறு கால நீதி தொடர்பான எந்தத் திட்டத்திலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையர் என்ற வகையில் முஸ்லிம்கள் உள்ளடக்கப்படவில்லை. 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அவர்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவதாக இருந்தால், புத்தளம் மன்னார் வீதி திறக்கப்பட வேண்டும். இவ்வீதி குறித்து அரசாங்கத்திடம் எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை.

அதேபோல், 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் முஸ்லிம்கள் வாழ்ந்த காணிகள் இன்னும் அரச பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவைகள் விடுவிக்கப்பட வேண்டும். (சிலாபத்துறை கடற்படை முகாம் அமைந்துள்ள இடம்). மாறாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறுகிறார், ''போதைப் பொருட்கள் கடத்தல் நடைபெறுவதால், அக்கடற்படை முகாம்களை அகற்ற முடியாது'' என்று. மேலும், முல்லைத்தீவு, யாழ்ப்பாண முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்திற்கு அங்குள்ள நிர்வாகம் பல தடைகளை விதிக்கிறார்கள். அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு காணி பாரிய பிரச்சினையாக உள்ளது.

இவர்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற முறையில், நிலைமாறு கால நீதியில் என்ன தீர்வை அரசாங்கம் முன்வைத்துள்ளது. இவர்களுக்கான நஷ்டஈடு எவ்வாறு வழங்கப் போகிறது?

1988 - 1991 காலப் பகுதியில் பல முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளால் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள். முஸ்லிம்களில் காணாமல் போனவர்களின் குடும்பத்தில் உண்மையைக் கண்டறியும் விடயத்திற்கு அரசாங்கம் எவ்வாறு பதிலளிக்கப் போகிறது?

அதேபோல், கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு என்ன நஷ்டஈட்டை வழங்கப் போகிறது? அவர்களின் கொலையை யார் பொறுப்பேற்பது? புலிகள் செய்த கொலைகளை அரசாங்கம் பொறுப்பேற்குமா? அதேபோல் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றத்தை அரசாங்கம் பொறுப்பேற்று மன்னிப்புக் கோருமா? அல்லது தமிழ்த் தரப்பு இவைகளைப் பொறுப்பேற்குமா?

(குறிப்பு - தற்போது வடக்கு கிழக்குப் பகுதியில் நிருவாகிகளால் முஸ்லிம்களுக்கு நடக்கும் அநியாயம், பாகுபாடு, ஒடுக்குமுறை என்பவை இன்னுமொரு சோகக் கதை)

இவைகளுக்கு அப்பால், அளுத்கமை, காலி, திகன போன்ற பிரதேசங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொண்ட இனச் சுத்திகரிப்பு செயற்பாட்டை அரசாங்கம் எவ்வாறு நோக்குகிறது? அதனை எங்கு கொண்டு சொல்ல வேண்டும்? அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு என்ன?

### ஜெனீவாவும் முஸ்லிம்களும்

1915 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் இலங்கை சிறுபான்மை முஸ்லிம்கள் வடகிழக்கில் தமிழ்த் தரப்பினாலும், தென்னிலங்கையில் வாழுகின்ற சிறுபான்மை முஸ்லிம்கள் பேரினவாதிகளாலும் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், நிலைமாறு கால நீதியில் இவர்கள் எங்கும் உள்ளடக்கப்படவில்லை. இவர்களுக்கான நஷ்டஈடுகளும் வழங்கப்படவில்லை, பொறுப்புக் கூறுவதற்கும் யாரும் முன்வரவில்லை. அதேநேரம் உண்மையைக் கண்டறிவதற்கான எந்த வாய்ப்புக்களும் இல்லை. அனைவராலும் கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறார்கள். பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கமே மௌனமாக இருக்கின்றது.

நிலைமாறுகால நீதியின் மீதான அவநம்பிக்கையோடு அவர்கள் வாழ்கிறார்கள். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கையைக் கட்டி எழுப்பத் தவறியதற்கு யார் பொறுப்பு? இம் மக்களுக்காக இலங்கை அரசாங்கம் என்ன உத்தரவாதத்தை வழங்கப் போகிறது?

இலங்கை முஸ்லிம்கள் தங்களது பாதிப்புக்களை, ஒடுக்குமுறைகளை, இனத்துவ பாகுபாட்டை ஏன் சர்வதேசத்திடம் கொண்டு சொல்வதில்லை? அது மாத்திரமல்லாமல் புலிகளால் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகத்தில் ஏன் முறைப்பாடுகளை முன்வைப்பதில்லை? அதேபோல், எந்தப் பாதிப்பு ஏற்பட்டாலும் அரசாங்கத்திடம் நஷ்டஈடு கோருவதில்லை? அரசாங்கமும் இலங்கை முஸ்லிம்களை வேண்டா வெறுப்போடு நடத்துவதன் நோக்கம் என்ன?

இலங்கை முஸ்லிம்களே...! நீங்கள் அரசாங்கத்திற்கான வரிகள் கட்டுவதில்லையா? அதேபோல் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்பவற்றில் நீங்கள் வாக்களிப்பதில்லையா? நீங்கள் இந்நாட்டுப் பிரஜைகள் இல்லையா?. இந்நாட்டுப் பிரஜைகள் என்றால் இச்சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், நீதியை கோரவும் உங்களுக்கு சம உரிமை உண்டு என்பதை ஏன் உணர்வதில்லை?

இது விடயத்தில் திட்டமிடப்பட்ட ஓர் ஒழுங்கில் ஆதாரங்களைத் திரட்டி, அவற்றின் அடிப்படையில் நிலைமைகளைத் தெளிவுபடுத்தி கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்தினதும், சர்வதேசத்தினதும் ஆதரவைத் திரட்டுவது இலங்கை முஸ்லிம்களாகிய அனைவர் மீது கடமையாகும். பதிலாக எமது அரசியல் பிரதிநிதிகள் முன்னெடுப்பார்கள் என்று விட்டுவிட்டால் ஒரு போதும் இச்சமூகம் விடியலை நோக்கிப் பயணிக்காது. அவர்கள் தங்களது பாராளுமன்ற கதிரைகளை சூடேற்றுவதற்காகவே அனைத்து விடயங்களையும் முன்னெடுப்பார்கள். அரசியல் செயற்பாட்டு நோக்கத்திலேயே நடவடிக்கைகள் நகர்த்தப்படும் என்பதை பல முறை சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

எனவே, இத்தகைய பொறுப்பற்ற விதத்தில் இலங்கை முஸ்லிம் சமூகம் இருப்பதில் இருந்து விடுபடும் வரையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியும் நியாயமும் நஷ்டஈடுகளும் கிடைக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## மக்களின் நீதிக்கான போராட்டம்

புத்தளம் அறுவாக்காடு பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்கான ஏற்பாடுகள் இறுதித் தறுவாயை அடைந்திருக்கின்றன. தமது பிரதேசத்தின் வாழும் சூழலையும் வாழ்வாதாரங்களையும் பாதுகாக்கும் நோக்கில் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்கள் வியர்த்தமாகி வருகின்றன.

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் அங்கு மக்களின் நலன் தான் முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கு நலவு பயக்காத எந்தத் திட்டமும் வீணானவை. அப்படியிருக்கையில் மக்களின் நலனுக்கு எதிராக அரசாங்கம் செயற்திட்டங்களைக் கொண்டுவருவதில் நிச்சயமாக அரசியல்வாதிகளுக்கன்றி மக்களுக்கு எந்த நன்மையும் விளையப்போவதில்லை.

புத்தளத்தில் குப்பை கொட்டுவது தொடர்பில் அரசாங்கம் எந்த நியாயங்களைச் சொன்னாலும் மக்களின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். புத்தளம் பகுதியில் இருக்கின்ற மூவின மக்களும், பிரதேச சபைகளும் இந்தத் திட்டத்தை எதிர்க்கின்றார்கள் என்றால் அதில் நியாயம் இல்லாமல் இருக்க முடியாது. எனவே அரசாங்கம் இந்தத் திட்டத்தை அமுலபடுத்த முன்னர் இன்னும் பல தடவைகள் யோசிப்பது நல்லது.

சீமெந்துத் தொழிற்சாலை அமைத்த போதும், அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதும் மக்களின் எதிர்ப்பை அரசாங்கம் சட்டை செய்யவில்லை. இன்று இதன் காரணமாக மக்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். மீண்டும் அதே பிரதேச மக்களையே இக்கட்டில் தள்ளிவிடாமல் அரசாங்கம் மக்களைப் பாதுகாக்க வேண்டும். உமா ஓயா திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதும் மக்கள் எதிர்த்து நின்றார்கள். அரசாங்கம் அதனைப் பொருட்படுத்தாமல் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இன்று பல கோடிகள் நஷ்டத்துடன் அரசாங்கம் குறித்த திட்டத்தில் இருந்து பின்வாங்கியிருக்கிறது.

எனவே மக்களின் குரலுக்கு அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொள்வது அராஜகத்தை நோக்கிய பயணத்தையே குறித்துக் காட்டுகிறது. முன்னைய ஆட்சியில் தண்ணீர் கேட்டுப் போராடிய ரதுபஸ்வெல மக்களின் போராட்டத்தை நசுக்கியதையெல்லாம் காரணம் காட்டியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. மீண்டும் இந்த அரசாங்கமும் மக்களின் குரல்வளையை நசுக்குவதாக இருந்தால் இந்த நாட்டில் அநீதியைத் தவிர வேறு விமோசனமில்லை என்றே கருத வேண்டியிருக்கிறது.

அனைத்தையும் இலாப நஷ்டக் கணக்கில் பார்ப்பதால் தான் இந்த நிலை ஏற்படுகிறது. அரசியல்வாதிகளுக்கு மக்களின் நலனை விட தமது இலாபங்கள் முக்கியமாகின்ற பொழுது அங்கு மனிதப் பெறுமானங்கள் பெறுமதியற்றதாகி விடுகின்றன. எனவே இந்த விடயத்தில் மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்காக மக்கள் அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்.

அவர்களது போராட்டம் தேசிய நலனுக்கு எதிரானது அல்ல என்றிருக்கும் பட்சத்தில் அரசியல்வாதிகளும் ஆட்சியாளர்களும் மக்களின் பக்கம் தலைசாய்ப்பது தான் ஜனநாயகம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சியாளர்களின் இது போன்ற செய்கைகளினால் மக்கள் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்க வேண்டிய நிலை வந்தால் மக்கள் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பதனை இந்த அரசியல்வாதிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மீத்தொட்டுமுல்ல குப்பை மேட்டுச் சரிவு அனர்த்தத்தின் பொழுதிலிருந்தே கழிவுகளை முகாமை செய்வதற்கான தேவை பற்றி பலரும் பேசி வந்திருக்கின்றனர். இதற்கென பலநாடுகளில் இருந்தும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டதோடு, இந்தப் பெயரில் பல வெளிநாட்டுச் சுற்றுலாக்களும் நடந்தேறின. ஆனாலும் நிலையானதொரு திட்டம் இந்த விடயத்தில் இதுவரை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அனைத்துக்கும் நிலையான திட்டங்கள் பற்றிப் பேசும் அரசு குப்பை விடயத்தில் நிலையான திட்டமொன்றை வகுக்காமல் இருப்பது விசனத்துக்குரியது.

புத்தளம் குப்பை விவகாரம் மக்களின் நலனுடன் நேரடியாகத் தொடர்புபடுகின்ற விடயம் என்ற வகையில் அரசாங்கம் இந்த விடயத்தை நேர்மையாக அணுகுவது தான் நாட்டு மக்களுக்கு அரசாங்கம் மீதும் நாட்டின் மீதும் பற்றினை வளர்ப்பதற்கான வழியாக அமைய முடியும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை


நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். [illegible]

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka
[illegible] 011 5353635 [illegible] 011 5335500 [illegible] pccsl@pccsl.lk www.pccsl.lk

# வரவு செலவுத் திட்டம் 2019:
# பொதுச் சொத்தை விரயமாக்கும் மற்றுமொரு திட்டம்

• குசல் பெரேரா

ஐக்கிய தேசியக் முன்னணி அரசாங்கத்தின் நடப்பு ஆண்டுக்கான பாதீடு (வரவு செலவுத் திட்டம்) நிதியமைச்சர் மங்கள சமரவீரவினால் கடந்த 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. ஐ.தே.க.வை முதன்மையாகக் கொண்ட நல்லாட்சி அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு-செலவுத் திட்டமாகவும் மங்கள சமரவீரவின் 2ஆவது வரவு செலவுத் திட்டமாகவும் இது அமைந்திருந்தது.




வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மக்களுடைய பிரச்சினைகள் எவ்வாறு தீர்க்கப்படுகிறது என்றே எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் எமது நாட்டில் முன்வைக்கப்படுகின்ற பட்ஜெட்டில் நாட்டின் பிரச்சினைகளுக்கான தீர்வு வழங்கப்படுவதில்லை. பட்ஜெட்டின் மூலம் உண்மையில் செய்ய வேண்டியது என்னவெனில், அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்காக வேண்டி சிபாரிசு செய்யும் வேலைத் திட்டங்களுக்கு வருடாந்தம் நிதி ஒதுக்கும் முறை தொடர்பிலான விபரங்களை முன்வைத்து அதற்கான நாடாளுமன்ற அனுமதியைப் பெற்றுக் கொள்வதாகும்.

ஆனால் எமது வரவு செலவுத் திட்டங்களில் அப்படியான விடயங்களைக் காண முடியாமல் உள்ளது. அரசாங்கத்திடம் தேசிய அபிவிருத்தித் திட்டமொன்று இல்லாமையே அதற்குரிய காரணமாகும். எனவே அபிவிருத்தித் திட்டமொன்று இல்லாத அரசாங்கத்தின் தேசிய வரவு செலவுத் திட்டத்தின் மூலம் எல்லாவற்றுக்குமான பதிலை எதிர்பார்க்கின்ற, நாட்டின் வரவு செலவுத் திட்டம் என்பது கடன் பெற்றேனும் வருடாந்தம் பொது நிதியை செலவு செய்யும் விதத்தை முன்வைக்கும் ஏடாக மாத்திரமே காணப்படுகிறது.

தேர்தல் நெருங்கும் சந்தர்ப்பத்தில் இன்று இது தேர்தலுக்காக வேண்டி சமர்ப்பிக்கப்படும் வாக்குறுதிப் பொட்டலமாக மாறியிருக்கிறது. இம்முறை மங்கள சமவீரவினால் முன்வைக்கப்பட்டிருக்கும் பட்ஜெட்டும் தேர்தலுக்கான பட்ஜெட்டாகவே வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

திறந்த சந்தைப் பொருளாதாரத்தை இன்னும் விரிவுபடுத்தி திறக்கும் வரை மக்கள் காத்துக் கொண்டுள்ளனர் என நிதியமைச்சர் நினைக்கிறார். இதனால் இவர் மக்களுக்கு வழங்கும் முதலாவது வாக்குறுதியாக அதனை நிறைவேற்றுவேன் எனக் குறிப்பிட்டுள்ளார். இத்திறந்த சந்தைப் பொருளாதாரத்தை மென்மேலும் திறந்துவிடுவதே பிரதமரின் தேவையாகவும் இருக்கின்றது. வரவு-செலவுத் திட்டத்திற்கு வெளியாலேயே இவ்விடயம் கூடுதலாக மேற்கொள்ளப்படுகின்றது.

கட்சியின் தேர்தல் பிரச்சார நடவடிக்கையை அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டமாக பொது நிதியில் மேற்கொள்வதே இவர்களின் தேவைப்பாடாக இருக்கிறது. நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அனைத்தும் இப்படியான நகர்வுகளையே கோடிட்டுக் காட்டுகின்றன.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சகல பௌத்த விகாரைகளுக்கும் சூரிய மின்சக்தி தொழில்நுட்பத்தை பெற்றுக் கொடுப்பதற்காக வேண்டி தலா 03 லட்சம் ரூபா வீதம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர சகல மத வழிபாட்டுத்தளங்களினதும் பராமரிப்புக்காக வேண்டி ரூபா 10 லட்சம் வீதம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த வாக்குகளைப் பெறுவதற்காக வேண்டி தேரர்களை விழிக்கும் திட்டமே இதுவாகும்.

இதனைச் சமநிலைப்படுத்தும் வகையில் வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு அவர்களது முறைப்பாடுகளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 6000 ரூபா வழங்குவதற்கும் நஷ்டஈடு வழங்குவதற்கான அலுவலகமொன்றையும் அமைத்து, அது தொடர்பில் தெளிவூட்டுவதற்காக வேண்டி 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்ஜெட்டில் இவ்வாறு பொது நிதியை அன்பளிக்கும் ஏராளமான முன்மொழிவுகள் உள்ளன.

[illegible] பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு குடிநீர் மற்றும் சுத்தமான கழிப்பறை வசதிகள் இல்லாத நிலையிலும் கூட 10 லட்சம் மக்களுக்கு கழிப்பறை வசதிகளை செய்துகொடுப்பதற்காக வேண்டி இம்முறை பட்ஜெட்டில் 400 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர இளைஞர்களைக் கவர்வதற்காக வேண்டி புதிதாகத் திருமணமான தம்பதிகளுக்கு 06 வீத வட்டியில் 25 வருடங்களில் செலுத்தி முடிக்கும் முறையில் வீடமைப்புக் கடன் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யார் எவர் எப்படித் திட்டமிட்டார்கள்? என்றறியாத 'சூகித புரவர' நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேண்டி 3000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் மூலம் 2016 ஆம் ஆண்டில் 160 மில்லியன் ரூபா நிதி செலவு செய்யப்பட்டிருப்பதாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் என்ன நடந்தது என்பதற்கான பதிவுகள் எதுவும் இல்லை.

எவ்வித நகரத் திட்டமிடல்களும் இன்றி வகைதொகையாக எல்லா இடங்களிலும் தொடர்மாடிக் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற, போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வில்லாத, கொழும்பு நகரத்தை அலங்கரிப்பதற்கு 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர வடகிழக்கில் கருப்பட்டி மற்றும் கள்ளு போத்தலில் அடைக்கும் திட்டமிடப்படாத தொழிற்றுறையொன்றுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தோடு எங்கு செயற்பட்டு வருகின்றார்கள் என்றறியாத மாணவர் மற்றும் சமுதாய அமைப்புக்களுக்காக வேண்டி நிலைபேறான சூழல் என்னும் பெயரில் 2.5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்திற்கு 'கொமாண்டோ' கொடுப்பனவாக 5000 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கான வீடமைப்புக் கொடுப்பனவும் 30 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இவை தவிர அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜூலை முதல் 2500 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சகல விடயங்களும் 40 வருடங்களாக வெற்றியளிக்காத, மிகவும் மோசடியான திறந்த சந்தைப் பொருளாதாரத்துடன் போராடி வந்த நுகர்வோருக்காக வேண்டியே ஒன்று குவிக்கப்பட்டிருக்கிறது. இப்படியான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் இவர்களுக்கு இதுவரை மீதமானது என்ன? 1978 இல் 1136 மில்லியன் டொலராகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2018 இன் இரண்டாவது பருவ காலத்தில் 53,487.3 மில்லியன் டொலர்களாக அதிகரித்திருக்கிறது. இதனோடு சேர்ந்ததாக இக்காலப் பகுதியில் சமூக ஒழுங்கமைப்புகள், ஒழுக்கம், பண்பாடுகள் உள்ளிட்ட சகலதும் சிதைவடைந்துள்ளன. கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளும் பாரிய நெருக்கடியாக மாறியுள்ளது. சட்ட அமுலாக்கல் மற்றும் நீதித்துறை தொடர்பில் காணப்பட்ட சமூக அங்கீகாரம், நம்பிக்கை அருகிப்போயுள்ளது. அரச சேவையும் அதிக பட்சம் சிதைந்து போயுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளில் மாத்திரம் தங்கியிருந்த நிலையில் அவையனைத்தும் புதைகுழியில் விழுந்தவுடன் எமக்குத் தேவையான இறக்குமதிச் செலவையேனும் ஈட்டிக்கொள்ள முடியாமல் ஏற்றுமதி உற்பத்தியுடன் நாம் இந்த திறந்த சந்தையில் கொழும்பு நகரத்தை ஹெரோயின் கிடங்காக மாற்றியுள்ளோம்.

இப்புது வருட ஆரம்பத்தில் பொலிஸ்மா அதிபர் பொலிஸ் அதிகாரிகளுக்கு மத்தியில் உரையாற்றும் பொழுது 2018 ஆம் ஆண்டில் பொலிஸார் 744 கிலோ ஹெரோயினை கைப்பற்றியதாகத் தெரிவித்திருந்தார். அதன் பெறுமதி 1190 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தது. அதுபோன்று 2017ஆம் ஆண்டில் 314 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இவ்வருடத்தின் முதல் இரு மாதங்களிலும் 520 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்திருந்தார். இது பெப்ரவரி 23ஆம் திகதி இதுவரை இலங்கையில் கைப்பற்றப்பட்ட அதிகூடிய ஹெரோயின் தொகையான 1475 கிலோவுக்கு மேலதிகமான தொகையாகும். ஆகவே மொத்தமாக 3053 கிலோ ஹெரோயின் போதைப் பொருள் தற்பொழுது எங்கு உள்ளது? இக்கேள்விக்கான பதிலைத் தேடும் பட்சத்தில் நாம் எவ்வளவு கொடிய மோசமான செயற்திறனற்ற சிக்கலான அரச கட்டமைப்புக்குள் உள்ளோம் என்பதைப் புரிந்துகொள்வது கடினமானதாக இருக்காது.

திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் மூலம் கொழும்பு மற்றும் அதனை அண்டிய வகையில் மிகப்பெரும் நுகர்வுச் சந்தை உருவாக்கப்பட்டுள்ளது. கிராமிய சமூகம் இதிலிருந்து முற்றாகவே கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறு விசாலமடையும் கொழும்பு நகரத்தின் சேவை வழங்கலுக்காக வேண்டியே அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. கிராமிய சமூகம் தொடர்பில் அவ்வாறானதொரு பொறுப்பை அரசாங்கம் வகிப்பதில்லை. ஆதலால், கிராமிய சமூகத்திலிருந்து அரச சேவைக்கு சொற்ப இடமே வழங்கப்பட்டு வருகின்றது. கிராமிய சமுதாயத்திற்கு தங்களது உரிமைகளுக்காக வேண்டி மனுக்கொடுப்பதற்கும் பணத்தை செலவழித்து கொழும்பு வரவேண்டியிருக்கிறது. இவ்வாறு நகரத்தையும் கிராமத்தையும் பிரித்து வைப்பது திறந்த சந்தைப் பொருளாதாரத்தின் கொள்கை சார் அரசியலாகும்.

இவ்வரசாங்கத்தின் கல்விக் கொள்கையை நோக்கும் போது நகரை மையப்படுத்திய அவர்களது அரசியலை புரிந்துகொள்ள முடிகிறது. பாடசாலை மாணவர்களுக்கு 'டெப்' களை பெற்றுக்கொடுப்பதற்கான விலைமனுக்கோரலில் இடம்பெற்றிருக்கும் மிகப்பெரும் ஊழல் குற்றச்சாட்டை ஒருபுறத்தில் வைத்தாலும் நவீன தொழில்நுட்பம் கொழும்புக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர ஆண்கள் பாடசாலையில் வகுப்புக்களுக்கு இடையிலான முழுமையான ஒருங்கிணைந்த 'ஸ்மார்ட்' வகுப்பறை உள்ளது. இதுவே இலங்கையில் இருக்கும் ஒரேயொரு பாடசாலை என பொருளாதார சீர்திருத்தம் மற்றும் மக்கள் வளப் பகிர்வு அமைச்சர் ஹர்ஷ டி சில்வா பெருமிதத்தோடு பேசுகிறார். இந்நாட்டிலுள்ள 10,000 பாடசாலைகளில் பெரும்பாலான கிராமப் புற பாடசாலைகள் குடிநீரில்லாமல், மாணவ மாணவியர்களுக்கு முறையான கழிப்பறை வசதிகளில்லாமல், சரியான வகுப்பறைகள் இல்லாமல், ஆசிரியர் வளமில்லாமல் காணப்படுகின்றமை குறித்து அவர் எப்படி பெருமையோடு பேசுவார்? கிராமத்திலுள்ள இவையொன்றும் நகர்புற திறந்த பொருளாதார சந்தைக்குள் தொடர்புறுவதில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை நிதியமைச்சர் மங்கள சமரவீர 2019ஆம் ஆண்டிற்காக சமர்ப்பித்த வரவுசெலவு திட்டத்தில் இவ்வகையில் தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்கு எத்தகைய தீர்வுத் திட்டங்களை முன்வைத்திருக்கின்றார்? சிதைந்து போகும் தேசத்தை மீளக் கட்டியெழுப்ப, கைவிடப்பட்டுள்ள கிராமிய சமூகத்தின் பெரும்பாலானவர்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளின் தொழில்வாய்ப்பில் கொண்டுள்ள எதிர்பார்ப்புக்களுக்குப் பதிலாக தமது கிராமத்தில் இயல்பு வாழ்க்கைக்கு இடமளிப்பதற்கு, இந்தியா, சீனா, பங்களாதேஷ், மியன்மார் போன்ற நாடுகளிலிருந்து அரை அடிமைத் தொழிலாளிகளை கொண்டுவருவதற்கு எல்லா வகையிலும் வரிச்சலுகை, உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொடுக்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு பதிலாக இந்நாட்டில் இளைஞர்களுக்கு தமது அடிப்படை உரிமைகளோடு தொழில்புரிவதற்கும் பாரியளவிலான ஊழல் மோசடிகளின்றிய பயணத்தை மேற்கொள்வதற்கு 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஆரம்ப கட்ட

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அபூ அர்ஸலான்

மைத்ரிபால சிறிசேன இன்று சுதந்திரக் கட்சியின் தீவிர உறுப்பினர், அதன் தலைவர். கட்சியின் அதீத விசுவாசி. பசில் ராஜபக்ஷ அணியினால் புதிதாக உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுன கட்சியுடனும் ஜனாதிபதி சிறிசேன வலுவான உறவுகளை வைத்துள்ளார். அதனால்தான் கோத்தா மற்றும் பசிலுடன் அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்கிறார்.

அடுத்த முறை ஜனாதிபதித் தேர்தலில் குதித்து நிறைவேற்று அதிகார முறையின் தெவிட்டாத கனிகளை நீடித்து ருசிப்பதற்கு சிறிசேனவுக்கு மெதுமெதுவாக ஆசை வந்துவிட்டது. ஆனால் அதற்கு குறுக்கே நிற்கும் கோத்தாவின் வருகையை எதிர்கொள்வது எவ்வாறு என்ற திண்டாட்டத்தில் ஜனாதிபதி திணறி நிற்கிறார்.

ராஜபக்ஷ குடும்பத்தை வெளிப்படையில் பகைத்துக் கொள்ளவும் முடியாது, சிறி லங்கா சுதந்திரக் கட்சியை புறக்கணிக்கவும் கூடாது. ஆனால், பொதுஜன பெரமுனவை ஆதரிக்கவும் வேண்டும். கோத்தாவை எதிர்க்க முடியாது; ஆனால் இன்னொரு முறை தானும் தேர்தலில்

மக்களோ மக்கள் நலன்களோ முக்கியமானதல்ல என்பதை அடிக்கொரு முறை நிறுவிவருகின்றனர். குறிப்பாக, ஜனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கும் இடையில் கடும் முரண்பாடு தோன்றியுள்ளது. ஸ்திரமற்ற அரசாங்கமொன்றே நாட்டில் நீடிப்பதாகவும் பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடிகளிலிருந்து நாட்டை மீட்டும் அரசாங்கமொன்றே இன்றைய தேவை என்றும் ஜனாதிபதி சிறிசேன சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

சுதந்திரக் கட்சியின் மகளிர் அணி ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின வைபவத்தில் கலந்துகொண்டபோதே சிறிசேன இவ்வாறு குறிப்பிட்டார். அவரது கருத்தில், ஸ்திரமான அரசாங்கமொன்று ஆட்சியில் இல்லை. பொருளாதார அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் நிலையிலும் அரசாங்கம் இல்லை.

கடந்த பெப்ரவரியில் 71 ஆவது சுதந்திர தின நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைக் கடுமையாகக் குற்றம் சாட்டியதோடு, நாட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செய்தி எதனையும் முன்வைக்கவில்லை. ஜனாதிபதி பிரதம அதிதியாகக்



வில்லை. மறுதலையாக முரண்பாடு வலுத்துச் செல்வதையே தற்போதைய சூழ்நிலை உணர்த்துகின்றது.

அதிகாரப் பிரயோகத்தின்போது ஜனாதிபதி நாட்டின் அரசியல் பாரம்பரியங்களை மீறிச் செயல்படுகிறார் என்பது அப்பட்டமாகத் தென்படுகின்றது. ஜனாதிபதியின் பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் பயணங்களின்போது அமைச்சரல்லாத, தனது கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி அழைத்துச் சென்றிருந்தார். அங்கு நாட்டின் பொருளாதாரத் துறை சார்ந்த முக்கிய பேச்சுவார்த்தைகளில் அவர்களை ஈடுபடுத்தினார்.

அப்பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம்பெறுகின்றவர்களோ ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களோ அல்லர். இலங்கையின் அரசியல் பாரம்பரியங்களின்படி இது மிக அசாதாரணமானது. தேசிய முடிவுகளை எடுப்பதற்கு தனக்கும் அதிகாரம் உள்ளது என்ற ஒரு வகை தாழ்வு மனப்பான்மையில் ஜனாதிபதி நடந்துகொள்ளும் முறை நாட்டின் அரசியல் பாரம்பரியங்களை மீறுவதாக உள்ளது.

சமீப காலங்களில் அதிரடியாக பல

# துருவ மயமாகும் அரசாங்கம் திரிசங்கு நிலையில் சிவில் சமூகம்

இறங்க வேண்டும். இது போன்ற ஒன்றுக்கொன்று முரண்பட்ட முனைகளில் திக்குத் தெரியாத திரிசங்கு நிலைக்குள் மாட்டியுள்ளார் ஜனாதிபதி.

மஹிந்தவுடன் ஆப்ப தின்ற கையோடு அதிரடியாக ரணிலுடன் கைகோர்த்து ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததால் சிறிசேன ஜனாதிபதியானார். அப்போது அவருக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒரு சிம்ம சொற்பணம். தனது தனிப்பட்ட அரசியல் இலாபத்திற்காக நீண்டகாலமாக பொதுச் செயலாளராகத் திகழ்ந்த சுதந்திரக் கட்சியைத் தூக்கி எறிந்து விட்டு ரணிலுடன் சேர்ந்தமை மஹிந்தவையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இத்தகைய கட்சித் தாவலுக்கு அவர் முன்வைத்த நியாயம் தேச நலன் என்பதுதான்.


திருட்டுக் கும்பலின் ஆட்சியைக் கவிழ்த்து 100 நாட்களுக்குள் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பேன் என்ற வீர முழக்கத்தோடு 2015 இல் சிறிசேன அதிகாரத்தைக் கைப்பற்றினார். 2017 இல் ''எனது வாள் ஊழல் மோசடிக்காரர்களை விட்டுவைக்காது'' என்றெல்லாம் அவர் அதிதியாகக் கலந்துகொண்ட விழா மேடைகளில் கர்ச்சித்தார்.

நல்லாட்சி அரசாங்கம் உருவாகி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில், அவருக்கு மீண்டும் பழைய நண்பர்களுடனும் மஹிந்த குடும்பத்துடனும் உறவுகள் ஏற்பட்டன. சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற கையோடு இலங்கை மக்களின் ஜனாதிபதி என்பதைக் காட்டிலும் சுதந்திரக் கட்சியின் பொறுப்புள்ள தலைவராகவே சிறிசேன செயற்பட ஆரம்பித்தார்.

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைப்பதுபோல் 2018 ஒக்டோபரில் அதிரடியாக மஹிந்தவை பிரதமராக்கி மாபெரும் புரட்சியொன்றை ஏற்படுத்தினார். நீதித் துறை மைத்திரியின் அரசியல் அதிகார விளையாட்டை தனது துணிகரமான தீர்ப்பின் மூலம் கேள்விக்குள்ளாக்கியது. மைத்ரி மூக்குடைந்து போனார்.

எந்த நிறைவேற்று அதிகார முறையை 100 நாட்களுக்குள் ஒழிப்பேன் என்ற கோசத்தோடு அவர் அதிகாரத்தைக் கையேற்றாரோ அதே நிறைவேற்று அதிகாரத்தின் சொகுசை அவர் துஷ்பிரயோகம் செய்தார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் நிரூபணமாகியது.

இன்று ரணிலுக்கும் மைத்ரிக்கும் எதிர்க்கட்சித் தலைவராக வந்திருக்கும் ராஜபக்ஷவுக்கும் அவர்களது கட்சி சார்ந்த அரசியல்வாதிகளுக்கும் நாடோ



கலந்துகொள்ளும் அனைத்துக் கூட்டங்களிலும் அவருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கும் இடையில் நிலவும் முரண்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றார். மட்டுமன்றி, மஹிந்தவின் ஆட்சியே இலங்கைக்கு மீளவும் தேவை என்பதை மறைமுகமாக வலியுறுத்தி வருகின்றார்.

கடந்த டிசம்பரில் மிகப் பெரும் அரசியல் அமளி துமளிகளுக்குப் பின்னர் அமைச்சரவையைக் கைப்பற்றிய ஐ.தே.க.வுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் புகைந்துகொண்டிருந்த உள்முரண்பாடு தற்போது பற்றியெரியத் தொடங்கியுள்ளது. ஜெனீவாவின் மனித உரிமைப் பேரவை அமர்வுகளையும் பிரிட்டன் அதில் கொண்டு வரப் போகின்ற தீர்மானத்தையும் அடுத்து இவ் முரண்பாடு வெடித்துச் சிதறும் ஆபத்து உள்ளதென்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

இம்மாதம் 20 ஆம் திகதி இலங்கை தொடர்பான விவாதம் நடைபெறவுள்ளது. இலங்கை குறித்து புதிய தீர்மானமொன்றை பிரிட்டிஷ் கொண்டுவரவுள்ளது. இந்நிலையிலேயே ஜனாதிபதி - அரசாங்க முரண்பாடு வலுத்து வருகின்றது.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, ஜெனீவாவுக்கு இம்முறை மனித உரிமை பேரவை விவாதங்களில் கலந்துகொள்ள அரசாங்கப் பிரதிநிதிகள் எவரையும் அனுப்புவதில்லை என்றும் எந்தத் தீர்மானம் வெளிவந்தாலும் அதற்கு இணை அனுசரணைவழங்குவது என்றும் தமது அமைச்சு தீர்மானித்துள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். எனினும் இதற்கு முற்றியும் ஒரு முரண்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதி

மைத்ரி மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கிற்குப் புதிதாக ஆளுநராக நியமிக்கப்பட்ட சுரேன் ராகவன், சரத் அமுனுகம, மஹிந்த சமரசிங்க போன்றோரை ஜனாதிபதி சார்பாக ஜெனீவா கூட்டத் தொடருக்கு அனுப்பவுள்ளதாக சிறிசேன கூறியுள்ளார்.

போர் முடிவுற்று ஒரு தசாப் தம் கடந்து விட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை பழைய காயங்களைக் கிளறி விட்டு இலங்கை அரசுக்கு எந்த அழுத்தத்தையும் தரக் கூடாது. காலக்கெடு எதனையும் விதிக்கக் கூடாது. தீர்மானங்களை நிறைவேற்றி அரசின் மீது வற்புறுத்தலைத் திணிக்கக் கூடாது. இதுதான் ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது.

ஐ.தே.க. அரசாங்கத்தில் தலையீடு செய்வதற்கான தற்துணிவு அதிகாரம் தனக்குள்ளது என்பதை அவ்வப்போது வெளிப்படுத்தி வரும் சிறிசேன, இலங்கை இராணுவத்தை போர்க் குற்றங்களிலிருந்து விடுவிக்கும் இரட்சகராகவும் தன்னை ஒரு தேசபக்தராகவும் இலங்கையர்களுக்குக் காண்பிக்கவே இவ்வாறான ஓர் அறிக்கை யுத்தம் என ஓர் ஆங்கிலப் பத்திரிகை எழுதியுள்ளது. சிலவேளை 2020 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிறுத்தி இத்தகைய தேசபக்த அறிக்கைகளை அவர் விடுவது போலவும் உள்ளன.

இதற்கிடையில் சுரேன் ராகவனை வடக்கு ஆளுநராக நியமித்து, பின்னர் அவரை ஜெனீவாவுக்கு அனுப்பப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளமை பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. போர்க் குற்றங்கள் என எதுவும் இங்கு இடம்பெறவில்லை. வடகிழக்குத் தமிழர்களுக்கு எவ்விதப் பிரச்சினையும் இல்லை. மக்கள் இயல்பு வாழ்வை அனுபவிக்கின்றனர். நிலைமை இவ்வாறிருக்க இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணை தொடர்பான தீர்மானம் அவசியமற்றது என்பதை ஐ.நா. வுக்குத் தெரிவிக்க ஒரு தமிழ் மகன் ஜனாதிபதியால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதுவே பெரும்பாலான அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

வட மாகாண ஆளுநர் பதவிக்காக முன்னை நாள் ஆளுநர் ரெஜினோல்ட் குரே மற்றும் வேறு பல தமிழ் பிரபலங்கள் பல்வேறு வகையில் முயற்சித்த போதும் எதிர்பாராத வகையில் சுரேன் ராகவன் எனப்படும் தமிழ் பேசும் ஒரு கிறிஸ்தவர் வடக்கு ஆளுநராக நியமிக் [illegible]

ஜெனீவாவுக்குச் சென்று அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் தமிழ் சமூகத்தின் பிரதிநிதியாகவும் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றத் தேவையில்லை என வலியுறுத்தப் போகிறார்.

சுரேன் ராகவன் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆட்சியிலிருந்தே ஜனாதிபதி ஊடகப் பிரிவை நிருவகிக்கும் முக்கிய பதவிகளில் இருந்தவர். தற்போதைய ஜனாதிபதி சிறிசேனவின் ஊடகப் பிரிவை கவனித்து வந்தவர். அரசாங்க உயர் அதிகாரியான இவர், இப்போது ஐ.நா.வின் தலையீட்டை எதிர்ப்பதற்காக களமிறக்கப் படவுள்ளார்.

ஐ.தே.க. அரசாங்கம் ஐ.நா. பேரவை தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கத் தயார் நிலையில் உள்ள அதே நேரம், ஜனாதிபதி மைத்ரியோ எத்த கைய தீர்மானமும் நிறைவேற்றப்பட வேண்டிய அவசியமில்லை என்ற தோரணையில், அவர் சார்பாக ஒரு குழுவை ஜெனீவாவுக்கு அனுப்பத் தயாராகி வருகிறார். இது இலங்கை உள்ளக முரண்பாட்டை சர்வதேச மட்டத்திற்கு நகர்த்தும் ஒரு மோசமான ராஜதந்திரமாகும்.

இலங்கையின் எதிர்கால அரசியலையும் சர்வதேச சமூகத்தின் ஆதரவுத் தளத்தையும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இந்த அணுகுமுறை பாதிப்படையச் செய்யும் என்று கருதப்படுகின்றது.

இலங்கையில் ஜனாதிபதியின் ஆட்சியும் அதிகாரப் பிரயோகங்களும் தனியாக நடைபெறுவதோடு, ஐ.தே.க. அரசாங்கத்தின் தீர்மானங்களும் நடைமுறைகளும் இன்னொரு துருவத்தில் இடம்பெறுகின்றது. நாட்டுக்குள் இரண்டு முரண்பட்ட அதிகார மையங்கள் செயல்படுவதாக சிவில் சமூகம் கவலைகொண்டுள்ளது. அமைச்சரவைக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான அதிகாரக் கயிறிழுப்பு இறுதியில் இலங்கை மக்களையும் நாட்டின் பொருளாதாரத்தையுமே கடுமையாகப் பாதிக்கப் போகின்றது. ஏலவே, இம்முரண்பாட்டின் பாதிப்பை நாடு அனுபவித்து வருகின்றது.

அடுத்த ஆண்டில் இடம்பெறும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் வரை இம்முரண்பாடுகள் கூர்மையடைந்து செல்லுமாயின், அதற்குரிய அநியாய விலையை சிவில் சமூகமே செலுத்த வேண்டியிருக்கும். 2018 ஒக்டோபருக்குப் பின்னர் ரணில் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு தணிந்ததற்கான எந்த அடையாளமும் தென்பட



வர்த்தமானி அறிவித்தல்களையும் ஜனாதிபதி விடுத்து வருகின்றார். ஒரு நாட்டின் அரசியல் தீர்மானங்கள் முறையாக மேற்கொள்ளப்படுவதற்கும் அவற்றைச் சரியாக நிறைவேற்றுவதற்கும் அரசியல் ஸ்திரப்பாடு இன்றியமையாதது. ஆட்சியாளர்கள் துருவமயப்பட்டு முரண்பட்ட அணுகுமுறைகளைக் கையாள்வது நாட்டின் அரசியல் ஸ்திரப்பாட்டை குலைப்பதோடு, தேசிய அபிவிருத்தியிலும் பொருளாதாரத்திலும் மிகப் பாதகமான விளைவுகளையே உருவாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மக்களின் பிரதிநிதிகளாய் அதிகாரத்திற்கு வரும் அரசியல் தலைவர்கள் மக்கள் நலன்களையே முன்னிலைப்படுத்த வேண்டும். நல்லாட்சி என்ற கற்பனைக் கோட்டை தகர்ந்து சரியும் இத்தருணத்தில் அரசாங்கங்களைத் தீர்மானிக்கும் சிவில் சமூகம், குறிப்பாக பெரும்பான்மைச் சிங்கள சிவில் சமூகத்தின் பொறுப்பு பாரியதாகும். ஏனெனில், ஆட்சியதிகாரத்தை மாற்றும் வலிமை பெரும்பான்மை மக்களுக்கே உள்ளது. அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யும் ஆட்சியாளர்கள் குறித்து தேர்தல் காலங்களில் சரியான தீர்மானத்தை எடுக்கும் உரிமை ஒவ்வொரு வாக்காளருக்கும் உண்டு. கடந்த காலத்தில் நிகழ்ந்த அரசியல் அநீதிகளையும் ஆட்சியாளர்களின் பெருந் தவறுகளையும் கருத்திற் கொண்டே யாருக்கு வாக்களித்தல் வேண்டும் என்ற தீர்மானத்தை வாக்களர்கள் கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

தவறும்போது இந்த அரசியல் திரிசங்கு நிலையை நம்மால் முடிவுக்குக் கொண்டு வர முடியாமல் போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## தேவை, இலங்கைக்கு புதியதோர் அரசியல் கலாசாரம்

இலங்கைக்கு புதியதோர் அரசியல் கலாசாரம் தேவைப் படுகிறது. புதியதோர் அரசியல் சந்ததி உருவாவதன் மூலமே இம்மாற்றம் இடம்பெறும் என நான் நினைக்கிறேன். உலகம் தொழில்நுட்ப ரீதியாக முன்னகர்ந்து கொண்டுள்ளது. நவீன தொழில்நுட்பங்களுடன் முன்னேற்றத்தின் உச்சத்தைத் தொட்டு வருகிறது. நாம் இன்னும் பழமைவாத கருத்துக்களில் சிறைப்பட்டு அதைச் சூழ வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

எமது பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள வேண்டிய அதேவேளை, கற்றுக்கொள்ள வேண்டிய பாரம்பரியங்களும் எமக்கு முன்னால் உள்ளன. பழைய சம்பிரதாயங்களில் சிறைப்பட்டிருப்பின் மனித வர்க்கம் இன்னும் கற்குகைகளிலேயே இருந்திருக்கும். சிங்கள ஞானியொருவரான குமாரதுங்க முனிதாச கூறிய கருத்தொன்று என் நினைவுக்கு வருகிறது. புதுப் புது விடயங்களைக் கையாளாத மக்கள் உலகில் உயர்ந்த இடங்களுக்குச் செல்ல மாட்டார்கள் என்பதுவே அது. இது எல்லோரினதும் அவதானத்திற்கு உட்பட வேண்டிய கருத்தாகும்.

தற்பொழுது இலங்கை யுத்த காலப்பகுதியைக் கடந்து வந்துள்ளது. மோதல்களைத் தீர்த்துக் கொண்டு போருக்குப் பிந்திய பகைமறப்புக் காலத்தை நோக்கிப் பயணிக்க வேண்டுமெனில், எம் மத்தியில் காணப்படுகின்ற தேசிய வாதத்தையும் இனவாதத்தையும் குறுகிய அரசியல் சிந்தனை படைத்த கலாசாரத்தையும் கைவிட வேண்டியுள்ளது. அதிலிருந்து முற்றாக ஒதுங்க வேண்டியுள்ளது.

நாம் இன்று முகம்கொடுக்கும் சவால்கள் அன்று முகம் கொடுத்த சவால்களைப் போன்றதல்ல. இவை புதிய சவால்களாகும். 1956 ஆம் ஆண்டிலும் 1977 ஆம் ஆண்டிலும் வாழ்ந்த மக்கள் முகம்கொடுத்த சவால்களல்ல இன்று நாம் முகம்கொடுக்கும் சவால்கள். சர்வதேச ரீதியில் நாம் இன்று முகம்கொடுக்கும் சவாலாக இருப்பது, மனித உரிமைகளை பாதுகாக்கின்ற, அதற்குப் பதில் கூறக் கடமைப்பட்டுள்ள நாடாக இலங்கை மாறுவது. இரண்டாவது, எந்தவொரு அதிகார வர்க்கத்திற்கும் கட்டுப்படாமல் சுயாதீன வெளிநாட்டுக் கொள்கையைக் கடைபிடிப்பது.

இவற்றுக்குள்தான் எமது கௌரவம் உட்பொதிந்துள்ளது. இதன் மூலமே எமக்குப் பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும். இன்று உலகில் எமக்குத் தனித்து வாழவோ, இயங்கவோ முடியாது. தனிமைப்பட்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது. ஒருவரிடம் இருந்து மற்றொருவர் கற்றுக்கொள்ள நிறைய விடயங்கள் உள்ளன. வரலாற்றிலிருந்து எமக்கு நிறையப் பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. 1956ஆம் ஆண்டு காலப்பகுதியை திருப்பிப் பாருங்கள். அன்றிருந்த அரசியல் தலைவர்கள் சீத்தை, பனியன்களை அணிந்தார்கள். எனினும் ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்திய அந்தக் கலாசார வரையறையையும் விட்டு ஒதுங்குவதற்கு அன்றைய அரசியல் தலைவர்களுக்கு முடியாமல் போனது.

எனவே ஆடைக்குக் கீழால் உள்ளாடை அணிந்தார்கள். அவர்கள் உலகை தெரிந்துவைத்திருந்தார்கள். ஆங்கிலத்தை நன்றாகக் கற்றிருந்தார்கள். ஆங்கிலேயர்களை அறிந்திருந்தார்கள். அவர்களுடைய பிள்ளைகளுக்கும் ஆங்கிலத்தைப் போதித்தார்கள். அவர்களை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பிவைத்தார்கள். ஆனால் 1956ஆம் ஆண்டு சந்ததியினருள் பெரும்பாலானவர்கள் கிணற்றுத் தவளைகளைப் போல் சிந்திக்க முற்பட்டார்கள். சிங்கள மொழிச் சட்டத்திற்குள் அவர்கள் அகப்பட்டார்கள். இம்மாற்றுக் கவனிப்புக்கு இரையாகியிருப்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள். வடக்கு தெற்கு இளைஞர் கலகங்களுக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளுள் இதுவும் ஒன்றாகும்.

1944 ஆட்சி மாற்றத்தின் போது பண்டாரநாயக்க தேசிய வாதக் கொள்கையை முன்னிறுத்தி ஆட்சியைக் கைப்பற்ற முனைந்தார். ஆனால் 1977 ஆட்சி மாற்றத்தின் போது ஜே.ஆருக்கு வித்தியாசமானதொரு பார்வை இருந்தது. உலகமயமாக்கல் பார்வை அவரிடம் காணப்பட்டது. இலங்கையை முழு உலகிற்கும் திறந்துவிடும் கொள்கையை பின்பற்றினார். அதன் மூலம் புதிய உற்பத்திகள், அபிவிருத்திகள், நுகர்வுப் பொருட்கள் தொடர்பில் அவதானம் அதிகரிக்கலானது. மாக்சிசத்தை புறந்தள்ளி விட்டு இந்தியா, சீனா போன்ற நாடுகளும் இந்தக் கொள்கையை ஆரத் தழுவ ஆரம்பித்தன.

நாட்டின் எதிர்காலம் குறித்து நாம் கண்திறந்து பார்க்க வேண்டும். கிணற்றுத் தவளை அரசியலை விட்டும் நாம் ஒதுங்கிவிட வேண்டும். உலகில் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகள் எவ்வாறு பொருளாதார ரீதியாக தம்மைக் கட்டியெழுப்பிக் கொண்டன என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். வரலாற்றிலிருந்து பாடங்களைக் கற்று ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு புதியதோர் பாதையில் பயணிக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது. நாம் மிக முக்கிய கட்டத்தில் இருக்கின்றோம். சரியான தூரத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். அது குறித்து சிந்திக்க வேண்டும்.

## இரண்டாவது சுதந்திரப் போராட்டத்தை நோக்கி... - VI

# ஊழல் மோசடியை ஒழிப்பது யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்

• விக்டர் ஐவன்

இலங்கையின் மொத்த அரச அமைப்பிலும் புற்றுநோயாகப் புரையோடிப் போயிருக்கின்ற ஊழலும் மோசடியும் தான் நாட்டின் வறுமை, பின்னடைவு, கடன் சுமை அனைத்துக்குமான முக்கிய காரணம் எனலாம். அரச அதிகாரத்தைப் பெற்றவர்கள் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி முறைகேடாகப் பணம் சம்பாதிப்பது 1977 முதல் இலங்கையின் அரச நிர்வாகத்தின் ஓர் அம்சமாக இணைந்து இன்று வரை மாறாத பண்பாக நிலைத்து வருகிறது. உருவாக்கப்படவுள்ள புதிய யாப்பு இந்த நிலையான பண்பை இல்லாதொழிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டியது முக்கியமானது.

அரசில் காணப்படும் மோசடிகளின் மூல வேராக, அரச இயந்திரத்தின் அச்சாணியாய் விளங்குகின்ற அரசியல்வாதிகள் எனும் மக்கள் பிரதிநிதிகளே இருக்கின்றார்கள். யாப்பு உருவாக்கத்தின் போது அதனை அரசமைப்புப் பேரவையின் மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தாமல் பொதுமக்களின் பங்களிப்பு அதிகமாகப் பெறப்படும் வகையில் அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் நவீன யாப்பு உருவாக்கத்தின் பிரதான அம்சமாக இது அமைந்திருக்கிறது என்பதோடு, அரசியலமைப்புப் பேரவையின் அங்கத்தவர்களே மோசடியின் பிரதான கர்த்தாக்களாக இருக்கும் நிலையில், அவர்கள் இயற்றும் யாப்பு தமது பண்பாக மாறிப் போயுள்ள ஊழலையும் மோசடியையும் இல்லாதொழிக்கும் வகையில் அமையப் போவதில்லை.

இந்தவகையில் ஊழல் மோசடியினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்குத் தான் அதிலிருந்து மீள வேண்டும் என்ற உண்மையான தேவை இருக்கிறது. ஆனாலும் யாப்பு உருவாக்கத்துக்குத் தேவையான அறிவும் அனுபமும் சாதாரண மக்களுக்கு எப்படி இருக்க முடியும் என்ற கேள்வி எழுகிறது. இந்த அறிவை மக்களுக்கு வழங்குவதும் யாப்பு உருவாக்க வேலைத்திட்டத்தின் ஒரு பகுதிதான். இதனைச் செயற்படுத்தினால் மக்கள் யாப்பு உருவாக்கத்துக்குத் தேவையான அறிவையும் வரைமுறைகளையும் பெற்று அவர்கள் அதன் சிறந்த பங்காளிகளாக மாறுவார்கள்.

ஊழல் மோசடிகளைக் களைவதற்காக யாப்பு உருவாக்கத்தின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை கீழே குறிப்பிட்டுள்ளேன்.

### யாப்பை மீறுதல்

அ) ஆட்சித் தலைவர்களுக்கும், பிரதமர் ஆட்சித் தலைவர் அல்லாத பட்சத்தில் பிரதமர் உட்பட்ட அமைச்சரவைக்கும் தமக்கு வழங்கப்படும் பொறுப்புக்கள், கடமைகள் பற்றிய சுருக்கமான விபரங்கள் அடங்கிய விளக்கமொன்று யாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்.

ஆ) முக்கியமான பதவிகளில் உள்ளவர்கள் அனைவரும் பொதுவாகவன்றி தனித்தனியாக தத்தமது பொறுப்புக்களுக்கு ஏற்ற வகையில் யாப்பு விதிகளுக்கு இணங்கச் செயற்படுவதாக சத்தியப் பிரமாணம் செய்யும் முறையொன்று வர வேண்டும். மீறிச் செயற்படுவது தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் இந்தப் பிரமாணம் ஏற்றுக் கொள்வதாக இருக்க வேண்டும்.

இ) வேண்டுமென்றே யாப்பை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டு அதற்கான தண்டனையும் யாப்பில் குறிப்பிடப்பட வேண்டும். யாப்பு மீறலில் ஆட்சித் தலைவருக்கு சுய அதிகாரம் கிடைக்கப் பெறாத வகையில் யாப்பு அமைய வேண்டும்.

ஈ) யாப்பு மீறலுக்கு எதிராக குறைந்த செலவில் வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை யாப்பினூடாக மக்களுக்குப் பெற்றுத் தர வழி செய்ய வேண்டும்.

### பொதுச் சொத்து துஷ்பிரயோகம்

அலைவரிசைகள் உட்பட்ட அனைத்து பொதுச் சொத்துக்களதும் இடைக்கால பிரதான பொறுப்பாளராக நாட்டின் தலைவரே உள்ளார். அரச சொத்துக்களை விற்பதற்கும் குத்தகைக்குக் கொடுப்பதற்கும் அன்பளிப்புச் செய்வதற்கும் நாட்டுத் தலைவருக்கே அதிகாரம் இருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி இலங்கையின் தலைவர்கள் தமது உறவினர்களுக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் இலவசமாகவும், மலிவு விலையிலும் பொதுச் சொத்துக்களை வழங்கி வருகின்றனர். இதனால் மட்டுமே அரசாங்கம் அனுபவிக்கின்ற நஷ்டம் அளப்பரியது.

மக்களுக்கு இது தொடர்பில் போதிய அறிவை வழங்குவதற்காகவும், இது போன்ற தவறுகள் மீண்டும் நடக்காமல் இருக்கும் வகையிலும், ஆட்சித் தலைவர்களால் இது தொடர்பில் இதுவரை புரியப்பட்டிருக்கின்ற பாரிய தவறுகளைக் கண்டறிந்து யாப்பு சபைக்கு அறிவிக்கின்ற முறையொன்று உருவாக்கப்பட வேண்டும்.

அ) பொதுச் சொத்துக்களை விற்பதற்கும், குத்தகைக்குக் கொடுப்பதற்கும், அன்பளிப்புச் செய்வதற்கும் நாட்டுத் தலைவருக்குள்ள எல்லையற்ற அதிகாரத்தை இல்லாதொழிக்க வேண்டும். நாட்டுத் தலைவர் அதனைக் கையாள்வதற்கான வரையறைகள் சொல்லப்பட வேண்டும்.

ஆ) பொதுச் சொத்துக்களை விற்பதற்கும், குத்தகைக்குக் கொடுப்பதற்கும், அன்பளிப்புச் செய்வதற்கும் முன்னர் மக்களுக்கு அறிவிக்க வேண்டியதும், அரசியலமைப்புப் பேரவையினதும் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற வேண்டியதும் கட்டாய நிபந்தனைகளாக்கப்பட வேண்டும்.

### அரசுடன் கொடுக்கல் வாங்கல் செய்தல்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சட்ட ரீதியான பாரம்பரியத்துக்கப்பால் அரசுடனான வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பற்றி பரிசீலனை செய்யப்பட வேண்டும். இவர்கள் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தீர்ப்பு வழங்கும் அதிகாரத்தை நீதிமன்றத்துக்கு வழங்க வேண்டும்.

அ) மக்களின் வாக்குகளால் தெரிவான பிரதிநிதிகள் அரசுடன் வியாபாரத்தில் ஈடுபடுவது முற்றாகத் தடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்பவர்களது உறுப்புரிமையைப் பறிக்கின்ற முன்னைய முறை மீண்டும் யாப்பில் இணைக்கப்பட வேண்டும்.



ஆ) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையின்றிய வாகன அனுமதிப்பத்திரமும் எரிபொருளும் வழங்குகின்ற எந்த நாட்டிலுமில்லாத சலுகைகள் நீக்கப்பட வேண்டும்.

இ) பன்முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி, பாராளுமன்ற சம்பிரதாயத்துக்கு முரணாக வரவு செலவுத் திட்டத்தினூடாக சுமத்தப்படும் சுமை என்பதனால் அது முற்றாக நிறுத்தப்பட வேண்டும்.

### ஆளணியும் வாகனமும்

ஜனாதிபதி ஜயவர்தனவின் காலத்தில் ஜனாதிபதி செயலகத்தில் 25 பேருக்கும் குறைவாகவே ஊழியர்கள் இருந்தார்கள். வாகனங்களும் குறைவாகவே இருந்தன. அவருக்கு ஆலோசகர்கள் இருக்கவில்லை. ஆனால் இப்போது ஜனாதிபதி, பிரதமர் செயலகங்களில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் இருக்கிறார்கள். இங்கு வாகனங்களும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. ஜனாதிபதிக்கு நூற்றுக் கணக்கான ஆலோசகர்கள் இருக்கிறார்கள். இவர்களில் பலரும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குபவர்களாக இல்லை. வேலைக்குச் சமுகமளிக்காமலேயே இவர்களில் பலரும் சம்பளம் பெறுகிறார்கள். இவர்களுக்கும் வாகன, எரிபொருள் வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அ) நிறைவேற்றதிகாரம் தொடருமானால் ஜனாதிபதிக்கும், பாராளுமன்ற ஆட்சி முறையென்றால் பிரதமருக்கும் இருக்க வேண்டிய ஊழியர் மற்றும் வாகனங்களின் எண்ணிக்கை, மதிப்பீடொன்றின் அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ஆ) நாட்டுத் தலைவருக்கும் அமைச்சரவை அங்கத்தவர்களுக்கும் பிரத்தியேக ஊழியர்கள் வழங்கும் முறை நிறுத்தப்பட வேண்டும். இது தமது குடும்பத்தாருக்கு சம்பளமும் ஏனைய சலுகைகளையும் பெற்றுக் கொடுக்கும் முறை என்பதால், இது அனாவசிய சுமையை மக்கள் மீது சுமத்துகின்றது.

இ) ஓய்வு பெறும் அரச தலைவர்களின் கணவன் அல்லது மனைவிக்கு அரச செலவில் உத்தியோக பூர்வ வாசஸ்தலமும், ஊழியர்களும் வழங்கப்படும் முறை நிறுத்தப்பட வேண்டும். வறிய ஏழை ஒருவர் நாட்டுத் தலைவராக வரும் பட்சத்தில் மாத்திரம் இதனைப் பரிசீலனை செய்யலாம்.

ஈ) உயர் பதவிகளில் இருக்கின்ற அரசியல்வாதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பின் தன்மை தொடர்பில், அதற்குச் செலவிடப்படும் பாரிய நிதியைக் கருத்தில் கொண்டு சிறந்த கொள்கையொன்று வகுக்கப்பட வேண்டும்.

உ) உத்தியோகபூர்வ பதவிகளில் உள்ளவர்களுக்கு வேறெந்த நாடுகளிலும் இல்லாத அளவு சொகுசான ஆடம்பர வாகனங்கள் வழங்கப்படுகின்றன. அதி உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு வழங்கப்படும் வாகனமொன்றின் பெறுமதி 2 கோடிக்கும் மேலாகும். முன்னணி அரசியல்வாதிகளின் வாகனத்தின் பெறுமதி 10 கோடிக்கும் அதிகமானது. நாட்டுக்குப் பெரும் செலவீனத்தை ஏற்படுத்தும் இந்த மோசமான முறை நிறுத்தப்பட வேண்டும்.

### ஊழல் மோசடியை இல்லாதொழித்தல்

அ) தவறு செய்யும் ஜனாதிபதியொருவரை பதவி யிறக்கம் செய்வதற்கான முறைகளில் ஒன்றாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருதலுக்கு யாப்பு இடமளித்திருக்கிறது. இது முடிவில்லாத ஒரு பம்பரம் போல சுழன்று வருகிறது. ஜனாதிபதி முறை தொடருமானால் இந்த முறை தொடர்பிலான தீர்க்கமானதொரு நடைமுறையை அறிமுகப்படுத்த வேண்டும்.

ஆ) பாரிய குற்றங்களில் ஈடுபடும் உயர் அதிகாரிகளுக்கு எதிராக அரசியலமைப்புப் பேரவையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையோ கண்டனத் தீர்மானமோ நிறைவேற்றுவதற்கு யாப்பில் மக்களுக்கு வழிவகை செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இ) உயர் பதவிகளை வகிப்பவர்களின் மோசடித் தன்மையை நிறுவக் கூடிய சாட்சிகள் இருக்கும் பட்சத்தில் தனி நபராகவேனும் அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையோ கண்டனத் தீர்மானமோ நிறைவேற்றுவதற்கு யாப்பில் இடமளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான முறைப்பாடுகளை விசாரிக்கும் அதிகாரமும் அதற்கென தனி அலகொன்றை உருவாக்கிக் கொள்ளும் அதிகாரமும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கப்பட முடியும். இந்த அலகு மக்களுடையதைப் போலவே அரசமைப்புப் பேரவையினதும் பரிசீலனைக்கு உட்படுவதாக அமைய வேண்டும். பரிசீலனையின் போது குற்றவாளியாகக் காணப்படும் எவர் மீதும் கண்டனத் தீர்மானமோ, நம்பிக்கையில்லாப் பிரேரணையோ அரசியலமைப்புப் பேரவையின் முன்னால் வைக்கின்ற அதிகாரம் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்கப்பட வேண்டும். கணக்காய்வாளரின் விதந்துரைகள் அடங்கிய அறிக்கை பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டு அது பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

இதற்காக அரசியலமைப்புப் பேரவையில் நடக்கும் விவாதத்தின் ஆரம்பத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அவரது குற்றம் தொடர்பில் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களையும்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பை விவகாரம்: “அரசு சூழல் தாக்க மதிப்பீட்டை முறையாகச் செய்யவில்லை”

**-சயீட் முஹம்மட் முபாரக் - சூழலியலாளர்**

**நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி**

- **குப்பைக்கு எதிரான மக்கள் போராட்டம் தற்போது எந்தக் கட்டத்தில் உள்ளது?**

இம்மாதம் புத்தளம் மாவட்டத்திலுள்ள குப்பைகளை 15ஆம் திகதி முதல் அருவைக்காட்டில் கொட்டுமாறு அரசாங்கம் அறிவித்துள்ளது. சூழல் தாக்க மதிப்பீடுகளுக்கு (EIA- Environmental Impact Assessment) அமைவாக கொழும்பிலுள்ள குப்பைகளை புகையிரதத்தில் கொண்டு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிறகு கனரக வாகனங்களில் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட் டது. அதற்கான ஆயத்தமின்மையால் ஆரம்ப கட்டமாக புத்தளம் மாவட்டத்தில் சேரும் கழிவுகளை அங்கு கொண்டு போய் கொட்டுமாறு கூறப்பட்டது.

புத்தளம் மாவட்ட கழிவுகளை அருவைக் காட்டில் கொட்டும்படி சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்படவில்லை. இது சட்ட விரோதமான விடயமும் கூட. இதுதவிர புத்தளம் மாவட்டத்திலுள்ள குப்பைகளைக் கொண்டு வருவதற்கான கனரக வாகனங்கள் 15ஆம் திகதி வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. அதற்காக வேண்டி நடத்தப்பட்ட கூட்டங்களில் கூட பெரும்பாலானவர்கள் கலந்துகொள்ளவில்லை. புத்தளம் நகர சபை இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் அண்மையில் பிரேரணையொன்றையும் நிறைவேற்றியுள்ளது. அதேபோன்று கற்பிட்டி பிரதேச சபை, புத்தளம் பிரதேச சபை போன்றவற்றிலும் எதிர்ப்புப் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே அமைச்சர் சம்பிக்க பலவந்தமான முறையில் இந்த விடயத்தை மேற்கொள்ளப் பார்க்கிறார் என்பது தெளிவு.

- **இந்தத் திட்டத்துக்கான சூழல் தாக்க மதிப்பீடு (EIA- Environmental Impact Assessment) முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்கின்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

இவர்கள் மேற்கொண்ட சூழல் தாக்க மதிப்பீட்டிலும் ஏராளமான பிழைகள் உள்ளன. அந்தப் பிழைகள் நிவர்த்தி செய்யப்படாமல், மக்களுக்கு கேள்வி கேட்பதற்கு இடமளிக்காமல் பலவந்தமான முறையில் இவ்விடயம் அரங்கேற்றப்படுகிறது. சூழல் தாக்க மதிப்பீட்டை (EIA- Environmental Impact Assessment) தயாரிக்கும் போது அந்தப் பகுதி மக்களை அழைத்து கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும் என்ற சரத்தொன்று உள்ளது. இதில் மக்களது வாழ்வாதாரம், சூழல் போன்றவற்றுக்கு எவ்வாறான தாக்கம் ஏற்படும்? வளி, நீர், வனஜீவராசிகள் போன்றவற்றுக்கு எவ்வாறான தாக்கங்கள் ஏற்படும்? என்பன பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

ஆனால் இவ்வதிகாரிகள் தயாரித்திருக்கும் சூழல் தாக்க மதிப்பீட்டில் 8 பேர் மாத்திரமே அழைக்கப்பட்டு பிரதேசத்தின் விடயங்கள் கலந்துரையாடப்பட்டிருக்கின்றன. இவர்களுள் பௌத்த பிக்கு ஒருவரையும், விவசாயி ஒருவரையும் தவிர மற்ற அனைவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாவர். இவ் அரசாங்க உத்தியோகத்தர்கள் இத்திட்டத்தால் ஏற்படக்கூடிய சூழல் பாதிப்புக்களை முறையாகக் குறிப்பிடாமையினால் சூழலுக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை என்கின்ற அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கு முன்னர் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்தை தாபிப்பதற்கு வடமேல் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளராக இருந்த சமன் சேனாநாயக்க என்பவர் பலவந்தப்படுத்தப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இது 2006 ஆம் ஆண்டில் இடம்பெற்றது. அதற்கெதிராக நாம் வழக்குத் தொடுத்த போது அது அப்போதைய ஆட்சிபீடத்தால் விசாரணைக்கு எடுக்க இடமளிக்கப்படவில்லை. ஐந்து வருட காலமாக இவ்வழக்கு காலம் கடத்தப்பட்ட நிலையில் அனல் மின்சார நிலையத்திற்கான கட்டிடமும் அக்காலப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு விட்டது.

ஒரு திட்டத்திற்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டால் அவ்வழக்கு முடிந்ததன் பிற்பாடே அந்தத் திட்டம் தொடரப்பட வேண்டும். அப்படியிருந்தும் சரத் என் சில்வா பிரதம நீதியரசராக இருந்த சமயத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவது தடுக்கப்பட்டு வந்தது. அனல் மின்சார நிலையம் உருவாக்கப்பட்டதன் பின்னர் இவ்வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு விட்டது எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்தார்கள். இதற்கு எதிராக கேள்வி எழுப்பிய போது எமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.



- **அனல் மின்சார நிலையத் திட்டம் கொண்டு வரப்பட்ட போது மக்களது பலத்த எதிர்ப்புக்களையும் மீறி அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது. தற்போது அருவைக் காட்டில் குப்பை கொட்டும் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கத் தயாராகும் நிலையில் மக்களது எதிர்ப்புக்களையும் மீறி அரசாங்கம் இந்தத் திட்டத்தையும் முன்னெடுக்கத் தயாராகின் றது. ஜனநாயக நாட்டில் மக்களது எதிர்ப்புக் களுக்கு அப்பால் அரசாங்கம் ஏன் இந்தத் திட் டங்களை முன்னெடுக்கப் பார்க்கின்றது?**

அனல் மின்சாரத் திட்டத்தில் கோடிக் கணக்கான ரூபாய்கள் கைமாறியதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கும் செய்தியொன்று அண்மையில் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதே போன்று பிரதியமைச்சர் அஜித் பெரேரா அனல் மின்சார நிலையத்தை நிறுவிய சீன நாட்டுக் கம்பனியிலிருந்து முன்னைய அரசாங்கத்திற்கு 20 மில்லியன் டொலர் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருந்தார்.

உலக வங்கியினால் கருப்புப் பட்டியலில் இடப்பட்ட நிறுவனத்திற்கு அமைச்சர் சம்பிக்கவினால் அருவைக்காட்டில் குப்பை கொட்டும் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தில் அவர்களுக்கு ஒரு பங்கு இருப்பதாலேயே தடல் புடலாக இதனை நிறைவேற்றப் பார்க்கின்றார்கள். இத்திட்டம் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக வேண்டி அண்மையில் புத்தளம் பிரதேச செயலகத்தில் அமைச்சர் சம்பிக்க தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.

அதன்போது, அவர் ஏலவே தெரிவித்து பத்திரிகையில் பிரசுரமான செய்தியை நான் அவரிடம் காண்பித்து இது உண்மையா எனக் கேட்டேன். அதற்கவர் உண்மை எனக் கூறினார். பிரதியமைச்சர் அஜித் பெரேராவின் கருத்து தொடர்பிலும் வினவினேன். அதுவும் உண்மையெனக் கூறினார். அதன் பிறகு நான், அன்றைய திட்டமும் சீன நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இன்றும் சீன நிறுவனத்தினாலேயே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது, இப்படியிருக்கும் போது உங்களுக்கும் கொமிஷன் இல்லை என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கேட்டேன். அதற்கவர் கையை விரித்து தான் நேர்மையாக வேலைசெய்யும் ஒருவர், கொமிஷன்களுக்காக வேலைசெய்பவரல்ல என்றார்.

- **நீங்கள் ஒரு சூழலியலாளர் எனும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுமாயின் மக்களுக்கு எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்ற பாதிப்புக்களை குறிப்பிட முடியுமா?**

பல்வேறு மாற்று வழிகள் இருக்கும் பட்சத்தில் 170 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பாலுள்ள புத்தளத்திற்கு ஏன் குப்பையைக் கொண்டு செல்ல வேண்டும்? குப்பை எடுத்துச் செல்லும் ஒரு நாள் புகையிரத பயணத்திற்கு 40 லட்சம் ரூபா செலவாகிறது. இத்திட்டத்தின் மூலம் அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கின்றனர். ஆனால் அதிகபட்சம் 50 பேர்களுக்கு மேலாக அங்கு தொழில்வாய்ப்பிருக்காது. ஆனால் இந்தக் குப்பையை மீள்சுழற்சி செய்யும் பட்சத்தில் 200 பேர்களுக்கு மேல் தொழில் வழங்க முடியும்.

இந்தத் திட்டத்திற்கு மொத்தமாக 274 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 115 மில்லியன் டொலர் உலக வங்கியினாலும் இன்னும் 115 மில்லியன் டொலர் AIIE என்னும் சீன வங்கியிலிருந்தும் கடனாகப் பெறப்பட்டுள்ளன. உலக வங்கியிடம் சில நிபந்தனைகள் உள்ளன. அதாவது குப்பைகளைக் குறிப்பிட்ட சில இடங்களில் போடக்கூடாது என்பது. அந்த நிபந்தனைகளின் பிரகாரம் அரசாங்கத்தால் புத்தளத்தில் குப்பை கொட்ட முடியாது. இதனால் உலக வங்கி பணம் தர முடியாதென பின்வாங்கியது.

அரசாங்கத்தின் 44 மில்லியன் பணத்தை கொண்டே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில் எவ்வித அனுபவமும் இல்லாத சய்னா ஹார்பர் நிறுவனத்திடமே விலைமனுக்கோரல் அடிப்படையில் இத்திட்டத்தின் அடுத்த கட்டப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதே சமயம் சய்னா ஹார்பர் நிறுவனத்திற்கு எவ்வித அனுபவங்களும் இல்லாததால் கொரிய நாட்டு நிறுவனம் ஒன்றை ஆலோசனை வழங்குவதற்கென ஒப்பந்தம் செய்துள்ளனர். இவ்விரு நிறுவனங்களையும் மேற்பார்வை செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் எவ்வித அனுபவமும் இல்லாத CCEB – Ceylon Construction Environmental Bureau என்னும் இலங்கை நிறுவனமும் அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஒரு பொறியியலாளர் குழுவின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய ஆசிரியர் ஒருவரை நியமித்ததற்கு ஒப்பான செயலே இது.

இப்படியான நிலையில் 40 லட்சம் ரூபா (4 மில்லியன்) ஒரு நாள் செலவை ஈடு செய்ய உள்ளூராட்சி சபைகளிடமிருந்து ஒரு டன் கழிவுக்கு 5000 ரூபா வீதம் அறவிடப்படுகிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு 6 மில்லியன் ரூபா கிடைக்கிறது. இதில் 4 மில்லியன் ரூபா பயணச் செலவு போக மீதமாகும் 2 மில்லியன் ரூபா இலாபமாக கிடைக்கிறது. இப்படி பொதுமக்களின் பணத்தை திட்டமிட்ட முறையில் கொள்ளையடிக்க திட்டமிட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக உமா ஓயா திட்டத்தை எடுத்துக் கொண்டால் அது முழுமையான அரசியல் திட்டமாகும். இத்திட்டத்தில் பொறியியலாளர்களையோ சூழலியலாளர்களையோ அரசாங்கம் சம்பந்தப்பட வைக்கவில்லை. உமா ஓயா திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்காக வேண்டி உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிற்கு அமைய 3000 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

அரசியல் தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின் காரணமாக மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை அரசாங்கம் திறைசேரியிலிருந்து கொடுக்கின்றது. திறைசேரியில் இருப்பது பொதுமக்களாகிய எமது பணம். இது போன்ற திட்டங்களை யார் யாரெல்லாம் வகுக்கின்றார்களோ அவர்களது சொந்த செலவிலிருந்தே நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் செய்ய வேண்டிய அனைத்தையும் செய்துவிட்டு பொதுமக்களின் பணத்தில் நஷ்டஈடு வழங்குகிறார்கள். இது எந்த விதத்தில் நியாயமாகிறது?

- **அருவைக்காட்டில் குப்பை கொட்டும் திட்டம் தொடர்பில் சூழலியலாளர்கள் எவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளார்கள்?**

குப்பை கொட்டுவதற்கு இவ்விடம் பொருத்தமில்லை என்ற நிலைப்பாட்டில் உள்ளார்கள். ஏனெனில் குப்பை கொட்டும் இடத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தூரத்தில் [illegible]

(பக்.14)




அபூ ஷாமில்

## ஊருக்கான ரஹ்மத்தைத் தடுப்பவர்கள்

ஒப்பன் மஸ்ஜித் திட்டத்தின் ஊடாக பள்ளிவாசல்களைத் தரிசித்து அதன் சிறப்புக்களை விளங்கிக் கொள்ளும் முஸ்லிமல்லாதவர்கள் பலரும் பள்ளிவாசலின் சிறப்பு சம்பந்தமாகக் குறிப்பிடும் போது இங்கு மக்களுக்கிடையில் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்பதை பெருமிதத்தோடு குறிப்பிடுவார்கள். ஆண்டியும் அரசனும் பேதமில்லாமல் இணைந்திடும் தலமே பள்ளிவாசல் என்று நாகூர் ஹனிபாவும் பாடி வைத்திருக்கிறார். இப்படி ஏற்றத் தாழ்வுகள் அற்ற, பாகுபாடுகள் அற்ற, பேதங்கள் அற்ற இடமாகத் தான் புனித மஸ்ஜிதுகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

ஒரு ஊருக்கான ரஹ்மத் முதலில் பள்ளிவாசலுக்குத் தான் இறங்குகிறது. அங்கிருந்து தான் ஊரில் அதைச் சூழ உள்ள இடங்களுக்கு பகிரப்படுகிறது என்று பெரியோர்கள் சொல்லிச் சொல்லித் தான் என்ன நெருக்கடி என்றாலும் பள்ளிவாசலைச் சூழ வீடுகளைக் கட்டிக் கொள்வதற்கும் முஸ்லிம் சமூகம் பழக்கப்பட்டிருக்கிறது. பள்ளிவாசலுக்கு ரஹ்மத் இறங்க வேண்டுமென்றால் அது ரஹ்மான் எதிர்பார்க்கின்ற ஆண்டிக்கும் அரசனுக்கும் பேதம் பார்க்கப்படாத இடமாக இருக்க வேண்டும். அப்படி அல்லாஹுத்தஆலா எதிர்பார்ப்பது போல பள்ளிவாசல் அமையவில்லை என்றால் சொல்லப்படுவது போல அல்லாஹ்வின் ரஹ்மத் அந்த இடத்துக்கு இறங்காது. இதனால் ஒரு ஊரே அல்லாஹ்வின் ரஹ்மத் இறங்காத ஊராக நாசமடைகிறது. இதற்குப் பள்ளிவாசல் காரணம் என்பதை விட பள்ளிவாசலை பாகுபாடின்றி நிர்வகிக்கத் தெரியாதவர்கள் தான் காரணமாகிறார்கள். இன்னொரு வகையில் ஊருக்கான சாபக் கேடாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

பள்ளிவாசல்கள் ஏழை பணக்காரன், அந்தஸ்துள்ளவன்-குடியானவன், படித்தவன்-பாமரன், மாற்று இயக்கத்தைச் சேர்ந்தவன், வேற்றுக் கொள்கையுடையவன் என்றெல்லாம் பாகுபாடு காட்டுகின்ற இடமாக மாறுகின்ற பொழுது, இந்தப் பாகுபாடுகளுக்கு உள்ளானவர்கள் பள்ளிவாசலை விட்டும் தூரமாகிறார்கள். ஒரு பக்கத்தில் பள்ளியோடு தொடர்பில்லாதவர்களை பள்ளியோடு தொடர்புபடுத்துவதற்கு முயற்சி செய்து கொண்டு மறுபக்கத்தில் தமது கொள்கையோடு உடன்படாதவர்களை பள்ளியை விட்டும் தூரமாக்க முயற்சிக்கின்றார்கள். இந்த அநியாயம் நடக்கின்ற இடமாக பள்ளி வாசலை மாற்றிவிட்டு, ஊருக்கு ரஹ்மத் இறங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற முட்டாள்தனம் பள்ளிவாசல்களை விட்டு அகல வேண்டும்.

பள்ளிவாசல்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்ற இப்படியானவர்களின் செயற்பாடுகள் தான் கட்டுக் கோப்பில்லாத நிலைக்கு இலங்கை முஸ்லிம்களை மாற்றியிருக்கிறது. மாற்றுக் கொள்கையுடையோரை பள்ளிவாசலுக்கு வெளியில் துரத்தியடித்தது தான் இன்று நாட்டுக்கே அச்சுறுத்தலான குழுக்களை முஸ்லிம் சமூகத்தில் உருவாக்கி விட்டிருக்கிறது. பள்ளிவாசல்களில் இருந்து ஒதுங்கி இருந்து குழுக்களாகவும் ஜமாஅத்துக்களாகவும் செயல்படுவதற்கு பள்ளிவாசல்களே காரணமாகவும் அமைகிறது.

இந்த விடயத்தில் பள்ளிவாசல்கள் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். தனித்துப் போகும் ஆட்டைத் தான் ஓநாயட பிடிக்கிறது என்பது சமூகத்துக்கும் பொருந்தும். எனவே ஊர்களில் இயங்குகின்ற எந்தக் குழுவினரையும் கூட்டத்திலிருந்து பிரிந்து செயற்படாமல் காப்பது பள்ளிவாசல்களின் பொறுப்பில் உள்ள விடயமாகும். அண்மைக் கால நிகழ்வுகள் இதனையே தெளிவுபடுத்துகின்றன. ஊர்களில் பல ஜமாஅத்துக்கள் இயங்குகின்ற போது, வித்தியாசமான கருத்துக்களை உடைய குழுவினர்கள் செயற்படும் போது அவர்களையும் இணைத்துச் செல்லுகின்ற சாமர்த்தியம் பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு இருக்க வேண்டும்.

முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களே ஒரு பொது நோக்கத்தில் ஒன்று சேர்ந்து செயற்படும் பொழுது, ஒரே நோக்கத்துக்காக இயங்குகின்றவர்கள் ஒருவரை ஒருவர் ஒதுக்கி விட்டுச் செயற்படுவது என்பது இஸ்லாத்தை ஏற்றவர்களுக்குப் பொருத்தமானதல்ல. எதனையும் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்ற இலகுவான, சாத்தியமான, சாத்வீகமான நிலை இருக்கும் பொழுது, பள்ளிவாசலை விட்டும் சமூகத்தைத் தூரமாக்குவதற்கு பள்ளிவாசலை நிர்வகிப்பவர்களின் அறிவும், முதிர்ச்சியும் போதாமல் இருப்பதே காரணமாக அமைய முடியும். சமூகத்தை ஒற்றுமைப்படுத்துவது என்பதும், பிரிந்து விடாமல் பாதுகாப்பது என்பதும் கூட அல்லாஹ்வின் கட்டளைகள் தான். அதேபோல ஏற்றத் தாழ்வு, பாகுபாடுகள் முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் இருக்கக் கூடாது என்பதும் அல்லாஹ்வின் கட்டளைதான். அல்லாஹ்வின் கட்டளைக்கு மாற்றமாக பள்ளிவாசல்கள் செயற்படுமாக இருந்தால் அங்கு அல்லாஹ்வுடைய ரஹ்மத் இறங்குவதனையும் எதிர்பார்க்க முடியாது.

இனி அல்லாஹ்வின் ரஹ்மத் இறங்கக் கூடிய இடங்களை ஊர்களில் உருவாக்குகின்ற பணியை எல்லோரும் இணைந்து அவசரமாக முன்னெடுக்க வேண்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றது



கடந்த பத்தாண்டு கால இடைவெளியில் கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் துருக்கி கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தரவுகள் காண்பிக்கின்றன. உள்நாட்டு உற்பத்தி 2.4% இனால் வீழ்ச்சியடைந்துள்ளதோடு பணவீக்கமும் ஏற்பட்டுள்ளது. இந் நிலைமை குறித்து ஏற்கனவே பொருளியலாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிதியமைச்சர் பிராத் அல் பைராக், பொருளாதார செயற்பாடுகள் தொடர்பில் மோசமான பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டில் லீராவில் 30 வீத வளர்ச்சி ஏற்பட்டது. அமெரிக்காவுடனான முரண்பாட்டை அடுத்து லீராவின் பெறுமதி குறைந்ததோடு நாட்டில் பாரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மார்ச் 31 இல் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை பணவீக்கம் பாதிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 இல் பொதுவான வளர்ச்சி வீதம் 2.6 ஆக இருந்த பொழுதும் 2017 இல் அது 7.4 வீதமாக விளங்கியது. 2019 இன் ஆரம்பத்தில் பணவீக்கம் சற்று அதிகரித்துள்ளதோடு, எதிர்வரும் நாட்களிலும் பொருளாதார சரிவு ஏற்படும் என பொருளியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

# இஸ்ரேல் யூதர்களுக்கு மட்டுமான நாடு



- பெஞ்சமின் நெடன்யாஹூ

இஸ்ரேல் இந்நாட்டில் வாழ்கின்ற அனைத்துப் பிரஜைகளுக்குமான நாடு அல்ல. மாறாக, யூதர்களுக்கு மட்டுமான நாடு என இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெடன் யாஹூ தெரிவித்துள்ளார். நாட்டில் வாழும் பலஸ்தீன அறபு மக்கள் குறித்து கருத்து வெளியிட்டபோதே நெடன்யாஹூ இவ்வாறு குறிப்பிட்டார்.

இஸ்ரேல் எல்லைக்குள் வாழும் பலஸ்தீனர்களை இஸ்ரேல் பாகுபாடாக நடத்துகின்றது. சமஉரிமையுள்ள பிரஜைகளாக நடத்தவில்லை என்ற விமர்சனத்திற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நெடன்யாஹூ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சர்ச்சைக்குரிய ஒரு சட்டம், இஸ்ரேல் யூதர்களுக்கு மட்டுமான நாடு என்று கூறுகின்றது. அவ்வாறு நாம் நிறைவேற்றிய சட்டத்தின்படி இங்கு வாழும் அனைவருக்குமான நாடாக இது இருக்க முடியாது. மாறாக, யூதர்களுக்கு மட்டுமான நாடு என்று நெடன்யாஹூ தெரிவித்தார். அதேவேளை, பிரிக்க முடியாத ஜெரூசலம் இஸ்ரேலின் தலைநகராக உள்ளது என்றும் நெடன்யாஹூ குறிப்பிட்டார்.

பலஸ்தீனத்தை ஆக்கிரமித்து சட்ட விரோதமாக இஸ்ரேல் எனப் பிரகடனப் படுத்தியுள்ள யூதர்கள், பலஸ்தீன மக்களின் தாயகத்தில் பலஸ்தினர்களுக்கு சம வுரிமை இல்லை என்று வாதாடுகின்றனர்.

# சர்வதேசப் பார்வை

# யெமன் போரில் வாராந்தம் 100 பொதுமக்கள் மரணிக்கின்றனர்





யெமன் போரில் வாராந்தம் 100 பொது மக்கள் கொல்லப்படுகின்றனர் அல்லது தீவிர காயங்களுக்கு உள்ளாகின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது. கொல்லப் படுவோர் மற்றும் காயப்படுவோரில் ஐந்தில் ஒருவர் சிறுவர் என ஐ.நா. அறிக்கை கூறுகின்றது.

2018 இல் மாத்திரம் 5000 பேர் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 410 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளதோடு 542 குழந்தைகள் காயமடைந்துள்ளனர். மேற்கிலுள்ள ஹுதைதா நகரிலேயே அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கும் சவூதி மற்றும் ஐக்கிய அமீரக வான் படைகளுக்கும் இடையில் யெமனில் இடம் பெற்று வரும் போர் அந்நாட்டில் பாரிய மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்கியுள்ளது. 19 மில்லியன் யெமனியக் குழந்தைகள் போஷாக்கின்மையாலும் தொற்று நோயினாலும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று யுனிசெப் எச்சரித்துள்ளது.

மக்களில் அரைவாசிப் பேர் வெளி நாட்டு உணவுப் பொதிகளில் தங்கியுள்ளனர் என்றும், போர் இடம்பெறும் நகரங்களுக்கு நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்வது சவாலாகியுள்ளது எனவும் ஐ.நா. அகதிகள் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

யெமன் மக்களுக்கு பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி போன்ற அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும் நாளாந்த வன்முறைகள் மற்றும் அச்சுறுத்தலின் கீழ் மக்கள் வாழ்வதாகவும் ஐ.நா.வுக்கான மனித உரிமைப் பேரவையின் உதவி ஆணையாளர் வோல்கர் தெரிவித்துள்ளார்.

2015 இல் யெமன் மீது சவூதி தலைமையிலான அறபு நாடுகளின் வன்படை கூட்டுத் தாக்குதல்களை ஆரம்பித்தது.

அந்நாட்டின் கீழ்க்கட்டுமானங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதோடு, 85,000 குழந்தைகள் பட்டினியால் இறக்கக் கூடிய ஆபத்து நேர்ந்துள்ளதாக யுனிசெப் எச்சரிக்கின்றது.

ஹூதிகளோடு இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள் எதுவும் பயனளிக்காத நிலையில், மீளவும் ஹுதைதாவில் போர் உக்கிரமடைந்துள்ளது.

# கார்டூம் பல்கலைக்கழக முன்னெடுப்பை பஷீர் வரவேற்கிறார்



சூடானில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளைத் தணிக்கும் நோக்கில் கார்டூம் பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள கொள்கை மற்றும் கலந்துரையாடல் மன்றத்தை சூடான் ஜனாதிபதி உமர் பஷீர் வரவேற்றுள்ளார். சூடான் அரச ஊடகம் இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

கார்டூம் பல்கலைக்கழகத்தின் கல்விமான்களுக்கும் ஜனாதிபதி பஷீருக்கும் இடையில் நடந்த சந்திப்பினை அடுத்து பஷீர் பல்கலைக்கழக சமூகத்தின் முயற்சியை வரவேற்றுள்ளார்.

இவ்வுரையாடல் மன்றம் நாடு தற்பொழுது எதிர்நோக்கியுள்ள நெருக்கடிக்கான தீர்வுகளைக் காண்பதற்கு முயற்சிக்கும் என பேராசிரியர் அப்துல் மலிக் அப்துர் ரஹீம் தெரிவித்துள்ளார்.

சூடானில் அரசியல் ஸ்திப்பாட்டையும் பொருளாதார ஸ்திரப்பாட்டையும் அடைவதற்கு கார்டூம் பல்கலைக்கழகம் ஒரு தூரதரிசனத்தை வழங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து அத்தியவசியப் பொருட்களின் விலை அதிகரித்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி உமர் பஷீர் பதவி விலக வேண்டும் எனக் கோரி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

# 2018 சிரியாவின் குழந்தைகளுக்கு மிக மோசமான ஆண்டாகும்





2011 இல் சிரியாவில் ஆரம்பித்த போர், 8 ஆண்டுகளாக இடம்பெற்று வருகின்றபோதும், கடந்த ஆண்டு சிரியாவின் குழந்தைகளைப் பொறுத்தமட்டில் மிக மோசமானது என யுனிசெப் அறிக்கை தெரிவிக்கின்றது. அந்த ஆண்டிலேயே 1106 குழந்தைகள் இறந்தனர் எனவும் கடந்த 8 ஆண்டுகளில் குழந்தைகள் மிகப் பெரிய அளவில் கொல்லப்பட்ட ஆண்டு 2018 எனவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறாயினும் கடந்த ஆண்டில் கொல்லப்பட்ட குந்தைகளின் எண்ணிக்கை இதை விட அதிகமாக இருக்கும் என அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

கடந்த எட்டாண்டில் ஐந்து இலட்சம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு பல மில்லியன் மக்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். சிரியப் போர் விரைவில் முடிந்து விடும் என சிலர் எண்ணுகின்றனர். ஆனால், அது கிட்டிய எதிர்காலத்தில் முடியும் என்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்கிறார் யுனிசெபின் நிறைவெற்றுப் பணிப்பாளர் ஹென்ரி த போர்...

கடந்த செப்டம்பரில் சிரியாவின் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளுக்கு துருக்கியும் ரஷ்யாவும் மத்தியஸ்தம் வகித்தன. எனினும் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறவில்லை.

# காஸாவிலுள்ள 55,000 குடும்பங்களுக்கு கட்டார் நிவாரண உதவி




ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஸா பள்ளத்தாக்கிலுள்ள 55,000 ஏழை குடும்பங்களுக்கு கட்டார் அரசாங்கம் நிதியாதரவு வழங்கியுள்ளதாக கட்டாரின் உள்ளூர் ஊடக மொன்று தெரிவிக்கின்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும் 100 அமெரிக்க டொலர்களை தபால கங்களில் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தோடு காஸா மக்கள் தபாலகங்களில் ஒன்றுகுவிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காஸா மக்களுக்கு கட்டார் நிதி ஆதரவு வழங்கும் நான்காவது கட்டம் இதுவாகும். காஸாவை மீள் கட்ட மைப்பதற்கான கட்டாரின் தேசியக் குழுவின் மேற் பார்வையின் கீழ் இந்நிதியாதரவு வழங்கப்பட்டது. கடந்த ஒக்டோபரில் காஸாவுக்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியாதரவை கட்டார் அரசாங்கம் அறிவித்தது.

காஸா பள்ளத்தாக்கில் நிலவும் மனிதாபிமான நெருக்கடியைத் தணிப்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்று அறிவிக்கப்படுகின்றது. இதேவேளை, காஸாவிலுள்ள பிரதான மின்உற்பத்தி நிலையத்திற்கும் கட்டார் தனது பெற்றோலியத்தை இலவசமாக வழங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்ஜீரியாவின் அரசியல் கொந்தளிப்பு

• றஊப் ஸெய்ன்

சூடானில் உமர் பஷீருக்கு எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் பணிப் பகிஷ்கரிப்பு ஆர்ப்பாட்டங்கள் அரச படையினரால் அமைதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வட ஆபிரிக்க முஸ்லிம் நாடுகளுள் ஒன்றான அல்ஜீரியாவில் புதியதோர் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் என பெருந்தொகையான அல்ஜீரிய மக்கள் தொடர்ந்தும் பல நாட்களாக ஆளும் அரசாங்கத்திற்கு எதிரான வீதி மறியல் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழிற் சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப் போவதாக அச்சுறுத்தியுள்ளதோடு, ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலரும் மக்கள் எழுச்சிக்கு ஆதரவளிப்பதாக பகிரங்கமாக அறிவித்துள்ளனர். அல் ஜீரியாவில் நடப்பதென்ன? இது நடப்பு அரசியலையும் அரசியல் வரலாற்றையும் இணைத்து பதில் காண வேண்டிய கேள்வியாகும்.

அல்ஜீரியா வடஆபிரிக்க முஸ்லிம் நாடுகளுள் ஒன்றாகும். தேசிய விடுதலை முன்னணி (FLN) நாட்டின் பிரதான ஆளுங் கட்சியாகும். ஜனாதிபதியாக இருந்து வருபவர் இராணுவ ஜெனரல் அப்துல் அஸீஸ் புதப்லிகா. 82 வயதான பூதப்லிகா, நான்கு முறை ஜனாதிபதிப் பதவி வகித்து 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. உடல் சுகவீனமுற்றுள்ள பூதப்லிகா, அடிக்கொரு முறை சுவீஸ் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு மருத்துவச் சிகிச்சைகளுக்காகச் சென்று வருகிறார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக பூதப்லிகா மக்களின் பார்வையில் தென்படவில்லை. இராணுவத்தில் உள்ளோருக்கும் சிவில் சமூகத்தின் ஒரு பகுதியினருக்கும் பூதப்லிகா ஒரு இரட்சகர் போன்று தோன்றினாலும், இன்று அல்ஜீரிய மக்களின் 70 வீதமானோருக்கு அப்துல் அஸீஸ் ஒரு பயனற்ற முண்டம் போன்றும் மம்மி போன்றுமே காட்சியளிக்கிறார்.

நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான உடல், உள, பலம் அவருக்கில்லை. இனிவரும் காலங்களில் அவர் அருங்காட்சியகத்தில் உட்கார வைக்கப்படும் ஒரு மம்மியாக இருக்கலாம் என தலைநகர் அல்ஜியசிலுள்ள பெயர் குறிப்பிட விரும்பாத பேராசிரியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 22 இல் சுவிஸ் தலைநகர் ஜெனீவாவில் உள்ள உலகப் புகழ்பெற்ற மருத்துவமனையொன்றுக்கு தனியான விமானத்தில் சென்ற பூதப்லிகா, இரு வாரங்களின் பின்னர் நாடு திரும்பினார். அவர் நாட்டில் இல்லாதபோது ஆரம்பித்த அரச எதிர்ப்புப் போராட்டங்கள் அவரது வருகைக்குப் பின்னர் முழு வேகம் கொண்டன. மாணவர் எதிர்ப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இராணுவம் முற்கூட்டியே பல்கலைக்கழகங்களுக்கு விடுமுறை அளிப்பதாக அறிவித்தன. முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்தையும் கடந்து பூதப்லிகாவுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் மாணவர் தொகை வெள்ளம் போல் அதிகரிக்கின்றது. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களும் கற்பித்தல் நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்துள்ளனர். 195 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புப் போராட்டங்களும் நீடித்தால் அல்ஜீரியாவின் அரசியல் தலைவிதியை மாற்றுவதற்கு அதுவே போதுமானதாக இருக்கும் என்கின்றார் அந்நாட்டின் அரசியல் ஆய்வாளர் இஸ்ஸத் பர்ஹான்.

### இது திடீரென்று விளைந்த மக்கள் எதிர்ப்பா?

தற்போது அல்ஜீரியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியின் உண்மையான பின்புலம் என்ன? இது தனியே ஒரு ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டமா? அல்லது அவரது அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமா?

ஏப்ரல் 18 இல் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. பெப்ரவரியில் நடந்த ஊடக சந்திப்பொன்றில் தேர்தலில் தாம் மீளவும் களமிறங்கவுள்ளதாக பூதப்லிகா அறிவித்த கையோடு மருத்துவ சிகிச்சை பெறும் நோக்கில் சுவிஸ் சென்றிருந்தார். இந்த அறிவிப்புக்கும் மக்கள் போராட்டத்திற்கும் இடையில் உள்ள தொடர்பு முக்கியமானது.

எண்ணெய் வளமும் இயற்கை எரிவாயுவும் கொண்ட, ஆபிரிக்கக்கண்டத்திலேயே மிகப் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட முஸ்லிம் பெரும்பான்மை நாடு அல்ஜீரியா. சுமார் 100 ஆண்டுகள் பிரான்ஸின் கொலனியாக இருந்த நாடு. 20 ஆம் நூற்றாண்டில் அரசியல் சுதந்திரத்திற்காக 10 இலட்சம் மக்களை பலிகொடுத்த ஒரே நாடு அல்ஜீரியா. இந்நாட்டின் இன்னொரு சிறப்பம்சம் 65 வீதமான மக்கள் இளைஞர்களாக இருப்பதுதான்.



அல்ஜீரியாவில் பிரான்ஸின் காலனித்துவத்தை எதிர்த்துப் போராடிய அல்ஜீரிய தேசிய இராணுவத்தில் ஒரு அங்கத்தவராக இருந்தவரே இன்றைய ஜனாதிபதி அல்துல் அஸீஸ் பூதப்லிகா. ஆனால் பாராளுமன்றத்தில் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு அவ்வப்போது அரசியலமைப்பு சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தார். நான்கு முறை அல்ஜீரியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்த அவர், தற்போது ஐந்தாவது முறையும் தேர்தலில் இறங்கப் போவதாக அறிவித்ததை அடுத்தே மிகப் பெரும் அரசியல் கொந்தளிப்பை நாடு எதிர்கொண்டுள்ளது.

''மாணவர்களே இப்போராட்டத்தின் மையமாக உள்ளதனால் முன்னைய போராட்டங்கள் போன்று இதனை இலகுவில் அடக்க முடியாது. நாம் இன்று காணும் அல்ஜீரியா முற்றிலும் வேறுபட்டது. இப்போராட்டத்தின் தொடர்ச்சி நாட்டின் தலைவிதியை தலைகீழாக மாற்றி விடும் என்று நம்பப்படுகின்றது. இதனால், அதிர்ச்சியடைந்துள்ள ஆட்சியாளர்கள் பல்கலைக்கழகங்களை மூடிவருகின்றனர்'' என்கிறார் அல்ஜஸீராவின் அல்ஜீரியச் செய்தியாளர்.

தேசிய விடுதலை முன்னணி எனப்படும் ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் மக்கள் பக்கம் நிற்பது அதிகார வர்க்கத்திற்கு இன்னும் குலை நடுக்கத்தை உருவாக்கியுள்ளது. ஆட்சி முறையை மாற்றியமைப்பேன், எனது பதவிக் காலத்தைக் குறைப்பேன் என்றெல்லாம் கடந்த காலங்களில் பூதப்லிகா வழங்கிய வாக்குறுதிகளை இதற்கு மேலும் நம்புவதற்கு மக்கள் தயாரில்லை. ஆளுங் கட்சி உறுப்பினர்களில் சிலர் இளைஞர்களின் எதிர்ப்புப் பொராட்டத்தில் நேரடியாகவே பங்கு கொண்டுள்ளனர்.

1990 களில் அல்ஜீரியாவில் இடம்பெற்ற சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் அரும் பாடுபட்டவர் பூதப்லிகா. இதுவே அவருக்கு மக்கள் அளித்த ஆதரவின் பின்னணியாகும். ஆனால் 20 ஆண்டு கால அவரது ஜனாதிபதிப் பதவியில் நான்கு முறையும் மக்கள் ஏமாற்றமே அடைந்தனர். வேலையற்ற இளைஞர்களின் தொகை வேகமாகப் பெருகிய அல்ஜீரியாவில் எண்ணெய் வளமும் இயற்கை எரிவாயுவும் குறிப்பிட்ட அளவு கிடைக்கின்ற போதும் ஊழல் மோசடி மிக்க அரசாங்கத்தினால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உட்பட்டது.

ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றிற்கும் பொதியளவு இடம் வழங்கப்படவில்லை. பூதப்லிகாவின் ஆட்சியில் மக்களுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. அவரது இராணுவப் பரிவாரம் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் பூதப்லிகா தொடர்ந்தும் ஆட்சிக்கு தகுதியானவராகவே உள்ளார் என்று அறிக்கை விட்ட போதும் மக்கள் அதனை நம்பத் தயாரில்லை.

2011 இல் பிற வடஆபிரிக்க முஸ்லிம் நாடுகளான தூனிசியா, லிபியா என்பவற்றில் எற்பட்ட அறபு வசந்தம் தவிர்க்க முடியாத ஆட்சி மாற்றத்திற்கு இட்டுச் சென்றது. பூதப்லிகாவின் அல்ஜீரியாவிலும் அறபு வசந்தம் கிளர்ந்தபோதும் அது திட்டமிட்ட முறையில் அடக்கப்பட்டு பூதப்லிகாவினால் அதிகாரத்தில் நீடிக்க முடிந்தது.

மற்றொரு ஆபிரிக்க நாடான மொரிட்டானியா மற்றும் எகிப்தில் இராணுவக் கொடுங்கோலர்கள் கையாண்ட அடக்கு முறை வடிவங்களை பூதப்லிகா அல்ஜீரியாவில் கையாண்டார். அதன் மூலம் ஆட்சியைத் தக்கவைப்பதற்கு வசதியாக இருந்தது. இப்போது நிலைமை முற்றிலும் மாறி விட்டது. எதிர்வரும் தேர்தலில் பூதப்லிகாவினால் களமிறங்க முடியாமா என்ற தீர்மானமொன்றை அந்நாட்டின் அரசியலமைப்புச் சபை வெளியிடவுள்ளது. அத்தீர்மானம் எதுவாக இருந்தாலும் அப்துல் அஸீஸ் பூதப்லிகாவை ஐந்தாவது முறையாகவும் ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ளும் நிலையிரல் மக்கள் இல்லை. இதற்குப் பல காரணங்கள் உள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் பெருந்தொயையான அல்ஜீரிய மூளைசாலிகள் பிரான்ஸில் தஞ்சமடைந்துள்ளனர். ஏற்கனவே பிரான்ஸின் குடியேறியுள்ள அல்ஜீரிய இளைஞர்கள் அங்கு தொழில் வேண்டி கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அல்ஜீரியாவின் காலனித்துவ நாடான பிரான்ஸ் பூதப்லிகாவின் அரசாங்கத்தை தொடர்ந்தும் வழிநடாத்தி வருகின்றது. எல்லாவற்றுக்கும் அப்பால் அல்ஜீரியாவின் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை திறமையாகக் கையாளும் நிலையில் அப்துல் அஸீஸ் இல்லை. அவர் உடல் ரீதியிலும் உள ரீதியிலும் பலவீனப்பட்டு இருக்கின்ற நிலையில் ஒரு வயது முதிர்ந்தவர் தம்மை ஆள்வதை அவர்கள் விரும்பவில்லை. ஆனால், மக்கள் ஆர்ப்பாட்டத்தின் எதிர்ப்புக் கோஷங்களை நோக்கும்போது லிபியாவின் கடாபி மற்றும் தூனிசியாவின் பின் அலி போன்றோருக்கு நேர்ந்தது போல் அப்துல் அஸீஸ் பூதப்லிகாவின் காலமும் முடிந்து விட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. எதிர்வரும் நாட்கள் இதனை உறுதி செய்யப் போகின்றன.

## யார் இந்த அப்துல் அஸீஸ் பூதப்லிகா?

ஜனாதிபதி அப்துல் அஸீஸ் பூதப்லிகா 1937 மார்ச் 02 இல் மொரோக்கோ நகரமான வுஜ்தாவில் பிறந்தார். இந்நகரம் மேற்கு அல்ஜீரியா மற்றும் மொரோக்கோ எல்லைப் புறத்தில் அமைந்துள்ளது. 1956 ஆம் ஆண்டில் தனது 19 ஆவது வயதில் தேசிய விடுதலை இராணுவத்தில் இணைந்தார். இது பிரான்ஸின் காலனித்துவத்திற்கு எதிராக உருவாக்கப்பட்ட தேசிய விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகும்.

அப்போது மொரோக்கோவை தளமாகக் கொண்டிருந்த தேசிய விடுதலை இராணுவத்தின் தளபதி ஹுவாரி பூமதைனின் நம்பிக்கையை வென்ற பூதப்லிகா இராணுவ உயர் பதவிகளைப் பெற்றார். 1965 இல் இரத்தம் சிந்தாப் புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றியவர் பூமதைன். 1962 இல் அல்ஜீரியா சுதந்திரம் பெற்ற பின்னர் தேசிய விடுதலை இராணுவத்தின் மொரோக்கோ எல்லைப் பிரிவு மேற்கு மாநிலத்தைக் கட்டுப்படுத்தியது.

ஜனாதிபதி அஹ்மத் பின் பெல்லா வின் ஆட்சிக் காலத்தில் தனது 25 ஆவது வயதில் இளைஞர் விளையாட்டு மற்றும் உல்லாசத் துறை அமைச்சராக அப்துல் அஸீஸ் பூதப்லிகா பதவி யேற்றார். 1963 இல் உலகத்தின் மிக இளவயது வெளிவிவகார அமைச்சராக பூதப்லிகா மாறினார். இந்த உலக சாத னையை இதுவரை யாரும் முறியடிக்க வில்லை. வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்றபோது அவருக்கு வயது 32.

சேகுவரா மற்றும் நெல்சன் மண்டேலா ஆகியோரின் ஆளுமைக் கவர்ச்சிக்கு உட்பட்ட பூதப்லிகா, தன்னை ஒரு பெரும் இடதுசாரியாகவே அறிவித்தார். 1965 பின் பெல்லாவின் ஆட்சியை ஹவாரி பூமதைன் கவிழ்த்தன் பின்னரும் பூதப்லிகா தொடர்ந்தும் வெளிவிவகார அமைச்சராக விளங்கினார்.

1967 இல் நடந்த அறபு இஸ்ரேல் 6 நாள் யுத்தத்தின் போது அமெரிக்காவுடனான ராஜதந்திர உறவுகளை பூதப்லிகா முறித்துக் கொண்டார். அமெரிக்காவை ஒரு ஏகாதிபத்திய நாடு என்று கடுமையாக விமர்சித்தார். மூன்றாவது அகிலத்தை கனவு கண்ட ஓர் அணிசேரா தலைவராகவும் பூதப்லிகா பார்க்கப்படுகிறார்.

சோவியத் யூனியன் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான பனிப்போரிலிருந்து அவர் விலகியிருந்தார். 1974 இல் ஐ.நா. பொதுச் சபையின் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அதை அடுத்து முதன் முறையாக உலகத் தலைவர்களுக்கு ஐ.நா.வில் உரையாற்றுமாறு யாஸிர் அறபாத்துக்கு அழைப்பு விடுத்தார்.

1978 இல் ஹவாரி பூமதைன் மரணித்ததை அடுத்து பூதப்லிகாவின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்ட அவர், 1981 இல் அல்ஜீரியாவிலிருந்து வெளியேறினார். முதலில் சுவிட்சர்லாந்திலும் பின்னர் ஐக்கிய அறபு அமீரகத்திலும் தங்கியிருந்தார்.

1987 இல் நாடு திரும்பிய பூதப்லிகா தேசிய விடுதலை முன்னணியின் மத்திய குழுவில் அங்கத்துவம் பெற்றுக் கொண்டார். 1991 இல் நடை பெற்ற பொதுத் தேர்தலில் இஸ்லாமிய விடுதலை முன்னணி வெற்றி பெற்றது. ஆயினும், தேசிய விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவு அத்தேர்தல் வெற்றியைப் பகிஷ்கரித்ததோடு, தேர்தல் முடிவை ரத்துச் செய்தது.

அப்பாஸ் மதனி தலைமையிலான இஸ்லாமிய மீட்பு முன்னணி பெற்ற வெற்றி ஜனநாயகபூர்வமானது. ஆயினும், பல்வேறு இராணுவ அதிகாரிகள் அதனை ஏற்க மறுத்தனர். 1994 இல் ஏற்கனவே இருந்து வந்த அரசாங்கத்திற்கு எதிராக இராணுவத்தைச் சேர்ந்த பலர் சிவில் யுத்தமொன்றைத் தொடங்கினர். அப்போது பூதப்லிகாவிடம் ஜனாதிபதிப் பொறுப்பு வழங்கப்பட்டது. தொடக்கத்தில் அதனை மறுத்த பூதப்லிகா பின்னர் அதனை ஏற்றுக்கொண்டார்.



அஹ்மத் பின் பெல்லா ஹவாரி பூமதைன்

பூதப்லிகாவின் 20 ஆண்டு கால ஆட்சியில் முதல் ஐந்தாண்டுகள் நாடு சிவில் யுத்தத்தை எதிர்நோக்கியிருந் தது. அவற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அவர் பெரும் பாடு பட்டார். வெளிநாடுகளுடனான ராஜதந்திர உறவுகளை வளர்த்துக் கொண்டு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உழைத்தார்.

2004 முதல் 2014 வரையான காலப் பகுதியில் பெற்றோலின் விலை அதிகரித்ததனால் அல்ஜீரியாவின் கீழ்க்கட்டுமான வசதிகளை அபிவி ருத்தி செய்வதற்கேற்ற சூழல் உருவா கியது. அல்ஜீரியாவில் பாதைகள், விமான நிலையங்கள், கட்டியெழுப்பப்பட்டன.

எவ்வாறாயினும், இக்கட்டுமானங்களினால் பயனடைந்தது பூதப்லிகாவின் குடும்பமே என்ற விமர்சனம் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் உள்ளது. பூதப்லிகாவின் ஆட்சிக் காலத்தில் மக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு எவ்வளவோ வாய்ப்புகள் காணப்பட்டன. ஆனால் அது எதுவும் நடைபெறவில்லை என்கிறார் பத்திரிகையாளர் ஹஸன் ஹஊலி.

அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி தம் வசம் வைத்திருந்தார். அரச நிறுவனங்களைப் பலவீனப்படுத்துவதற்கும் பாராளுமன்றத்தைக் கட்டுப்படுத்துவதற்குமே பூதப்லிகா முயன்றார். பல அமைச்சர்கள் அவரது எடுபிடிகளாக இருந்தனர். தேர்தல்கள் இடம்பெற்றாலும் ஒரு வகை சர்வாதிகார ஆட்சி முறையே நாட்டில் நிலவியது. இதற்கான ஒரே சான்று 20 ஆண்டுகள் அவர் பதவியில் இருந்ததுதான் என்கிறார் ஹஸன் ஹஊலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எந்தத் தலைவர் வந்தாலும் எவருமே இனவாதச் செயற்பாடுகளைச் செய்து தான் ஆட்சிக் கதிரையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்கு நாடு ஆளாகியிருக்கிறது என்பதை அண்மைக் காலத் தலைவர்களின் செயற்பாடுகள் காட்டி வருகின்றன. மஹிந்த ராஜபக்ஷ தமிழர் மீது சிங்கள இனவாதம் கொண்டிருந்த பற்றினை முஸ்லிம்கள் மீது திருப்பி விட்டதைத் தொடர்ந்து அது அளுத்கமை தீப்பற்றி எரிவது வதை தொடர்ந்தது. இதற்கு உடனடியாக நஷ்டஈடு வழங்குவதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததோடு, இது தன்னையும் மீறி நடந்த செயல் என்று அவர் காரணமும் கற்பித்தார்.

மைத்திரி-ரணில் அரசாங்கமும் இனவாதிகளின் செயற்பாடுகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கவில்லை. நல்லாட்சி எனச் சொல்லப்பட்ட ஆட்சியிலும் கிந்தொட்டை, அம்பாறை, திகன எனச் சம்பவங்கள் நீளத் தான் செய்தன. இதற்கு அரசாங்கம் எந்தக் காரணங்களையும் முன்வைக்கவில்லை என்பதற்கு அப்பால், திகன வன்முறைகளை அரசாங்கமே முன்னின்று நடத்தியது என்பதற்கு ஏராளமான தடயங்கள் அங்கு இன்னும் இருக்கின்றன. இதனை நிரூபிப்பதில் திகன மக்கள் ஒரு வருடம் கழிந்த பின்னும் உறுதியாகவிருக்கிறார்கள் என்பது அவர்களைச் சந்தித்தபோது தெரிந்தது.

அரசாங்கம் இதற்கு நியாயம் பெற்றுத் தர மாட்டாது என்ற அளவில் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்த நிலையிலேயே அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவை நாடியிருக்கிறார்கள். ஏன் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்தார்கள்? ஹிஜ்ராபுர பள்ளிவாசலில் கடமையாற்றுகின்ற தோப்பூரைச் சேர்ந்த மௌலவி அப்துல் ஹமீத் ரமீஸ் சொல்லும் தகவல்கள் மக்கள் அவநம்பிக்கை இழந்ததன் மீதுள்ள நியாயத்தை எடுத்துக் காட்டுகின்றன.

அஸர் தொழுகையின் பின்னர் நாங்கள் பள்ளிவாசலில் இருந்தபோது சப்பாத்துக் கால்களுடன் பள்ளிவாசலுக்கு வந்த இராணுவத்தின் STF பிரிவினர், வணக்கத்தில் (இபாதத்தில்) ஈடுபட்டுக் கொண்டிருந்த எங்களை பள்ளிவாசலுக்குள் வைத்தே தாக்கினார்கள். என்னையும் இன்னுமொருவரையும் பள்ளியில் இருந்து இழுத்துச் சென்றார்கள். வழியில் வைத்து என்னிடம் இரும்புப் பொல்லு ஒன்றையும் அடுத்தவரிடம் அரிவாள் ஒன்றையும் தந்து கையில் வைத்துக் கொள்ளச் சொன்னார்கள். நாங்கள் ஏன், எதற்கு என்று கேட்டு அதனைக் கீழே விட்ட பொழுது எங்களைத் தாக்கினார்கள்.

சற்றுத் தொலைவில் கூட்டமாக இருந்த இராணுவத்தினரிடம் எங்களை அழைத்துச் சென்று இவர்கள் பள்ளிவாசலில் ஆயுதம் வைத்திருந்தார்கள் என்று முறைப்பாடு எழுத முயற்சித்தார்கள். நாங்கள் அதனை மறுத்ததோடு, தேவையென்றால் பள்ளிவாசலின் CCTV கமெராவை செக் பண்ணிப் பாருங்கள் என்று சொன்னவுடன் பெரியவர் கண்ணைக் காட்டவே, அவர்கள் எங்களை விட்டு விட்டார்கள் என்று கூறுகின்ற ரமீஸ் மௌலவி, இபாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது எங்களைத் தாக்கிய இராணுவத்தினர் தொடர்பிலான வீடியோ காட்சிகள் எங்களிடம் இருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

இனி யாரிடம் போய் முறையிடுவது? இது பற்றி அப்துல் பாஸித்துடைய தந்தை குறிப்பிடும் போது, வீடு தீக்கிரையாக்கப் பட்டதைக் கேள்விப்பட்டு வீட்டைப் பார்க்க வந்த என்னுடைய மகன் பயாஸ், நெருப்பிலே விழுந்து கைகளில் சதைகள் எல்லாம் முற்றாக எரிந்து எலும்புகள் வெளித் தெரிய உடம்பில் தீப்பற்றிய நிலையில் என்னைக் காப்பாற்றுங்கள், உள்ளே அகப்பட்டிருக்கின்ற என்னுடைய தம்பியைக் காப்பாற்றுங்கள் என கூச்சலிட்டார். கூட்டத்துடன் இருந்த பொலிஸார் உட்பட தாக்குதலுக்குத் திரண்டிருந்த எவருமே இவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கவில்லை. முடிவில் உடம்பு பற்றியெரிந்து கொண்டிருந்த பயாஸ், தீயை அணைப்


தீக்கிரையாக்கப்பட்ட பள்ளிவாசல் இன்னும் திருத்தப்படாமல் உள்ளது


அப்துல் பாஸித்தின் தந்தை

# திகன: சாம்பலுக்குக் கீழால் இன்னும் நீளும் தீ நாக்குகள்



தாக்குதல் நடத்தியவர்களை உங்களுக்குத் தெரியுமா என்று பர்ஹான் ஹாஜியாரிடம் வினவினோம். பற்றி எரிந்த கடைகளில் அவருடைய கடை பெரியது. எங்களுக்கு மட்டுமல்ல, முழு உலகுக்குமே தெரியுமே. தாக்குதல் நடத்திய போதே எடுக்கப்பட்ட வீடியோக்கள் உலகெங்கிலும் பார்க்கப்பட்டன. தாக்குதல் நடத்தியவர்களை அதிலே இலகுவாக அடையாளம் கண்டுகொள்ள முடியும். இப்படியிருக்கும் போது நாங்கள் முறைப்பாடு செய்துதான் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றில்லையே. ஆனால் அரசாங்கம் இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறினார்.

தும்பர பேக் ஹவுஸ் முகாமையாளராகப் பணிபுரியும் எம்.ஏ.எம். ராபிக், கடைகளை உடைத்து விட்டு ஓடி வருகின்ற போது வழி தவறிய ஆறேழு பேரை தெல்தெனிய செல்வதற்கான பஸ்ஸில் ஏற்றி உதவியதாகக் கூறினார். ஆயிரக்கணக்கில் ஈசல்கள் போல ஆட்கள் நிறைந்திருந்தார்கள். பக்கத்தில் பலாக்காய் விற்றுக் கொண்டிருந்த சிங்களப் பெண்மணி அக்ரம் ஸ்டோர்ஸுக்கு கல்லெறிவதைக் கண்டோம் என்று கூறினார்.

தெரியாதவர்களல்ல, நான் தூக்கி வளர்த்த அமித் வீரசிங்கவிலிருந்து என்னுடைய வீட்டைச் சுற்றியிருந்தவர்களே தாக்க வந்தார்கள். அவர்களில் பலர் நான் நன்கறிந்தவர்கள். எனக்குக் கடன் தர வேண்டியவர்களும் அவர்களில் இருந்தார்கள். இப்பொழுதும் முகம் பார்க்க முடியாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்கிறார்கள் என்கிறார் கெங்கல்ல பள்ளிவாசலுக்கு முன்னால் நுஸ்ரா ஸ்டோர்ஸ் நடத்திவரும் ஜெய்னுலாப்தீன் முஹம்மத் நியாஸ்.

சந்தித்தவர்கள் பலரிடமும் நீங்கள் தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் செய்யவில்லையா என்று கேட்டுப் பார்த்ததில் பலரும் முறைப்பாடுகளை முறையாகப் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனாலும் இந்த முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸார் எந்த நடவடிக்கையும் இந்த ஓராண்டுக்குள் எடுக்கவில்லை என்று அவர்கள் கூறினார்கள். எனவே நாங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தோம் என்று சொல்லும் கொல்லப்பட்ட அப்துல் பாஸித்துடைய தந்தை, அவர்களும் கூட எங்களுக்கு நியாயம் பெற்றுத் தரவில்லை என்று கூறினார்.



**தெரணிகல சந்த விமல தேரர் -**
**ஸ்ரீ இந்தசார விகாரை, ஹிஜ்ராபுர, எல்லேபுர**

தற்போது சுமுகமான நிலையே காணப்படுகிறது. எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர். இனரீதியாக அல்லாமல் அன்று எப்படி இருந்ததோ அதுபோல் வழமையான வாழ்க்கையில் மக்கள் ஈடுபட்டுள்ளனர். தனிப்பட்ட காரணங்களுக்காக ஓரிருவருக்கிடையில் பிரச்சினை இருக்கலாம். ஆனால் முழுமையாக நோக்கினால் இங்கு இனரீதியான பிரச்சினைகள் இல்லை. இதன் பிறகு இது போன்ற சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

சீனாவை எடுத்துக்கொண்டால் அந்த நாட்டில் பாரம்பரிய தனித்துவமான முஸ்லிம்கள் இருப்பதைக் காணலாம். இலங்கையிலும் பாரம்பரிய தனித்துவம் மிக்க முஸ்லிம்கள் உள்ளனர். ஆனால் அவர்களுள் 90 வீதமானவர்களிடமே இலங்கை முஸ்லிம்கள் என்ற உணர்வு காணப்படுகின்றது. தமிழ் மக்களில் 95 வீதமானவர்களும் சிங்கள மக்களில் 90 வீதமானவர்களுமே இந்த உணர்வை கொண்டிருப்பார்கள். எனவே இம்மூன்று சமூகத்திலுமாக இலங்கை வாழ் மக்கள் என்ற உணர்வற்றவர்கள் 25 வீதம் இருக்கிறார்கள். இவர்களே இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். இவர்களே சமூகங்களுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். ஏனைய பெரும்பான்மையான மக்கள் இவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

திகனயில் இடம்பெற்ற சம்பத்திற்குப் பின்னர் முஸ்லிம்களுக்கு அதிகமான உதவிகள் கிடைத்தன. ஆனால் முஸ்லிம்களுடைய கடைகளை அண்டி சிறு பெட்டிக்கடைகளில் வெற்றிலைப் பாக்கு விற்று வாழ்க்கையை ஓட்டி வந்த சிங்கள வியாபாரிகளுக்கு எவ்வித நிவாரணங்களும் கிடைக்கவில்லை. அவர்களது உள்ளங்களில் தமக்கு எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லையே என்ற ஏக்கம் இருந்து வருகிறது.

அதுபோன்று சிறிய வியாபாரங்களில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் வியாபாரிகளுக்கும் எவ்வித நிவாரணங்களும் வழங்கப்படவில்லை. இந்த விவகாரத்தில் சட்ட ரீதியான பக்கத்தை நோக்கும் போது பொலிஸார் சண்டைபிடித்தவர்களை மாத்திரமல்லாமல் அருகிலிருந்தவர்களையும் கைதுசெய்து அழைத்துச் சென்றிருக்கிறார்கள். பார்வையாளராக இருந்த மக்களும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடுக்கப்பட்ட சம்பவங்களும் உள்ளன. இப்படிப் பல சிங்கள மக்களுக்கு நடந்திருக்கிறது. எனவே திகன சம்பவத்தில் ஒரு சிலருக்கு சட்ட ரீதியாக அநீதி இடம்பெற்றிருக்கிறது என்ற கருத்துள்ளது.

இதுதவிர இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்தும் போது முஸ்லிம் தலைவர்கள் இவ்விவகாரத்தை உடனடியாகவே சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்கள். நாடெனும் வகையில் இந்த விடயம் எமக்குப் பாதிப்பாக அமைந்தது. அரசியல்வாதிகளின் குறைபாடுகளாலேயே இந்த விடயம் பூதாகரமானது என்பது எனது தனிப்பட்ட கருத்து. எமக்கு மத்தியிலான அன்னியோன்ய உறவும் படிப்படியாகக் குறைந்து வருவதை காண முடிகின்றது.

முன்பு சிங்கள முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்ந்தார்கள். அடுத்தவர்களது வீடுகளுக்குச் சென்று வந்தார்கள். ஒன்றாகச் சாப்பிட்டார்கள். ஆனால் தற்போது ஒரு சாரார் உணவு தந்தால் அடுத்த சாரார் அந்த உணவு குறித்துப் பயப்படுகிறார்கள். தற்போதைய முஸ்லிம் சமூகம் முற்றிலும் வித்தியாசமானது. ஆடைகளிலும் வித்தியாசத்தைப் பேணுகிறார்கள். அரேபிய முறைப்படி அணிவதற்கு ஒரு சில குழுக்கள் முஸ்லிம்களை பழக்கப் படுத்திவிட்டன. இப்படியான மாற்றங்கள் குறித்து மற்றைய சமூகங்களுக்கு சந்தேகம் ஏற்பட ஆரம்பித்தது. இது முன்பும் இருந்தது. ஆனால் பிரச்சினை ஏற்படவில்லை. இன்றும் உள்ளது. ஆனால் பிரச்சினை ஏற்படுகிறது.

1952இல் இந்திய அடிப்படையைக் கொண்ட தமிழர்களுக்கு இங்கு இடமளிக்கப்பட்டது போல 1947 - 1949 காலப்பகுதியிலேயே பாகிஸ்தானை அடிப்படையாகக் கொண்ட முஸ்லிம்களுக்கு எமது நாட்டின் சட்டத்தின்படி பிரஜாவுரிமை வழங்கப் பட்டது. அப்போது அவர்களுக்கு முறையான வாழுமிடங்கள் இருக்கவில்லை. கிடைக்கும் இடங்களில் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டார்கள். பௌத்த விகாரை, சிங்களவர்களின் இடம் என்று அவர்கள் அப்போது பார்க்கவில்லை.

பிற்பட்ட காலத்தில் இவர்களது இந்த இருப்பிடங்கள் தொடர்பில் சிங்கள சமூகத்திடம் தமது உரிமைகள் குறித்த கதையாடல்கள் மேலெழ ஆரம்பித்தன. கூரகல, மிரிஸ்ஸ, சோமாவதிய, அம்பாறை போன்ற பகுதிகளில் பௌத்தர்களின் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் காணப்படுகின்றன. அன்று பௌத்த தொல்பொருள் இடங்களில் வதிவிடங்களை அமைத்துக் கொண்ட முஸ்லிம் மக்களை இப்போது அங்கிருந்து போகச் சொல்வது நியாயமல்ல; அன்றே அதைச் செய்திருக்க வேண்டும். அம்மக்களுக்கு வேறு இடங்கள் வழங்கப்பட்டு, வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும். திடீரென அனுப்ப முடியாது. என்னையும் கூட திடீரென இங்கிருந்து வெளியேற்றினால் பிரச்சினையே ஏற்படும்.

ஒரு சமூகம் பாரம்பரியமாக வாழ்ந்த இடத்திலேயே அவர்களுக்கான சூழல், சமூக பொருளாதார விடயங்களை தகவமைத்துக்கொள்கின்றன. முஸ்லிம்கள் தாம் வாழும் இடங்களில் உள்ள தொல்பொருட்களை அழிப்பதாக ஒரு கருத்து ஓரளவுக்கு மேலெழுந்தது என்பதையும் குறிப்பிட வேண்டும். நாட்டின் ஆட்சி பீடமே இதுபோன்ற இடங்களைப் பாதுகாக்கும் திட்டங்களை வகுக்க வேண்டும். வடக்கு கிழக்கு மற்றும் கூரகல போன்ற இடங்களில் பிரச்சினை ஏற்பட்டது.

ஆரம்பத்தில் இங்கு வந்த மக்கள் அவை தொல்பொருட்கள் என்று அறியாமல் அங்கு போய் குடியமர்ந்திருக்கிறார்கள். காலப்போக்கில் அங்குள்ள தொல்பொருட்கள் அழிக்கப்படும் போதே இது தொல்பொருள் இடம், அங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்கின்ற கருத்துக்களை மேலெழுப்புகிறார்கள். உரிய நிர்வாகக் கட்டமைப்பு இன்மையே இனங்களுக்கிடையிலான பிரச்சினைக்கு காரணமாகும்.

இந்த நாட்டிலுள்ள அனைத்து இனங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு தனி இனத்திற்கு மாத்திரம் ஒரு நாட்டில் வாழ முடியாது. மக்கள் இனங்களாக கலந்தே வாழ்கிறார்கள். அறபு நாடுகளிலிருந்து வந்த வியாபாரிகள் மற்றும் கூலிப்படையினர் சிங்களப் பெண்களை திருமணம் முடித்தே இனத்தை பெருக்கியுள்ளனர். இங்கு இனக்கலப்பு உள்ளது. காலத்திற்கு காலம் மக்கள் மாறுகிறார்கள். ஆனால் நாட்டின் பல்வகைமையோடு மக்களின் கலாச்சாரம் மாறவில்லை. கலாச்சார மாற்றத்திற்கான முறையான தேசிய கொள்கை வகுக்கப்படவில்லை.

வெள்ளையர்களின் காலத்தில் ஏற்பட்ட மதச்சீரழிவிலிருந்து தத்தமது மதங்களை காப்பாற்ற முன்னைய அறிஞர்கள் தனித்துவமான பாடசாலைகளையும் வழிபாட்டிடங்களையும் (பக். 15)




பதற்காக பாதையில் உருண்டிருக்கிறார். அதன் பின்னரே பொலிஸ் வாகனத்தில் அவரை ஏற்றிக் கொண்டு போய் வைத்தியசாலையில் சேர்த்தார்கள் என்று கூறுகிறார். எனவே தாக்குதல் நடத்திய கூட்டத்தினருடன் பொலிஸாரும் இருந்தார்கள் என்பதற்கு அவர் சாட்சியமளிக்கிறார்.

எங்கோ ஒருவர் உண்ண உணவின்றி முருங்கை இலையை அவித்துச் சாப்பிடுகின்றார்கள் என்று கேள்விப்பட்டதனை விசாரிப்பதற்காக குழுவொன்றை நியமித்த ஜனாதிபதி, திகன தாக்குதல்கள் தொடர்பாக எந்த வித விசாரணைக் கமிஷன்களையும் இதுவரை நியமிக்கவில்லை. இந்த நிலையில் காமினி ஜயவீர தலைமையிலான கண்டி மாவட்ட சர்வமதக் கமிட்டியினர் சுயேச்சையாக முன்வந்து நியமித்த உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு தயாரித்துள்ள அறிக்கையில் வாக்கு மூலம் அளித்திருப்பவர்கள் பலரும் பொலிசார் தாக்குதல் நடத்தியவர்களுக்கு உதவியமை தொடர்பில் சாட்சியமளித்ததை பதிவு செய்திருக்கிறார்கள்.

இதுதான் அரசாங்கம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்று இப்பிரதேச மக்கள் நம்புகிறார்கள். அப்படியானால் அரசாங்கம் நல்லுறவைப் பேணுகின்ற இஸ்ரேல், இந்தியா, சீனா போல இலங்கையும் முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத நாடாக மாறிவருகிறதா என்ற கேள்வியை இது எழுப்புகிறது. அந்த வகையில் திகனையைத் தொடர்ந்து நடைபெறுகின்ற நிகழ்வுகள் அனைத்தையும் முஸ்லிம்களுக்கு எதிரான அரசாங்கத்தின் திட்டமிட்ட இனவாதச் செயற்பாடாகப் பார்ப்பதற்கு முஸ்லிம் சமூகம் பழக்கப்பட்டுப் போயிருக்கிறது.

திகனயில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஓராண்டு நிறைவடைகின்ற நிலையில் தாக்குதலுக்குள்ளான பேகரிக்கு அருகிலுள்ள ஸ்ரீ ராஜவாலுகாராமய விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 150 அடி உயரமான புத்தர் சிலை நாளை மறுதினம் (17) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. (பக். 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rubik's Cube போட்டியில் சர்வதேச அரங்கில் அப்துல் அஸீஸ் சாதனை

• அனஸ் அப்பாஸ்

05.05.2005 இல் குவைத் நாட்டில் பிறந்த செல்வன் அப்துல் அஸீஸ் குவைத் நாட்டில் வசித்து வரும் இலங்கையைச் சேர்ந்த ஸிமாயா ரஹ்மத்துல்லாஹ் - ஹரீஸ் ஸாலிஹ் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவார். நாடு கடந்தும் இவர் இலங்கையின் பெயரை சர்வதேச அரங்கில் மிளிரச் செய்திருக்கின்றார். இவரது சாதனை குறித்து இப் பத்தி பேசுகின்றது.

WCA (World Cube Association) எனப்படும் அமைப்பு உலகளாவிய ரீதியில் Cube போட்டிகளை தொடராக நடாத்தி வருகிறது. வருடா வருடம் உலகின் ஒவ்வொரு பகுதியிலும் இப்போட்டிகள் நடாத்தப்பட்டு போட்டியாளர்கள் தேசிய, சர்வதேச ரீதியில் தரவரிசைப்படுத்தப்படுகிறார்கள். 'Cube' களில் உள்ள பல வடிவங்களுக்கான போட்டிகள் தனித்தனியே நடாத்தப்பட்டு தரவரிசைப் படுத்தப்படுகிறது.

WCA மூலம் குவைத்தில் நடாத்தப்பட்டு வரும் Rubik's Cube போட்டியில் கடந்த இரண்டு வருடங்களாக அப்துல் அஸீஸ் ஹரீஸ் பங்கேற்றுள்ளார். 2017 ஆம் வருடப் போட்டியினது 3 x 3 பிரிவில் 28 செக்கன்களில் முடித்தார். அதன் பிறகு நிறைய பயிற்சிகள் செய்து 2018 ஆம் ஆண்டு டிஸம்பர் மாதம் நடாத்தப்பட்ட போட்டியின் 2x2, 3x3, 4x4, Pyramid, Skewb ஆகிய பிரிவுகளில் கலந்து கொண்டார். இப்போட்டியின் பல பிரிவுகளிலும் 26 நாடுகளைச் சேர்ந்த 60 போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். இவர்களில் அப்துல் அஸீஸ் இரண்டாவது இடத்தைப் பெற்றார்.

இதன் Skewb பிரிவில் 6.77 செக்கன்களில் முடித்து தேசிய மட்டத்தில் சாதனையும் படைத்து தாய் நாட்டுக்கு (இலங்கை) பெருமை சேர்த்துத் தந்துள்ளார். குவைத்துக்கான இலங்கை தூதுவர் கௌரவ காண்டீபன் பாலசுப்ர மணியம் அவர்கள் அப்துல் அஸீஸ் ஹரீஸை குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு அழைத்து கௌரவித்து உற்சாகமூட்டியுள்ளார்.

மேலும் குவைத்தில் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட Cube போட்டிகளிலும் இவர் வெற்றியீட்டியுள்ளார்.



தற்போது 13 வயதேயான இவர், 2015 ஆம் ஆண்டு 'MaRRS spelling bee' போட்டியில் குவைத்தில் தேசிய மட்டத்தில் தெரிவாகி துபாயில் நடாத்தப்பட்ட சர்வதேச மட்ட இறுதிச் சுற்றுக்கும் தெரிவாகியிருந்தார். பின்னர் அதிலிருந்து தெரிவாகி அபுதாபி சுற்றிலும் பங்கேற்றார்.

குவைத் Carmel Convent இல் தரம்-08 இல் கல்வி கற்றுவரும் இவர், இதுவரை புனித அல்-குர்ஆனில் 8 ஜுஸ்உக்கள் வரை மனனம் செய்துள்ளார். தனது தாய் மனனம் செய்து வருவதைப் போல் தனது மூன்றரை வயது முதல் குர்ஆன் மனனத்தை சிறிது சிறிதாக இவர் ஆரம்பித்துள்ளார். சிறு வயதிலேயே குர்ஆனை கற்க ஆரம்பித்த இவர் சிறந்த குரல் வளத்துடன் அதனை ஓதுவதுடன், அழகாக அதான் சொல்லக் கூடியவர் என இவரது தந்தை குறிப்பிடுகின்றார்.

அல்-குர்ஆன் மீதான அதீத அன்பினாலும், திறமையாலும் பாடசாலை மட்டம் முதல் தேசிய மட்டம் வரை குர்ஆன் போட்டிகள் பலவற்றில் இவர் முதலிடம் வென்றுள்ளார். மேலும், இவர் தனது வகுப்பில் ஒவ்வொரு வருடமும் 90 இற்கும் மேற்பட்ட சராசரியைப் பெற்று தொடர்ந்து (Over Greater என) கௌரவிக்கப்பட்டு வருகின்றார். காற்பந்து விளையாட்டில் இவர் சிறந்து விளங்குவதுடன், நீச்சல் போட்டிகளிலும் சான்றிதழ்களை வென்றுள்ளார்.

கல்வியிலும், விளையாட்டிலும், இதர துறைகளிலும் மிகவும் திறமை காட்டி பல



சான்றிதழ்களையும் பாராட்டுக்களையும் பெற்றிருக்கும் அப்துல் அஸீஸ், வானூர்தி பொறியியலாளராக (Aeronautical Engineer ஆக) வருவதே தனது இலக்கு என்கின்றார்.

வரலாற்றில் முதன் முறையாக Cube வகுப்பொன்றை குவைத் நாட்டில் அப்துல் அஸீஸ் ஆரம்பிக்க இருக்கின்றார். இதற்கு இவருக்கு குவைத் வாழ் இந்திய சகோதரர்கள் உதவுவதாக கூறியிருக்கின்றனர்.

''குவைத் நாட்டின் தேசிய கராரிபி குர்ஆன் மனனப் போட்டியில் இலங்கை மாணவன் ஒருவன் முதல் தடவையாக தெரிவாகி முதலிடம் வென்ற சாதனையை நிகழ்த்தியது அப்துல் அஸீஸினது மூத்த சகோதரர் அப்துல்லாஹ். அதுவே அப்துல் அஸீஸ் இத்துறையில் ஊக்கம் பெற்று தொடரான சாதனைகளை மேற்கொள்ள வித்திட்டது. அது போன்று Cube போட்டி, விளையாட் டுத்துறை என சகல விடயங்களிலும் அப்துல் அஸீஸ் இற்கு வழிகாட்டியவர் மூத்த மகன் அப்துல்லாஹ். அவர் தான் இவை அனைத்தையும் முதலில் முயற்சித்தவர். இரண்டாவது மகனின் அங்கீகாரங்களுக்கான நன்மைகள் மூத்த மகனுக்கு கட்டாயம் சென்றடையும் இன்ஷா அல்லாஹ்'' என தனது மகன் மாருக்கு இறைவன் வழங்கிய அருள்களை எண்ணி மகிழ்வடைகின்றார் தந்தை ஹரீஸ் ஸாலிஹ்.



தற்போது தகவல் தொழிநுட்ப முகாமையாளராக குவைத் நாட்டில் பணிபுரியும் அப்துல்லாஹ், அப்துல் அஸீஸ், அப்துல் அலீம் ஆகியோரின் தந்தை ஹரீஸ் ஸாலிஹ் அவர்கள் இலங்கையின் மாத்தறை-மீயெல்லை பகுதியைச் சேர்ந்த முன்னாள் விஞ்ஞான பாட ஆசிரியர் ஆவார். 1994 முதல் இவர் குவைத் நாட்டில் I.T. துறையில் பணிபுரிகின்றார். குவைத் வாழ் இலங்கை உறவுகளின் அமைப்பான இக்ரா இஸ்லாமிய சங்கம் (IIC) உறுப்பினராகவும் இருக்கின்றார். இவர்களது தாய் ஸிமாயா ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் வீரகெட்டிய யக்கஸ்முள்ளயைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரதும் அர்ப்பணிப்பும், சீரிய வழிகாட்டலுமே நாடு கடந்தும் இலங்கையின் பெருமையை இவர்களது பிள்ளைகளால் உலக அரங்கில் பறைசாற்ற முடிந்திருக்கின்றது.

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே அல்ஹம்துலில்லாஹ்! அன்பின் பெற்றோருக்கும், உடன்பிறப்புக்களுக்கும், குவைத் வாழ் சிநேகிதங்களுக்கும், இலங்கையில் இருக்கும் குடும்ப உறவுகளுக்கும், ஊர் மக்களுக்கும், தனது வெற்றியில் மகிழ்ச்சியுறும் நலன் விரும்பிகளுக்கும், இலங்கை மக்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றார் அப்துல் அஸீஸ்.

WCA நடாத்தும் Cube போட்டியில் 3 செக்கன்களில் உலகளாவிய சாதனையை நிகழ்த்த தற்போது தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டுவரும் அப்துல் அஸீஸ், மற்றும் அவரை உற்சாகமூட்டும் அவரது குடும்பத்தையும் உங்களது பிரார்த்தனைகளில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

**கடந்த இதழ் சாதனையாளர் பத்தியில் 18 வயது என்பதை 26 வயது என்று திருத்தி வாசிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம். தவறினைச் சுட்டிக் காட்டிய வாசகருக்கு நன்றிகள். (ஆ-ர்)**

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

## கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (14)

# ஆசிய பிராந்தியத்துக்கான பத்வாவுக்கும், வழிகாட்டலுக்குமான சட்ட மன்றத்தின் தேவை

### அறிமுகம்

கிழக்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளில் முஸ்லிம்கள், ஹிந்துக்கள், பௌத்தர்கள் ஆகியோர் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இப்பிராந்தியத்தில் சில நாடுகள் முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளாக உள்ளன. உலக முஸ்லிம் சனத்தொகையில் பெரிய இடத்தை வகிக்கும் இந்தோனேசியா இப்பிராந்தியத்தில் உள்ள ஒரு பெரிய நாடாகும். 261 மில்லியன் மக்களைக் கொண்ட இந்நாட்டில் முஸ்லிம்கள் 87 வீதமாக உள்ளனர்.

212 மில்லியன் மக்களைக் கொண்ட பாகிஸ்தான் இப்பிராந்தியத்தில் உள்ள மற்றொரு பெரிய முஸ்லிம் நாடாகும். இவர்களில் 94 வீதமானோர் முஸ்லிம்களாவர். இதுபோன்று பங்களாதேஷ் அடுத்த பெரிய முஸ்லிம் நாடாகும். இங்கு சுமார் 163 மில்லியன் மக்களில் 90 வீதமானவர்கள் முஸ்லிம்களாவர். அத்துடன் மாலைதீவு, மலேசியா, புரூனையிலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர்.

இவற்றில் பல நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்து வருகின்றனர். 2011 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் இந்தியாவில் சுமார் 172 மில்லியன் முஸ்லிம்கள் உள்ளனர். இது இந்திய சனத்தொகையில் முதலாவது பெரிய சிறுபான்மைச் சமூகமாகும். உலகில் மிகப் பெரிய முஸ்லிம் சிறுபான்மையினராக இந்திய முஸ்லிம்கள் உள்ளனர்.

இலங்கையைப் போன்று தாய்லாந்தில் ஓரளவு அதிகமாக முஸ்லிம்கள் உள்ளனர். சுமார் 10 வீதம் முஸ்லிம்கள் இவ்விரு நாடுகளிலும் காணப்படுகின்றனர். இலங்கையில் முஸ்லிம்கள் கிழக்குப் பிராந்தியத்தில் செறிவாக வாழ்வது போன்று தாய்லாந்தின் தென் பகுதியில் வாழ்கின்றனர்.

அத்துடன் சிங்கப்பூர் இப்பிராந்தியத்தில் முக்கியமான நாடாகும். இது பொருளாதார ரீதியில் வளர்ந்த ஒரு நாடாகப் பார்க்கப்படுகின்றது. இங்கு வாழும் சுமார் 5.6 மில்லியன் மக்களில் 14 வீதம் முஸ்லிம்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மற்றும் பூட்டான், நேபாள், கம்போடியா, மியன்மார், லாவோஸ் போன்ற நாடுகளில் மிகக் குறைவான முஸ்லிம்கள் உள்ளனர். இவ்வகையில் உலக முஸ்லிம் சனத்தொகையில் இப்பிராந்திய முஸ்லிம்களின் வகிபாகம் அதிகமாக இருப்பதைக் காணலாம்.



### ஒருமித்த பல அம்சங்கள்

இந்த அனைத்து நாடுகளிலும் பல ஒத்த விடயங்கள் உள்ளன. உலக சனத்தொகையில் கிறிஸ்தவர்கள் அதிகமாக இருந்தாலும் இப்பிராந்தியத்தில் அவர்கள் விகிதாசாரத்தில் குறைந்த எண்ணிக்கையில் உள்ளனர்.

இப்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்கு மத்தியில் மதத்திற்கு முக்கியத்துவம் உள்ளது. மஸ்ஜித்கள், கோவில்கள், பன்சலைகள் அதிகமாக இருக்கின்றமை இதற்கான அடையாளங்களில் ஒன்றாகும். ஆனால் இன்று நாஸ்திக மற்றும் மதச்சார்பில்லா சிந்தனைகள் வளர்ந்து வருவதை அவதானிக்க முடியுமாக உள்ளது.

ஒப்பீட்டு ரீதியில் இப்பிராந்தியம் இன மோதலற்ற பகுதியாகும். ஆங்காங்கு சிறு இன ரீதியான பிரச்சினைகள் இருந்தாலும் மக்கள் அமைதியாக வாழும் இடங்களே இங்கு அதிகமாக உள்ளன.

### பிராந்திய முஸ்லிம்களுக்கான சட்ட மன்றத்தின் அவசியம்

இஸ்லாம் மனித சமூகத்திற்கு அருளப்பட்ட மார்க்கமாகும். முஹம்மத் (ஸல்) அவர்கள் முழு உலகத்தாருக்கும் அருளாக அனுப்பப்பட்ட தூதராவார். அல்குர்ஆன் அனைத்து மனித சமூகத்திற்கும் வழிகாட்டுகின்றது. அவர்கள் எதிர்கொள்ளும் அனைத்து வகையான பிரச்சினைகளுக்கும் அது தீர்வு சொல்கின்றது.

எனவே இப்பிராந்தியத்தில் முஸ்லிம்களாக வாழும் நாம் எப்படி தஃவா சமூகமாக வாழலாம். இங்குள்ள பௌத்த, இந்து மற்றும் ஏனைய மக்களுக்கு மத்தியில் இஸ்லாத்தை, நாகரிகத்தை தோற்றுவிக்கும் தூதாக நாம் எப்படி முன்வைக்க முடியும்? மக்கள் இன்று எதிர்நோக்கும் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பிரச்சினைகளுக்கு இஸ்லாம் எப்படித் தீர்வாக அமையலாம்?

முஸ்லிம் சமூகம் சிறுபான்மையாக வாழும் இப்பிரதேச நாடுகளில் அடுத்த சமூகங்களுடன் கரைந்து விடாமல் கலந்து வாழ வேண்டும், எந்த இடங்களில் இணைந்து வாழ முடியும், இஸ்லாம் சொல்லும் தனித்துவங்கள் எவை என்பது பற்றியும் சிந்திக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

குறிப்பாக முஸ்லிம் சிறுபான்மை நாடுகள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதுடன், தேச அபிவிருத்தியில் பங்காளிகளாகப் பணியாற்றுவது காலத்தின் கடமையாக உள்ளது. தான் வாழும் நாட்டை மேம்படுத்த உழைப்பது கடமை என இஸ்லாம் கூறுகின்றது.

ஒதுங்கிய, மூடுண்ட சமூகமாக இல்லாது, முன்மாதிரியான சமூகமாக எப்படி வாழலாம், பிறர் தாக்கத்திற்கு உட்படுவோராக இல்லாது தாக்கம் செலுத்தும் சமூகமாக வாழ்வதற்குரிய அடிப்படைகள் எவை என்பது பற்றி இப்பிராந்திய சிறுபான்மை முஸ்லிம் சமூகங்கள் சிந்திக்க [illegible] இதற்கு சிறந்த உதாரணமாகும். இதற்கான பிக்ஹ் வடிவமைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நாட்டுக்கும் சில தனித்துவங்கள் உள்ளன. அவற்றின் இயல்புகளும் வேறுபட்டவை. அதன் கலாச்சாரங்கள், மரபுகளுக்கு மத்தியில் வேறுபாடுகள் உள்ளன. இவற்றை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

இப்பிராந்தியத்தில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் ஹனபி, ஷாபிஈ மத்ஹபுகளைப் பின்பற்றுகின்றனர். ஹனபி மத்ஹபின் வளர்ச்சியில் இந்திய அறிஞர்களின் பங்களிப்பு மகத்தானது. 'அல் பதாவா அல் ஹிந்திய்யா' என்ற நூல் இந்தியா அறிஞர்களின் ஆழ்ந்த அறிவுக்கு ஒரு அடையாளம். இது ஹனபி மத்ஹபின் மூல நூல்களில் ஒன்று.

இவ்வகையில் இப்பிராந்தியத்தில் வாழும் அறிஞர்களை உள்ளடக்கிய வகையில் 'பிராந்திய சட்ட மன்றம்' தோற்றுவிக்கப்பட வேண்டும். இதில் ஷரீஆத் துறைசார் அறிஞர்களுடன் ஏனைய துறை சார் அறிஞர்களும் உள்வாங்கப்பட வேண்டும்.

### சட்ட மன்றத்தின் நோக்கங்கள்:

1. பிராந்தியத்தில் பொதுவாக முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள், வழிகாட்டல்களை வழங்குதல்.
2. இஸ்லாம், ஷரீஆ சட்டம் தொடர்பில் எழுப்பப்படும் பல்வேறு சந்தேகங்கள், பிரச்சினைகள் மற்றும் தீவிரவாத சிந்தனைகளை எதிர்கொள்ளல். இதற்குத் தேவையான பதில்களை முன்வைத்தல்.
3. ஆய்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல். அவற்றைத் தூண்டுதல். இவ்வாய்வுகள் மூன்று பரப்புகளில் இடம் பெறலாம். இவற்றின் முன்மொழிவுகளை வெளியிடல்.

**ஒன்று:** பொதுவாக இப்பிராந்திய மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் அதற்கான தீர்வு முன்மொழிவுகள்,

**இரண்டு:** பிராந்திய நாடுகளின் மேம்பாடு, மற்றும் இந்நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வு முன்மொழிவுகள்,

**மூன்றாவது:** குறிப்பாக முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதற்கான தீர்வு முன்மொழிவுகள்,

4. பிராந்திய உலமாக்கள், அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து ரீதியான நெருக்கத்தை ஏற்படுத்தல்.
5. இஸ்லாமிய எழுச்சியையும், குறிப்பாக இளைஞர்களையும் வழிகாட்டும் வகையில் இஸ்லாத்தின் நடுநிலையான சிந்தனையைப் பரப்புதல்.
6. இஸ்லாமிய சட்டத்தின் உயர்வையும், அது மனித சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு வழிகாட்டக் கூடிய வகையில் அதில் பொதிந்துள்ள சிறப்பம்சங்களையும் எடுத்தியம்புதல்.

ஐரோப்பாவில் வாழும் முஸ்லிம்களை மையப்படுத்தி 1997 ஆம் ஆண்டு பத்வாவுக்கும், ஆய்வுக்குமான ஐரோப்பிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. இது ஐரோப்பாவில் வாழும் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு சொல்வதுடன், அவர்களை சமூக வாழ்வில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டல்களை கொடுத்து வருகின்றது.

### பத்வாவின் போது கவனிக்க வேண்டிய அம்சங்கள்

1. முஸ்லிம்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட மூலாதாரங்களான அல்குர்ஆன், சுன்னா, இஜ்மா, கியாஸை முற்படுத்தல்
2. கருத்து வேறுபாடுள்ள ஏனைய சட்ட மூலாதாரங்களையும் பத்வாவின் போது எடுத்துக் கொள்ளல்.
3. ஒரு மத்ஹபுடன் மாத்திரம் சுருங்காது நான்கு மத்ஹபுகளையும் கருத்திற் கொண்டு, மிகப் பொருத்தமான கருத்தை சரியான ஆதாரங்களை மையப்படுத்தி தெரிவு செய்தல். தேவையின் போது நான்கு மத்ஹபுகளுக்கு அப்பால் ஸஹாபாக்கள், தாபியீன்கள், பிற்காலத்தில் தோன்றிய ஏனைய முஜ்தஹித்களின் கருத்துக்களையும் எடுத்தல்.
4. ஷரீஆவின் நோக்கங்களான மகாஸிதையும், நடைமுறை நிலைமைகளையும் கருத்திற் கொண்டு பத்வாக்களைச் சொல்லல்.
5. இஸ்லாத்தின் இலகுத்தன்மை, மனித நலன் என்பதை பத்வாவின் போது கவனத்திற் கொள்ளல்.

இவ்வகையில் தென் மற்றும் கிழக்காசியாவை மையப்படுத்திய 'பத்வாவுக்கும், வழிகாட்டலுக்குமான சட்ட மன்றம்' தோற்றுவிக்கப்பட வேண்டும். எந்த அரசாங்கத்தின் கீழும் இயங்காது சுதந்திரமாக இது இயங்க வேண்டும். தகுதியான அனுபவமுள்ள உலமாக்கள், அறிஞர்களை இணைத்த வகையில் இந்த சட்ட மன்றம் உருவாக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• மஸீஹுத்தீன் இனாமுல்லாஹ்

# முஸ்லிம் மாதர்: உடல் உள ஆரோக்கியமும் உடற்பயிற்சியும்!



> ஆரம்ப காலங்களில் ஆண்களாயினும் பெண்களாயினும் வீட்டு வேலைகள் வீட்டுச் சுற்றுச் சூழல், விவசாயம், கால் நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் என பல விடயங்களில் ஓரளவு உடல் உழைப்புடன் வாழ்வை நகர்த்தியதால் போதிய உடற்பயிற்சி அவர்களுக்கு இருந்தது, ஆனால் யந்திர மயமான நகர வாழ்கையில் மனித வாழ்வு பெருமளவில் யந்திரங்களில் தங்கி இருப்பதால் அதற்கேற்ப ஆரோக்கியம் சார் பிரச்சினைகளும் அதிகரித்து வருகின்றன.

மனிதன் உடல் ஆன்மா அறிவு என்ற மூன்று பிரதான கூறுகளையும் கொண்ட அல்லாஹ்வின் சிறந்த படைப்பாகும். ஏனைய படைப்புகளை அவன் வசமாக்கி உலகை ஆளவும் அபிவிருத்தி செய்யவும் கடமைப்பட்டுள்ள அவனுக்கு வாழ்வில் ஒவ்வொரு அம்சமும் சோதனையாகும்!

''மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்;. அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான்.'' (ஸூரத்துன் நிஸாஉ 4:1)

ஆணாகவும் பெண்ணாகவும் சோடியாக படைத்துள்ள எல்லாம் வல்ல அல்லாஹ் இரு பாலாருக்கும் விஷேடமான சிறப்பம்சங்களை இயல்புகளை தனித்தன்மைகளை கொடுத்து இருவரது ஆன்மாக்களுக்கும் ஈருலக வாழ்விலும் ஏற்றத் தாழ்வற்ற சம அந்தஸ்தினை வழங்கியுள்ளான்.

''ஆணையும், பெண்ணையும் (அவன்) படைத்திருப்பதின் மீதும் சத்தியமாக- நிச்சயமாக உங்களுடைய முயற்சி பலவாகும். எனவே எவர் (தானதருமம்) கொடுத்து, (தன் இறைவனிடம்) பயபக்தியுடன் நடந்து, நல்லவற்றை (அவை நல்லவையென்று) உண்மையாக்குகின்றாரோ, அவருக்கு நாம் (சுவர்க்கத்தின் வழியை) இலேசாக்குவோம்.'' (ஸூரத்துல் லைல்: 92:7)

மனித வரலாற்றில் ஆண் பெண் உறவில் பல ஏற்றத் தாழ்வுகள் இருந்த போதும் இஸ்லாம் அவற்றை சரி செய்து இரு சாராரது உரிமைகளையும் கடமைகளையும் தெளிவாகவே வரையறுத்து அழகிய வாழ்வு நெறியொன்றை தந்திருக்கிறது.

### உடல் உள (ஆண் பெண்) ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவமளிக்கும் இஸ்லாம்

இந்த ஆக்கத்தின் நோக்கம் 'ஆண் பெண் சமத்துவம்' பற்றியும் அதன் ஆழ அகலங்கள் பற்றி பேசுவதுமல்ல மாறாக முஸ்லிம் மாதர்களது உடல் உள ஆரோக்கியம் மற்றும் அவற்றிற்குத் தடையாகவுள்ள சில சமூக கலாசார பாரம்பரிய காரணிகள் குறித்து ஒரு ஆரோக்கியமான கருத்தாடலை ஆரம்பித்து வைப்பதாகும்.

அல்லாஹ் மனிதனுக்கு அளித்துள்ள முதலாவது அமானிதம் அவனது/அவளது உடல் ஆகும் மண்ணில் வாழ்வதற்கு மண்ணினால் படைக்கப்பட்ட மனித உடலில் தான் அறிவு ஆன்மா எனும் அடுத்த இரண்டு பிரதான கூறுகளும் (மென்பொருட்கள்) அமையப் பெறுகின்றன. உயரிய நோக்கத்திற்காக பாரிய அமானிதம் ஒன்றை சுமப்பதற்காக படைக்கப்பட்ட மனிதனின் உடலமைப்பு அல்லாஹ்வின் மிகப் பெரிய அத்தாட்சிகளை கொண்டிருக்கின்றது.

''மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்;) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும்; பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம்; உங்களுக்கு விளக்குவதற்காகவே (இதனை விவரிக்கிறோம்); மேலும், நாம் நாடியவற்றை ஒரு குறிப்பிட்ட காலம் வரை கருப்பப்பையில் தங்கச் செய்கிறோம்; பின்பு உங்களை குழந்தையாக வெளிப்படுத்துகிறோம். பின்பு நீங்கள் உங்கள் வாலிபத்தை அடையும் படிச் செய்கிறோம். அன்றியும், (இதனிடையில்) உங்களில் சிலர் மரிப்பவர்களும் இருக்கிறார்கள்; (ஜீவித்து) அறிவு பெற்ற பின்னர் ஒன்றுமே அறியாதவர்களைப் போல் ஆகிவிடக் கூடிய தளர்ந்த வயது வரை விட்டுவைக்கப்படுபவர்களும் இருக்கிறார்கள்..'' (ஸூரத்துல் ஹஜ் 22:5)



தரப்பட்டுள்ள உடல் எனும் அமானிதத்தை பாதுகாப்பதும் தூய்மை, ஆரோக்கியம் பேணி பராமரிப்பதும் குழந்தைகளாக, சிறுவர்களாக இருக்கும் பொழுது தாய் தந்தையர்கள் மீதும், பருவ வயதை அடைந்ததன் பின்னர் அவரவர் மீதும் விதிக்கப் பட்ட கடமையாகும்! தனது அல்லது பிறரது உடல் உள ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பது தவிர்க்கப் பட வேண்டிய பாவ காரியமாகும் உச்ச பட்ச தண்டனையாகிய மரண தண்டனை வரை உலகவாழ்வில் தண்டனைகளும் மறுமையில் கொடிய தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

ஆரோக்கியம் ஓய்வு இரண்டிலும் பெரும்பாலானோர் கரிசனையின்றி இழப்புகளை சந்திப்பதாகவும், பலமான விசுவாசி பலவீனமான விசுவாசியை விட அல்லாஹ்விற்கும் அவனது தூதரிற்கும் விருப்பமானவன் எனவும் இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள், இஸ்லாமிய வணக்க வழிபாடுகள் கூட மனித உடல் உள ஆரோக்கியத்திற்கு பெரிதும் பங்களிப்புச் செய்கின்றன, தனது நாவினாலோ கரங்களினாளோ அடுத்தவருக்கு தீமை செய்யாதவரே உண்மை விசுவாசி யாவார் என ஒரு நபிமொழி கூறுகிறது.

### முஸ்லிம் மாதர்: உடல் உள ஆரோக்கியமும் உடற்பயிற்சியும்!

பொதுவாகவே முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் உடல் உள ஆரோக்கியத்தில் இருபாலாரும் குறிப்பாக பெரியவர்களான பின்பு கவனம் செலுத்துவது மிகக் குறைவாகும் அதிலும் குறிப்பாக முஸ்லிம் மாதர்கள் பருவ வயதை எய்தியதன் பின்னர் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது இல்லை என்றே கூறல் வேண்டும்.



அதற்குப் பல சமூக பொருளாதார கலாசார காரணிகளும் இருக்கின்றன, குறிப்பாக தெற்காசிய நாடுகளிலும் முஸ்லிம் அரபு உலகிலும் பின்பற்றப் படுகின்ற இறுக்கமான சமூக கலாசார காரணிகள் பெண்களை பெரும்பாலும் வீட்டு முகாமைத்துவம் மற்றும் பணிகளுடன் முழுநேர ஊழியர்களாக முடக்கிவிடுகின்றமை அவர்களது உடல் உள ஆரோக்கியத்தில் பல பாதகமான தாக்கங்களை கொண்டிருக்கின்றமை நாம் அறிந்த விடயமாகும்.

மத்திய கிழக்கு, மத்தியாசிய, தெற்காசிய மாதர்களின் உடலமைப்பை அவற்றின் பருமனை பற்றிய பொதுவான பார்வை அவர்களுக்கு எத்தகைய தொற்றும் தொற்றா நோய்கள் ஏற்பட அதிகரித்த வாய்ப்புக்கள் உள்ளன என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

குறிப்பாக மேற்சொல்லப்பட்ட நாடுகளில் பாரம்பரியமாக போற்றப் படும் ஆணாதிக்க சமூக கட்டமைப்புகள் குறித்து பெண்ணிய வாதிகள் முன்வைக்கின்ற பல குற்றச் சாட்டுகளில் மாதருக்கு தமது சுகாதாரம் ஆரோக்கியம் பேணல் சார் உரிமைகள் மறுக்கப் படுகின்றமையும் ஒரு பிரதான விடயமாகும்.

பெண்ணிய வாதிகள் பேசுகின்றார்கள் என்பதனை விடவும் முஸ்லிம்களது குடும்ப சமூக வாழ்வில் முஸ்லிம் மாதர் எதிர் கொள்கின்ற இன்னோரன்ன சமூக அநீதிகள் இஸ்லாமிய வரைமுறைகளுக்குள் களையப்பட வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

### பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வு காண முடியும் என்பதே பெரும் சவாலாகும்

பிரச்சினைக்கு தீர்வு காணும் வழி வகைகள் பல இருந்தாலும் அது குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்படுத்தப் படல் வேண்டும், முதற்கட்டமாக உடல் ஆரோக்கியம் பேணுதல் குறித்த விழிப்புணர்வை அரச சுகாதாரத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடனும் தேசிய சர்வதேசிய தொண்டர் சேவை நிறுவனங்களுடனும் ஒத்துழைத்து எமது தனித்துவங்கள் பேணப்படுகின்ற வகையில் மேற்கொள் ளுதல் வேண்டும்.

குறிப்பாக பாடசாலைப் பருவத்தில் அது குறித்த விழிப்புணர்வை கட்டாயம் ஏற்படுத்துதல் வேண்டும் அத்தோடு பாடசாலை வாழ்விற்குப் பிறகு வீட்டுச் சூழலில் எவ்வாறு தமது உடல் உள ஆரோக்கியத்தைப் பேணும் பயிற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும் எவ்வாறான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம் போன்ற வழிகாட்டல்களை வழங்க முடியும்.

இலங்கைச் சூழலில் மஸ்ஜித் மையப்பட்ட செயற்பாடுகளில் முஸ்லிம் மாதர் ஈடுபடாமையினாலும் பொது இடங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், நடைபயிலும் இடங்களில் முஸ்லிம் மாதர் தமது வரைமுறைகள் பேணி உடற் பயிற்சிகளில் ஈடுபடும் சாத்தியப்பாடுகள் இல்லாமையினாலும் தற்போதைய நிலையில் அவ்வாறான உடனடித் தீர்வுகளை எய்த முடியாதுள்ளது. என்றாலும் காலப் போக்கில் பொருத்தமான ஏற்பாடுகள் குறித்து சிந்திக்க வேண்டிய கடப்பாடு இருக்கின்றது.

இஸ்லாமிய அமைப்புகள் தொண்டர் நிறுவனங்கள் முஸ்லிம் மாதர்களுக்கென தனியான உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகள் மேற்கொள்வதற்கான பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்து கொடுக்க முடியும்!

நகர்ப்புறங்களில் சில இடங்களில் வர்த்தக நோக்கில் சில உடற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன, அதேபோல் நாடாளாவிய ரீதியில் பாதுகாப்பான சூழலில் அவ்வாறான ஏற்பாடுகளை அரச மற்றும் தனியார் துறையினாலும் செய்து தரமுடியும்!

மாதர்கள் சிறுவர்களுக்கென ஒரு வார இறுதி தினத்தை ஒதுக்கி பாடசாலை மைதானங்களில் பாதுகாப்பான சூழமைவுகளில் சில தொடர்ந்தேர்ச்சியான உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் எமக்குரிய வரைமுறைகளுடன் அவர்களை ஈடுபடுத்துதல் மற்றுமொரு அபிப்பிராயமாகும்.

ஆரம்ப காலங்களில் ஆண்களாயினும் பெண்களாயினும் வீட்டு வேலைகள் வீட்டுச் சுற்றுச் சூழல், விவசாயம், கால் நடை வளர்ப்பு, வீட்டுத் தோட்டம் என பல விடயங்களில் ஓரளவு உடல் உழைப்புடன் வாழ்வை நகர்த்தியதால் போதிய உடற்பயிற்சி அவர்களுக்கு இருந்தது, ஆனால் யந்திர மயமான நகர வாழ்க்கையில் மனித வாழ்வு பெருமளவில் யந்திரங்களில் தங்கி இருப்பதால் அதற்கேற்ப ஆரோக்கியம் சார் பிரச்சினைகளும் அதிகரித்து வருகின்றன.

நிச்சயமாக எந்தவொரு முன்னெடுப்பை செய்த போதும் பல்வேறு சாதக பாதகங்கள் இருக்கத்தான் செய்யும் சவால்கள் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதற்காக நல்ல முன்னெடுப்புக்களை நாம் கைவிட்டு விடுவதனை விட நியாயமான ஆரோக்கியமான விமர்சனங்களை உள்வாங்கி பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காணுதல் வேண்டும்.

இந்த விடயத்தை எமது சொந்த தாயாரின் சகோதரியின் மகளின் சந்ததியினரின் ஆரோக்கியம் சார் விவகாரமாக கருதி நின்று நிதானித்து சிந்தித்து செயற்பட நாங்கள் முன்வருதல் காலம் கடந்து போன கட்டாயமாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஃமின்களின் தாய்

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 05

பிள்ளைகளின் இயல்பு எக்காலத்திலும் ஒன்றாகத்தான் இருக்கிறது. அவர்கள் எந்த வொன்றையும் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்களை எதுவும் கவலையில் அழ்த்தி விடாது. அவர்கள் 7 வயதை அல்லது 8 வயதை அடைந்த பின்னரே எந்த விடயமும் அவர்களின் கவனத்தைத் திருப்பும். இவ் விடயத்தில் ஆயிஷா (றழி)யின் இயல்பு மற்றவர்களை விட வித்தியாசமானதாக இருந்தது. அவர் தனது சிறு பராயத்தில் நடந்த அனைத்தையும் ஞாபகத்தில் வைத்திருந்தார். ஹதீஸ்களில் தமக்கு விளங்க முடியுமான வற்றை விளங்கிக் கொண்டார். பின்னர் அவற்றை அறிவிப்புச் செய்வார். மட்டுமன்றி, அவற்றிலிருந்து ஞானங்கள், நலவான விடயங்களை வெளிக்கொணர்வார். அவர் விளையாடும் வேளையில், அல்லாஹ்வின் வேதத்திலிருந்து ஒரு வசனத்தை செவிமடுத்தாலும் நினைவில் வைத்துக் கொள்வார்.

ஆயிஷா (றழி) கூறுவார்: நான் மக்காவில் அடிமைப் பெண்ணோடு விளையாடிக் கொண்டிருக்கும்போது பின்வரும் வசனம் நபி (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்டது.

''அன்றி, மறுமை நாள்தான் இவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட தவணை. அந்த மறுமை நாள் மிக்க திடுக்கமானதாகவும், மிகக் கசப்பானதாகவும் இருக்கும்.'' (அல்கமர்: 46)

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற வேளையில், ஆயிஷா (றழி) 8 வயதைக் கூட கடந்திருக்கவில்லை. எனினும், விடயங்களை உணரக் கூடிய, விளங்கக் கூடிய, ஹிஜ்ரத் நிகழ்வின் இரகசியங்களையும் அதனோடு சம்பந்தப்பட்டவற்றையும் ஞாபகத்தில் வைக்கக் கூடியவராக இருந்தார். இந்நிகழ்வுகளை சங்கிலித் தொடராக மனனமிடுவதில் ஆயிஷா (றழி)ஐ எந்தவொரு ஸஹாபியும் நெருங்கக் கூட முடியவில்லை.

### அருள்பாலிக்கப்பட்ட திருமணம்

முஃமின்களின் தாயாகிய கதீஜா பின்த் குவைலித் நபி (ஸல்) அவர்களின் முதல் மனைவியாகவும் அவருக்கு மிக விருப்பத்துக்குரியவராகவும் இருந்தார். நபி (ஸல்) அவர்கள் 25 வயதில் கதீஜா (றழி)யைத் திருமணம் முடித்தார்கள். அவ்வேளையில் கதீஜா (றழி)க்கு 40 வயதாக இருந்தது. அவர் 25 வருடங்கள் நபி (ஸல்) அவர்களுடன் சந்தோசமாக வாழ்ந்தார். அவர் நுபுவ்வத் 10ஆம் வருடம் றமழான் மாதம் தனது 65ஆவது வயதில் வபாத்தானார். அதாவது, ஹிஜ்ரத் நிகழ்வதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் வபாத்தானார். அவ்வேளையில் ரஸூல் (ஸல்) அவர்களின் வயது 50 ஆக இருந்தது.

கதீஜா (றழி) நபி (ஸல்) அவர்களை ஈமான் கொண்ட முதல் பெண்ணாகவும், இப்புவியில் இஸ்லாத்தை ஏற்ற முதல் பெண்மணியாகவும் காணப்பட்டார்கள். அவர் நபி (ஸல்) அவர்களுக்கு துன்பத்திலும் இன்பத்திலும் சிறந்த துணைவியாக இருந்தார். நபி (ஸல்) அவர்கள் சிறுவயதில் இழந்த தாயின் அன்பை கதீஜா (றழி) வழங்கினார். நபி (ஸல்) அவர்கள் தஃவா வாழ்வில் உள்ளத்திற்கு நெருக்கடியாகவுள்ள குழப்பங்களை சீர்செய்யும் வேளையில் கதீஜா (றழி)யின் அன்பைப் பெற்றார்கள். கதீஜா (றழி) மரணித்த வேளையில், நபி (ஸல்) அவர்கள் மிகக் கடுமையாகக் கவலைப்பட்டார்கள். கதீஜா (றழி)யின் நினைவுகளை மீட்டிப் பார்த்தது போல வேறு எவரது நினைவுகளையும் நபி (ஸல்) அவர்கள் மீட்டிப் பார்த்தது கிடையாது. நபி (ஸல்) அவர்களைப் பீடித்த தனிமையின் கவலையால் வாழ்வு கூட கஸ்டமாகிப் போனது. நபி (ஸல்) அவர்கள் தமது கண்ணியம் மிக்க மனைவிக்காக கவலைப்படுவதைக் கண்ட ஸஹாபாக்களும் கஸ்டத்தை உணர்ந்தார்கள்.

எனவே ஹவ்லா பின்த் ஹகீம் (றழி) -இவர் உஸ்மான் இப்னு மழ்ஊன் (றழி)யின் மனைவி- ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் திருமணம் முடிப்பதில்லையா?' என வினவினார்.

நபி (ஸல்), 'யாரை?'

ஹவ்லா (றழி), நீங்கள் நாடினால் கன்னிப் பெண்ணையும் விதவைப் பெண்ணையும்.'

நபி (ஸல்), யார் அந்த கன்னிப் பெண்ணும் விதவைப் பெண்ணும்'

ஹவ்லா (றழி), 'விதவை ஸவ்தா பின்த் ஸம்ஆ. கன்னி -உங்களுக்கு மிக விருப்புக்குரிய அபூபக்ர் (றழி)யின் மகள் ஆயிஷா.'

(தொடரும்)






# PANIC
# திகில் மாறாட்டம்

திகில் மாறாட்டம் என்பது பதகளிப்பு வகை சார்ந்த ஒருவகை உளக் கோளாறாகும். இதன் போது திடீரென எதிர்பாராத வகையில் திகில் தாக்குதல் (Panic Attack) நிகழ்கின்றது. பொதுமைப்படுத்தப்பட்ட பதகளிப்பு மாறாட்டத்தினால் பாதிக்கப்பட்ட சிலருக்கு அதனுடன் சேர்ந்த வகையில் திகில் கோளாறு ஏற்படலாம் என உள மருத்துவர்கள் கருதுகின்றனர். காரணமற்ற திகில் அடிக்கடி ஏற்படும்போது ஒருவர் திகில் கோளாறினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்று கூறலாம். இதயத் துடிப்பு அதிகரித்தல், மூச்சுத் திணறல், நெஞ்சில் இறுக்கம், தசை இறுக்கம், தேகம் நடுங்குதல், வியர்த்தல், தலை சுற்றுதல், இடம் குறித்து அறிவு மங்குதல் போன்றன திகில் கோளாறின் பிரதான அறிகுறிகளாகும்.


அதாவது திகில் கோளாறு ஏற்படும்போது ஒருவர் இவ்வாறான அறிகுறிகளை வெளிப் படுத்துகின்றார். திகில் கோளாறு மற்றும் அதனால் ஏற்படக் கூடிய திகில் தாக்குதலுக்கான காரணம் தெளிவாக இனங்காணப்படவில்லை. இது குறித்து உளவியலாளர்கள் மற்றும் உள மருத்துவர்களிடையே பல்வேறு அபிப்பிராயங்கள் உள்ளன. பொதுவாக திகில் ஏற்படுவதற்கு மன வெழுச்சிப் பாதிப்புகள் காரணமாக அமையலாம் என்று கருதப்படுகின்றது.

கடும் மனவெழுச்சித் தாக்கத்தைத் தரக்கூடிய அசாதாரண சம்பவம் ஒன்று நிகழ்ந்து ஆறு மாத கால எல்லைக்குள் ஒருவர் திகில் கோளாறுக்கு உட்படலாம். வயதானோர் (Adult) ஆரம்பப் பருவத்தில் 2.5%மானோருக்கு திகில் கோளாறும் திகில் தாக்குதலும் ஏற்படலாம் என்று ஆய்வுகள் கூறுகின்றன. குழந்தைகள், முதிர்ந்தோருக்கு திகில் கோளாறு ஏற்படுவது மிகக் குறைவாகும். எனினும், குறிப்பிட்ட வயதுப் பிரிவினருக்கு மாத்திரமே திகில் கோளாறு ஏற்படுகின்றது என அறுதியிட்டுக் கூற முடியாது. ஆண்களை விட பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உளநெருக்கீடு, சிறுபராயத்தில் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுதல் போன்ற காரணங்களாலும் ஒருவர் திகில் கோளாறுக்கு உட்படலாம். திகில் தாக்குதல் திகில் கோளாறின் நேரடி விளைவாகும். அது ஆகக் குறைந்தது ஒரு நிமிடம் முதல் கூடியது 20 நிமிடங்கள் வரை நீடிக்கலாம். திகில் தாக்குதலின் கால அளவு சிலரில் அசாதாரணமாக 30 நிமிடங்கள் வரை நீடிப்பதாக உளவியல் ஆய்வுகள் கூறுகின்றன.

சாதாரணமாக 10 நிமிடங்கள் நீடிக்கும் திகில் தாக்குதலின்போது வேகமான இதயத் துடிப்பு, உடல் நடுங்குதல், வியர்த்தல், தசை இறுக்கமடைதல், மூச்சுத் திணறல் என்பன ஏற்படுகின்றன. திகில் கோளாறுக்கு இரு வகை சிகிச்சை முறைகள் கையாளப்படுகின்றன. உளவள ஆலோசனை மற்றும் உள மருத்துவம் என்பனவே அவை. உளவள ஆலோசனையில் அறிகை சார் நடத்தை சிகிச்சை முறை (Cognitive Behaviour Theraphy) பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. திகில் கோளாறினால் பாதிக்கப்பட்டோரில் 50%மானோர் இவ்வகை உளவள ஆலோசனை மூலம் பூரண குணமடைகின்றனர்.

மருத்துவத்தில் ஏனைய பதகளிப்புக் கோளாறுகளுக்குப் பயன்படுத்தப்படும் உளநெருக்கீட்டைப் போக்கும் மருந்துகள் (Anti Dipressent) பயன்படுத்தப்படுகின்றன. எனினும், மருந்துகளைப் பயன்படுத்துவோரில் 30%மானோருக்கு மீண்டும் நோய்க் குறிகள் ஏற்படலாம் என எச்சரிக்கப்படுகின்றது.



# அதிபர்களின் நிலைமாற்று வகிபாகம்

தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்பத் துறையின் வேகமான வளர்ச்சியினால் உலகம் பல மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் உள்வாங்கி வருகின்றது. அறிவு விசையினால் பூகோள மயமாக்கம் பல புதிய பரிமாணங்களை மனித வாழ்வில் உருவாக்கி வருகின்றது. இவற்றின் மொத்தப் பெறுபேறாக உலகம் ஓர் அறிவுச் சமூகமாக புதுப் பொலிவு பெற்று வருகின்றது.

இவ்வாறான அறிவு மைய சமூக அமைப்பில் நிறுவனத் தொழிற்பாடுகளும் நகர்வுகளும் மாற்றமடைவது இயல்பானது. உலகளாவிய மாற்றத்தின் மையமாக அறிவுப் பிரவாகம் உள்ளதால் பாடசாலை எனும் நிறுவனத்தின் புதிய செல்நெறிகள் குறித்த விவாதங்கள் வேகமாக மேற்கிளம்பியுள்ளதோடு, அந்நிறுவனத்தின் நிலைமாற்று வகிபாகம் பற்றியும் விரிவான கலந்துரையாடல்கள் கல்விமான்கள் மத்தியில் நடைபெறுகின்றன.

பாடசாலையின் தலைவர், நிருவாகி, முகாமையாளர் என்ற வகையில் அதிபர்களின் வகிபாகம் குறித்து புதிய எதிர்பார்ப்புகளும் சிந்தனைகளும் கல்வியியலாளர்களிடையே உருவாகியுள்ளன. உலகில் நிகழும் துரித மாற்றங்கள் பல்வேறு சவால்களையும் அறைகூவல்களையும் கல்வி உலகில் உருவாக்கி வருகின்றன. அவற்றுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து முன்னேறிச் செல்ல வேண்டுமாயின், அதற்கேற்ற தயார்நிலை பாடசாலைகளுக்கும் அதிபர்களுக்கும் அவசியம்.

புதுப் புது சவால்களுக்கு துலங்கக் கூடியவர்களாக அதிபர்கள் வலுவூட்டப்பட வேண்டும். ஏனெனில், பாடசாலைக் கல்விக்கு முழுப் பொறுப்பாளர்கள் அதிபர்கள்தான். அதன் முன்னேற்றத்தைக் கண்டு அதிபர்கள் பெருமையடைவது போல் அதன் பின்னடைவுக்கும் பொறுப்புக் கூறக் கூடியவர்களாக அதிபர்களே உள்ளனர்.

இதனால் ஒரு பாடசாலையின் வீழ்ச்சியிலிருந்து அதனை மீட்பதற்கான உபாயங்களையும் மூலோபாயங்களையும் தமது பதவிக் காலத்தில் கண்டறிந்து எழுச்சிக்கான அடிப்படைகளை இடுவது அதிபரின் பொறுப்பாகும்.

இன்று கல்வி உலகிலும் நிறுவன ஆய்வுகளிலும் நிலைமாற்று வகிபாகம் (Transformational Role) எனும் பதம் விரிவாகப் பயன்படுத்தப்படுகின்றது. Role எனும் பதம் தமிழில் வகிபாகம் என பெயர்க்கப்படுகின்றது. இச்சொல் அடிப்படையில் அரங்கியல் சார்ந்த ஒரு சொல்லாகும். ஒரு திரைப்படத்திலோ நாடகத்திலோ பல்வேறு பாத்திரங்கள் ஏற்று நடிக்கப்படுகின்றன. அத்தகைய நடிபங்கே உண்மையில் வகிபாகம் எனப் படுகின்றது.

ஒரு சமூகத்தின் இயங்கியலிலும் வாழ்வியலிலும் இத்தகைய பல்வேறு பாத்திரங்களை பல்வேறு நபர்கள் ஏற்றுச் செயலாற்றுகின்றனர். குடும்பத் தலைவர் எனும் வகிபாகம், பெற்றோர் எனும் வகிபாகம், மனைவி எனும் வகிபாகம் என இது வேறுபடுகின்றது. பிரச்சினையொன்றைத் தீர்ப்பதில் இன்னார் முக்கிய வகிபாகம் கொண்டுள்ளார் என்று கூறுவதை அவதானிக்கிறோம். அழகியலிலும் அரங்கியலிலும் கையாளப்பட்ட இச்சொற்பிரயோகம் 1970 களுக்குப் பின்னர் முகாமைத்துவத்தில் பிரபல்யமடைந்தது.

ஒரு நிறுவனத்தை முன்னெடுத்துச் செல்பவர் முகாமையாளர் என்ற வகையில் அவரது வகிபாகங்களை ஆராயும் முயற்சி 1970 களில் முனைப்புப் பெற்றது. தொடக்கத்தில் Hentry Mintzberg (1973) இதில் அக்கறை காட்டினார். அவர் தனது ஆய்வில் ஒரு முகாமையாளர் 10 வகிபாகங்களை ஆற்றுவதாக எடுத்துக் காட்டினார்.

முகாமையாளர் ஆற்றுகின்ற தலைவர், தொடர்பாடலாளர், கண்காணிப்பாளர், தகவல் பரப்புபவர், பேச்சாளர், முயற்சியாண்மையாளர், பிரச்சினைகளைக் கையாள்பவர், பேரம் பேசுபவர், வளங்களைப் பகிர்பவர் ஆகிய 10 வகிபாகங்களை அவர் ஆளிடை வகிபாகம் (Inter Personal Role) தகவல்சார் வகிபாகம், தீர்மானம் மேற்கோள்ளும் வகிபாகம் ஆகிய மூன்று பிரதான பகுதிக்குள் இனங்கண்டார்.

சுமாராக இதே காலப் பகுதியில் நிலைமாற்றுத் தலைமைத்துவம் (Trans formational Leadership) எனும் எண்ணக் கருவை Dountan அறிமுகம் செய்தார். எவ்வாறாயினும் இதனை முக்கிய தலைமைத்துவ அணுகுமுறையாகப் பிரகடனப் படுத்தியவர் J.M. Burns (1978) ஆவார். பேர்ன்ஸ், நிலைமாற்றுத் தலைமைத்துவத்தை கொடுக்கல் வாங்கல் (Transaction) தலைமைத்துவத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டினார்.

நிலைமாற்றுத் தலைமைத்துவத்திற்கு நோர்த் ஹவுஸ் (2003) பின்வருமாறு வரைவிலக்கணம் சொன்னார். ''நிலைமாற்றுத் தலைவர் என்பவர் பணியாட்களின் செயலாற்றுகையுடன் மாத்திரமல்லாது அவர்களது முழுமையான ஆற்றலை விருத்தி செய்வதிலும் கவனம் செலுத்துவார். அவர் தன்னைப் பின்தொடர்பவரை தொடர்ச்சியாக ஊக்கப்படுத்துவார். நிலை மாற்றுத் தலைவர்கள் உயரிய விழுமியங்களையும் இலட்சியங்களையும் கொண்டிருப்பதால் பணியாளர்கள் மீது ஆழமான செல்வாக்கைச் செலுத்த முடிகின்றது.

நிலை மாற்று தலைமைத்துவத்தின் பண்புகளாக பேர்ன்ஸ் பின்வரும் நான்கு அம்சங்களை முன்வைக்கின்றார்.

**1. வசீகரம்** (Chirisma)

நிலைமாற்றுத் தலைவர்கள் தம்மைப் பின்தொடர்வோருக்கு ஒரு வகிபங்கு மாதிரியாக (Role Model) அதாவது ஒரு கதாநாயகனாகத் தோன்றுகின்றனர். மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா, சேகுவரா, பிடல் காஸ்ரோ போன்றோர் இத்தகைய வசீகரத் தன்மையைக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

வசீகரத் தன்மை பல்வேறு பரிமானங்களைக் கொண்டது. அன்னை தெரேஸாவும் மண்டேலாவும் அடிப்படையில் வேறுபட்டிருந்தாலும் ஆள்நிலை வசீகம் என்பது அவர்களது பொதுத் தன்மையாகும்.

**2. உயிர்ப்பூட்டும் ஊக்கல்**
(Inspirational Motivation)

நிலைமாற்றுத் தலைவர்கள் ஒரு தரிசன நோக்கினைக் கொண்டிருப்பதோடு, அதனை வெற்றிகரமாக தம்மைப் பின்தொடர்வோருக்கும் அத்தரிசன நோக்கினை அடைவதற்கான தமது மக்களை தொடர்ச்சியாக ஊக்கப்படுத்துவதோடு, அவர்களின் அடைவு மட்டத்தை உயரிய நிலைக்கு இட்டுச் செல்கின்றவர்களாகவும் உள்ளனர்.

இந்நிலைமைக்கு மிகச் சிறந்த உதாரணம் மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹாதிர். அவர் தனது 2020 எனப்படும் தூர தரிசனம் மூலம் மலேசியர்களை ஒன்றிணைத்ததோடு, தனது நாட்டினையும் முன்னேற்றகரமான பாதையில் வழிநடத்திச் சென்றார்.

**3. அறிவார்ந்த தூண்டல்**
(Interalectual Stimulation)

அறிவார்ந்த தூண்டுதல் என்பது பின்தொடர்வோர் தாமே தமது புத்தாக்கச் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபடச் செய்வதாகும். ஒருவர் பழைய நம்பிக்கைகள், விழுமியங்களை புதிய கோணத்தில் பார்க்காமல் அல்லது அவற்றுக்குச் சவால் விடுக்காமல் புதியவற்றைப் படைக்க முடியாது. இது சிந்தனைத் தூண்டல் மூலமே சாத்தியமாகும். தலைவர்கள் தம்மையும் தமது பின்தொடர்வோரின் விமர்சனத்திற்கு உட்படுத்திக் கொள்வதோடு, சுய விமர்சனத்திற்கும் உட்படுத்திக் கொள்ள வேண்டும். இது நிறுவன வளர்ச்சிக்கு மிகவும் அவசியம்.

**4. தனியாள் ரீதியான அக்கறை**
(Individual Concern)

நிலைமாற்றுத் தலைவர்கள் தமது பணியாளரின் பிரச்சினைகளை தனித்தனியாகச் செவிமடுப்பதோடு, அவர் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவுகின்றார். எல்லாப் பணியாளர்களையும் அவர்கள் ஒட்டுமொத்தமாக நோக்காது, எவர் எவர்க்கு என்னென்ன தேவையோ, அவற்றைச் செய்து கொடுக்க அவர்கள் முனைகின்றனர். பணியாளர்களில் சிலருக்கு ஆதரவு தேவைப்படலாம், சிலருக்கு அதிகாரம் தேவைப்படலாம், சிலருக்கு வழிகாட்டல் தேவைப்படலாம். நிலைமாற்றுத் தலைவர்கள் தமது பின்தொடர்வோர் பற்றி தனித்தனியாக கவனமெடுத்து அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வார்.

இத்தகைய வகிபாகங்களை ஓர் அதிபர் எவ்வாறு ஆற்ற வேண்டும் என்பது குறித்து அடுத்த இதழில் ஆராய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உத்தேச ஹஜ்... (03 ஆம் பக்கத் தொடர்)



12. நிதி, குடிவரவு குடியகல்வு, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து போன்ற தொடர்புடைய அமைச்சுக்களுடனும், பயண முகவர்களுடனும் தொடர்பாடலும் தொடர்புகளைப் பேணுவதும்

13. யாத்திரிகளின் பொதுவான நலன்களைக் கவனித்தல்

14. கமிட்டியின் நடவடிக்கைகளைப் பகிரங்கப்படுத்துவதும், இது தொடர்பில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஒழுங்குகளில் யாத்திரிகளுக்குத் தேவையானவற்றை பகிரங்கப்படுத்தலும்

15. ஹஜ் மற்றும் உம்ரா தொடர்பில் அமைச்சரினால் குறித்துரைக்கப்படும் ஏனைய பணிகளை நடைமுறைப்படுத்தல்

இந்தப் பணிகளைச் செய்வதற்கான அனைத்து உதவிகளையும் அமைச்சர் செய்ய வேண்டும்.

### கமிட்டியின் கூட்டங்கள்

ஹஜ் பருவகாலம் தொடங்க முன்னர் ஹஜ் பயணத்தைத் திட்டமிடவும் ஒழுங்குபடுத்தவுமென குறைந்தது மாதம் ஒருமுறையாவது கமிட்டி கூட வேண்டும். அதன் பின்னர் மீளாய்வுக்காக ஒரு முறையாவது கூட வேண்டும். இது தவிர அமைச்சர் தேவையெனக் கருதும் நேரங்களிலும் கமிட்டியின் தலைவர் தேவையெனக் கருதும் நேரங்களிலும் கமிட்டி கூட முடியும். பணிப்பாளருடன் சேர்த்து ஐந்து பேர் கோரமாகக் கருதப்படும். பெரும்பான்மை வாக்கின் அடிப்படையிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப் பட வேண்டும்.

### உப குழுக்கள்

நிதி விவகாரத்துக்கும் ஹஜ் ஏற்பாடுகளுக்குமாக இரண்டு உப குழுக்களை கமிட்டி நியமித்துக் கொள்ளலாம். இதனுடைய பணிகளும் அதிகாரங்களும் கமிட்டியால் விதந்துரைக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். உப குழுக்களுக்குத் தேவையான எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் கமிட்டியிலிருந்து நியமிக்கப்படுவர். கமிட்டியின் தலைவர் கலந்து கொள்ளும் அனைத்து உபகுழுக் கூட்டங்களுக்கும் கமிட்டியின் தலைவரே தலைமை வகிப்பார்.

### கமிட்டி அங்கத்தவருக்கான தகைமைகள்

இலங்கைப் பிரஜையாக இருத்தல், முஸ்லிமாக இருத்தல், 30 வயதுக்குக் குறையாதவராக இருத்தல், சித்தசுவாதீனமுள்ளவராக இருத்தல், வங்குரோத்து நிலை அடைந்தவராக நீதிமன்றினால் குறித்துரைக்கப்படாதவராக இருத்தல், நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டவரல்லாதவராக இருத்தல், ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக அமைச்சரினாலோ அல்லது முறைகேடுகள் தொடர்பில் நீதிமன்றத்தினாலோ பதவி வறிதாக்கப்பட்டவரல்லாது இருத்தல்.

### நிதி, கணக்குகள், கணக்காய்வுகள்

கமிட்டிக்கென இலங்கை ஹஜ் உம்ரா நிதியம் ஒன்றை உருவாக்கலாம். இதற்குரிய நிதி, ஹஜ்ஜாஜிகளைப் பதிவு செய்யும் போதும், ஹஜ் முகவர்களைப் பதிவு செய்யும் போதும் பெறப்படும் கட்டணங்கள், மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள், ஹஜ் செய்வதற்காக ஹாஜிகளிடமிருந்து பெறப்படும் பணம், வைப்புக்கள் மற்றும் முதலீடுகளினால் கிடைக்கும் இலாபங்கள். அரச அங்கீகாரம் பெற்ற திறைசேரி போன்ற மூலங்களிலிருந்து பெறப்படும் கடன், அன்பளிப்பு போன்றவை, அமைச்சரினால் திறைசேரி மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் நிதி, பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படும் நிதி.

### நிதியைப் பயன்படுத்தல்

கமிட்டி தலைவருக்கும் அங்கத்தவர்களுக்குமான அலவன்ஸ் வழங்குதல், உயர் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்குதல், தமது பணியையும் அதிகாரங்களையும் பயன்படுத்தும் போது எழும் செலவுகள், சட்டம் செலுத்துமாறு வேண்டும் செலவுகள், அமைச்சர் அங்கீகரிக்கும் ஏனைய செலவுகள்

### விசாரணைக் குழு

ஹஜ் முகவர்கள் தொடர்பிலான யாத்திரிகளின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக சுயாதீனக் குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். இதன் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி அல்லது ஓய்வு பெற்ற அரச ஊழியர் ஒருவரும் இன்னும் இரு அங்கத்தவர்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்தக் குழு தமது கண்டறிதல்களை கமிட்டிக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஏதேனும் ஹஜ் முகவர் நிலையங்கள் தவறெனக் காணப்படுமிடத்து, எழுத்து மூலமான எச்சரிக்கை, அபராதம், தண்டனை, இடைநிறுத்தல், அனுமதியை ரத்துச் செய்தல் அல்லது கமிட்டி சிபாரிசு செய்யும் வேறேதேனும் தண்டனைக்கு உள்ளாதல் வேண்டும்.

### பொதுவானவை

யாத்திரிகளுக்கான பாஸ் வழங்கும் அதிகாரம் கமிட்டிக்கு வழங்கப்பட வேண்டும். தனது பணிகளைச் செய்யாத போது அல்லது தவறிழைக்கும் பொழுது கமிட்டியைக் கலைக்கும் அதிகாரம் அமைச்சருக்கு உண்டு. இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். கமிட்டி நீதிமன்றம் செல்ல நேருமிடத்து அதற்கான செலவை கமிட்டியின் நிதியிலிருந்தே பெற வேண்டும். யாத்திரிகள் எவரும் கமிட்டி தொடர்பான அதிருப்திகளை கமிட்டியிடம் முறையிடலாம். இதற்குச் சரியான நிவாரணம் கிடைக்காதவிடத்து அமைச்சரிடம் முறையிடலாம். ஒவ்வொரு நிதி ஆண்டிலும் நிதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சர் மூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்தச் சட்டத்தின் மூலம் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் எவருக்கும் மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது மூன்று மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட வேண்டும். குற்றம் ஒரு நிறுவனத்தினால் புரியப்பட்டிருந்தால் அந்த நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களும் தவறிழைத்தவர்களாகக் கருதப்பட வேண்டும்.

---

## எல்லை...
(01 ஆம் பக்கத் தொடர்)

இதில் கண்ணிவெடி அகற்றல், சிறிய ரக ஆயுதங்களை அழித்தல், மரபு வழி ஆயுதங்களின் பாதுகாப்பையும் களஞ்சியப்படுத்தல் வசதிகளையும் முன்னேற்றுதல் ஆகியவற்றுக்கு 5 மில்லியன் டொலர்களும், ஏற்றுமதி கட்டுப்பாடு மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திட்டங்களுக்கு 380,000 டொலர்களும், சர்வதேச இராணுவக் கல்வி மற்றும் பயிற்சிகளை நடத்துவதற்காக 09 இலட்சம் டொலர்களும் ஒதுக்கப்படவுள்ளன.

---

## பயங்கரவாத...
(01 ஆம் பக்கத் தொடர்)

புதிய சட்டத்தின் மூலம் அரசாங்கம் பயங்கரவாதத்தை இல்லா தொழிப்பதற்குப் பதிலாக தொழிற்சங்க நடவடிக்கைகளையும் ஊடக சுதந்திரத்தையும் ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிய வருவதாகவும், இதனூடாக நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிக்கும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, இதற்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் சிறி லங்கா சுதந்திரக் கட்சி மேற்கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

---

## ஊழல் மோசடி... (01 ஆம் பக்கத் தொடர்)

இது தொடர்பான அறிவித்தல் வெளியானதில் இருந்து பொது மக்களிடமிருந்து பெருவாரியான மனுக்களும் முறைப்பாடுகளும் கிடைத்து வருவதனால் தொடர்ந்தும் மக்களுக்கு இதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தக் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் எழுத்து மூலமான தமது மனுக்களையும் முறைப்பாடுகளையும், செயலாளர், அரச நிறுவனங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பாகக் கண்டறிவதற்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, அறை இல.210, ப்ளொக் 02, இரண்டாம் மாடி, BMICH, பௌத்தாலோக மாவத்த, கொழும்பு 07 என்ற முகவரிக்கோ அல்லது info@cmifc.gov.lk என்ற மின்னஞ்சலுக்கோ அனுப்பி வைக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு 0112665382 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

---

## வரவு-செலவுத் திட்டம்... (04 ஆம் பக்கத் தொடர்)

முயற்சியேனும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா? என்றால் இல்லை.

40 வருட காலமாக போஷிக்கப்பட்ட இவ் ஊழல் அரசியலில் இதுவரை ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகள் எதுவுமற்ற மிகவும் தூய்மையான அரசியல்வாதியாக மங்கள சமரவீரவுக்கு உண்மையில் பெருமைப்பட முடியும். என்றாலும், அவர் மீதொட்டமுள்ள குப்பை மேட்டின் உச்சியிலேயே அமர்ந்துகொண்டுள்ளார். இந்தக் குப்பை மேட்டிற்கு குப்பைச் சேர்க்காத அவர், தூய அரசியல்வாதியாவார். ஆனால் அது அன்றாடம் விசாலமடைவதற்கான காரணம் மற்றும் அதற்கான தீர்வு குறித்து பேசுவதற்கு அவரால் முடியாமல் உள்ளது. இதனால் 2019ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டமும் ஊழல் நிரம்பிய குப்பை மேடு தொடர்பில் எதுவும் பேசப்படாத தொன்றாகும். இதன் காரணமாக, இவ்வரவு செலவுத் திட்டத்தின் பெறுமதி என்ன என கேட்க வேண்டியுள்ளது?

இந்நாட்டில் எத்தகைய பிரச்சினைக்கும் தீர்வு சொல்லப்படாத, திறந்த பொருளாதாரம் எல்லாவற்றுக்கும் சரியான மருந்து என்கின்ற அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் தொடர்பில் விவாதிப்பது அல்லது அதிலுள்ள சிறந்த விடயங்களை தேடுவதில் எவ்வித பிரயோனமும் இல்லை. சகலருக்கும் தமது நாடு என ஏற்றுக்கொள்ளக்கூடிய, சகலருக்கும் வெற்றிகரமான வாழ்க்கையை கழிப்பதற்கு உத்தரவாதமுள்ள, சகலருக்கும் ஒரே அமைப்பில் சுதந்திரமான ஜனநாயக நிலவுகையுள்ள சமூகத்திற்கான அவஷியமான அடிப்படை காரணிகள் குறித்து நாம் முதலில் பேச வேண்டும்.

அவை குறித்துப் பேசாத வரவுசெலவுத் திட்டமானது இறுதியில் மக்கள் பணத்தை விரயமாக்குவது எப்படி என்பது தொடர்பில் பேசப்படும் விவாதப் தலைப்பொன்றாக மாத்திரமே அமைந்துவிடும்.

---

## குப்பை விவகாரம்... (07 ஆம் பக்கத் தொடர்)

தேசிய பூங்கா அமைந்துள்ளது. அங்கு யானைகள் அதிகம் உள்ளன. குப்பை வாசத்திற்கு யானைகள் வரக்கூடிய ஆபத்து உள்ளது. குப்பை கொட்டப்படும் இடத்திற்கும் வில்பத்து பூங்காவிற்கும் இடையில் ஐந்து விவசாய கிராமங்கள் உள்ளன. அங்கு முஸ்லிம்களே பெரும்பான்மையாக உள்ளனர். ஒரு தடவை சம்பிக்க ரணவக்க வணாதவில்லுவிற்கு வந்த போது கொழும்பில் முஸ்லிம்கள் அதிகம் உள்ளார்கள். அவர்களே அதிகம் குப்பை போடுகிறார்கள். அந்தக் குப்பைகளை முஸ்லிம்கள் உள்ள இடத்திற்கே கொண்டு வந்து போடுகிறோம் என்று பகிரங்கமாகச் சொல்லியிருந்தார். மீதொட்டமுள்ளையில் 39 பேர் இறந்து போனார்கள். அதற்காக வேண்டியே அங்குள்ள குப்பைகள் இங்கு கொண்டுவரப்படுகிறது என சொல்கிறார்கள்.

இதே சமயம், அனல் மின்சார நிலையத்தின் கழிவு களப்பில் சேர்வதால் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகிறார்கள். IPEN, BRI ஆகிய சூழல் தொடர்பான ஆராய்ச்சி நிறுவனங்கள் புத்தளம் களப்பை சூழவுள்ள மக்களின் உடலில் நிலக்கரி உள்ளதா என ஆராய்ச்சி செய்தன. மனித உடலில் அனுமதிக்கப்பட்ட அளவாக 10 லட்சம் சொட்டில் ஒரு சொட்டு இருக்கலாம். அதாவது 1BP. ஆனால் இம்மக்களின் உடம்பில் 2.73 - 15 வரையில் காணப்பட்டது. இதனால் பிள்ளை பெறக்கூடிய வயதிலுள்ள பெண்களின் கரு பாதிக்கப்படும். சிசுக்களுக்கு மூளை, இதயம் போன்ற பகுதிகளில் பிரச்சினை வரலாம். மந்த புத்தியான பிள்ளைகள் பிறக்கும் வாய்ப்பு இருக்கிறது. சம்பிக்க இதனை அறியாமலில்லை. அவர் தெரிந்து கொண்டே மீன் வளமுள்ள களப்பை சூழ குப்பையை கொட்டப் பார்க்கின்றார். களப்பிலுள்ள மீன்களை சாப்பிடுவதனாலேயே இது உடம்பில் செல்கிறது.

இதுதவிர குப்பை கழிவுகள் கடலில் கலப்பதால் மீன்பிடியில் வாழும் 25,000 குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலையுள்ளது. புத்தளம் களப்பை பொறுத்தவரையில் 2700 ஏக்கர் உப்பும், 5000 ஏக்கர் இறால் பண்ணையும் உள்ளது. அதுபோன்று ஏறக்குறைய 10,000 குடும்பங்கள் இதனை சூழ தொழில் செய்கின்றன. எனவே இவையனைத்து மக்களினதும் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. இது தவிர புத்தளம் மன்னார் வரையான பகுதி நிலத்தடி நீருக்கு பெயர் போன இடமாகும். குடிநீருக்கும் விவசாயத்திற்கும் இந்நீர் பயன்படுத்தப்படுகிறது. இந்நீரில் நச்சுத்தன்மை கலக்குமாயின் மன்னார் வரையான நீர்நிலை பாதிக்கக்கூடிய ஆபத்து காணப்படுகிறது.

- **இது விடயம் தொடர்பில் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்படவில்லையா?**

அவர்கள் மேடைகளில் எதிர்ப்பு தெரிவித்தாலும் பதவியைக் காப்பாற்றிக் கொள்ள மௌனமாக இருக்கிறார்கள். நாம் இன்று (13) முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்திக்கிறோம். அவர்களிடம் இவ்விடயத்தை ஆழமாக அறிவுறுத்த வேண்டியுள்ளது.

---

## ஊழல் மோசடியை... (06 ஆம் பக்கத் தொடர்)

முன்வைத்து அதற்கு அவர் பதிலளிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவரை கண்டனத் தீர்மானமோ, நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலமோ பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாதவிடத்து, கணக்காய்வாளரின் அறிக்கையை குற்றம் சாட்டப்பட்டவர் பணிபுரியும் அரச நிறுவனத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கையளித்து அவரை பதவி நீக்கம் செய்யும் பொறுப்பை அமைச்சின் பிரதானிக்கு வழங்க முடியும்.

ஈ) 1988 இன் 74 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பிரகடனப்படுத்தும் சட்டத்தின் கீழ் அரச அதிகாரிகள் தவறான வழியில் உழைத்தவற்றை அறிந்து கொள்ளும் உரிமை மக்களுக்கு இருந்தது. 90 களின் நடுப்பகுதியில் இது மக்களுக்குத் தடுக்கப்பட்டிருந்த போது அதனைத் தகர்த்தவர்களில் முதலாமவனாக நானிருந்தேன். அதனால் அதனைப் பற்றிப் பேசுகின்ற உரிமை எனக்கு வெகுவாகவே இருக்கிறது.

இந்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கி அதனை இற்றைப்படுத்துவதன் ஊடாக மட்டுமே அரச அதிகாரிகளின் ஊழல் மோசடி தொடர்பில் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்த முடியும். இதனால் இந்த ஊழல் பேர்வழிகளிடம் தாம் எப்படியும் சட்டத்தின் முன்நிறுத்தப்படுவோம் என்ற பெரும் அச்சத்தை ஏற்படுத்த முடியும். இந்த முக்கியமான சட்டம், தகவலறியும் உரிமை ஆணைக் குழுவின் இரண்டு தீர்ப்புகளினால் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது. இந்தச் சட்டத்துக்கு உயிரூட்டுவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும்.

உ) சொத்துப் பிரகடனத்தை வெளியிடுபவர் நிரப்ப வேண்டிய படிவத்தை புதுப்பிக்க வேண் டும். தற்போதைய சட்டத்தின் படி இந்த விடயத்தில் தவறிழைத்த ஒருவருக்கு தண்டனையாக 1000 ரூபா அல்லது ஒரு வருட சிறைத் தண்டனையே குறிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்சமாக ஐந்து இலட்சம் ரூபா விதிக்கப்பட்டு, தவறாக உழைத் தவற்றின் பெறுமதிக்கேற்ப தண்டனை அதிகரிக்கப்பட வேண்டும்.

சிறைத் தண்டனையின் குறைந்த கால எல்லையாக மூன்று வருடங்கள் விதிக்கப்பட வேண்டும். தண்டப் பணமும் சிறைத் தண்டனையும் இரண்டுமே இந்த விடயத்தில் தவறிழைத்தவர்களுக்கு விதிக்கப்பட வேண்டும். நிரப்பப்படும் படிவம் இலத்திரனியல் வடிவமைக்கப்பட்டு சொத்துக்களை வெளிப்படுத்துவதற்கான இணையத்தளம் ஒன்றினூடாக பொது மக்கள் இலவசமாகப் பார்வையிடுவதற்கு வழி செய்ய வேண்டும்.

சட்டத்தை இவ்வாறு திருத்தியமைப்பதனூடாக மட்டுமே கூட தவறான முறையில் சொத்துக்களைக் குவித்திருக்கின்ற எல்லா அரச அதிகாரிகளையும் சுற்றி வளைக்க முடியும். இதனால் இதனை ஒரு பழக்கமாகக் கொண்டிருக்கின்ற அதிகாரிகளுக்கு இதனுடைய பாரதூரத்தை உணர்த்த முடியும்.

ஊ) முல் மோசடி தவிர்ப்புக் குழுவினை, ஹொங்கொங்கின் Independent Commission Against Corruption இனை முன்னுதாரணமாகக் கொண்டு அமைத்துக் கொள்ள முடியும். இதற்கேற்றாற் போல 1994 இன் 19 ஆம் இலக்க ஊழல் மோசடி குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுச் சட்டத்தினை திருத்தியமைக்க வேண்டும். இந்த வகையில் ஆணைக்குழுவின் கட்டமைப்பு, ஆணையாளர்கள் நியமனம் உட்பட்ட அனைத்து விடயங்களும் மாற்றப்பட வேண்டும்.

ஊழல் மோசடி மலிந்து காணப்பட்ட ஹொங்கொங் இந்த முறை மூலமாக இன்று ஊழல் மோசடியை இல்லாதொழித்த நாடாக மாறியிருக்கிறது. இன்று ஹொங்கொங் அடைந்துள்ள வளர்ச்சிக்கு இந்த ஆணைக்குழு சிறந்த முறையில் செயற்பட்டமை முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது. இலங்கையும் இந்த நாட்டிலிருந்து கற்றுக் கொள்ள முடியும். இதற்கான வழிகாட்டலை வழங்குவதற்கும் அந்த நாடு தயாராகவே இருக்கிறது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/C 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இஸ்பஹான் சாப்தீன்

# ATM சார்ந்த திருட்டுக்களும் பாதுகாப்பு முறைகளும்

அண்மைக்காலமாக ATM மூலம் பணம் திருடப் படும் செய்திகளை நாம் அடிக்கடி கேட்கின்றோம். ATM என்ற சொல் 'தன்னியக்கக் கூற்றுப் பொறி' (Automated Teller Machine) என்பதைக் குறிக்கும். இது, 1969 இல் உருவாக்கப்பட்ட ஒரு இலகு வழி பணப் பரிமாற்ற முறையாகும். வங்கிகளுக்குப் பதிலாக ATM மூலம் பணக் கொடுப்பனவு மற்றும் எடுப்பனவுக்கு வாடிக்கையாளர்களுக்கு இலகுவாக அமையும் என்ற நோக்குடனேயே ஆரம்பிக்கப் பட்டது. இன்று, உலகம் பூராகவும் இம்முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

1969 களில் இது ஆரம்பிக்கப்பட்டாலும் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இன்றைய நிலையில் கூட இந்த ATM முறை பாதுகாப்பற்றதாகவே காணப்படுகின்றது. இதனை, அண்மைக்கால சம்ப வங்கள் உறுதி செய்து கொண்டே இருக்கின்றன. ATM மூலம் தனிநபர்களது பணம் திருடப்பட்ட செய்திகளையும் ATM இல் உள்ள மொத்தப் பணமும் திருடப்பட்ட செய்திகளையும் நாம் கடந்த காலங்களில் இருந்து கேட்டு வருகின்றோம்.

இந்த வகை திருட்டில் ஈடுபடும் குற்றவாளிகளால் நவீன தொலைதொடர்பு தொழில்நுட்ப வளர்ச்சியின் வெளிப்பாடுகளான கணனி, இணையம், வலைப் பின்னல், டிஜிட்டல் தொழில்நுட்பம் போன்ற பலதும் குற்றங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

அந்தவகையில், இந்த ATM திருட்டும் கொள்ளை யும் பல்வேறு முறைகளில் மேற்கொள்ளப்படுகின் றன. அப்படியான சில முறைவழிகள் பற்றியும், வங்கிகள் எப்படியான, பாதுகாப்பான யுக்திகளைக் கைக்கொள்ளும் என்பது பற்றியும் நாம் பார்ப்போம்.

பெரும்பாலான திருட்டுகள் ATM களை உடைக் காது, Hacking செய்து, மெய்நிகர் பரிமாற்றல் (Virtual Transaction) மூலம் பணம் திருடும் முறைகளாகவே காணப்படுகின்றன.

**1. போலி (Fake Processing Centre) செயலாக்க மையத்துடன் ATM ஐ இணைத்தல்.**

இந்த முறைப்படி, வங்கியின் சேவர் (Server) இணைந்துள்ள Network உடன் போலி செயலாக்க மையத்தை வடம் (Cable) மூலம் தொடர்புபடுத்து வர். தொடர்பானதும் ATM இற்கும் வங்கி Server இற்கும் இடையே இருந்த தொடர்பைத் துண்டித்து விடுவர்.

எனவே இதன்படி, போலி செயலாக்க மையத் தின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக ATM வந்து விடும். திருடர்களுக்கு அதன் பின்னர் எந்த அட்டை யையும் எந்தப் PIN Number யும் பயன்படுத்தி பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

போலி செயலாக்க மையம் கட்டளைகளை வழங்கி யதும் அந்தக் கட்டளைகளுக்கு ஏற்ப ATM இன் பணம் வழங்கி (Cash dispenser) இயங்க ஆரம்பிக் கும். அதன்படி பணம் வைக்கப்பட்டுள்ள தட்டுகள் (Cash Trays) பணத்தை வெளித் தள்ளும்.

**2. வைரஸ் தாக்குதலை ஏற்படுத்தி திருடுதல்** (Malware Attacks)



இணையத்தின் மூலம் பெற்ற திறப்பை (ATM Key) அல்லது குறித்த வங்கியில் பணிபுரியும் அலுவலர் ஒருவரின் உதவியின் வழியாகப் பெற்ற ATM திறப் பைக் கொண்டு இயந்திரத்தைத் திறப்பர். தேவையான, வைரஸ் அடங்கிய USB அல்லது Hard Disk ஐப் பொருத்தி வங்கி Network வழியாக Server இற்குள் Virus ஐ நகர்த்துவர். இதனை இயக்க பிரத்தியேக விசைப் பலகைகளைப் (Keyboard) பயன்படுத்துவர். இதன் மூலம் Server ஐக் கைப்பற்றி பணத்தைத் திருடுவர்.

**3. ATM வலையமைப்பின் இயக்கத்தை நிறுத்தி, வங்கிக் கணக்காளர்களது தரவுகளைப் பெற்றுத் திருடுதல்.** (Network Jamming and Database Hacking)

இதற்காக வேண்டி பிரத்தியேகமாக, WiFi Router போன்ற வடிவில் தயாரிக்கப்பட்ட கருவிகள் பயன் படுத்தப்படுகின்றன. அந்தவகையில், இப்படியான ஒரு Hacking device ஐ குறித்த வங்கியின் Network உடன் இணைப்பர். இது Cable கொண்டோ Wireless கொண்டோ மேற்கொள்ளப்படும்.

பிறகு, வங்கியின் தரவுக் களஞ்சியத்தில் (Account Holders Database) உள்ள கணக்கு வைத்துள்ளவர்களது தரவுகள் அலசப்படும். இதன் போது, குறித்த ATM மூலம் அதிக பணத்தைப் பெற முடியுமான அனுமதி பெற்ற வாடிக்கையாளர்களின் கணக்குகள் அடையா ளம் கண்டுகொள்ளப்படும். பின்னர், அப்படியான கணக்குகளிலிருந்து Fake Master ATM Card களைப் பயன்படுத்தி திருடர்களால் பணம் பெற்றுக் கொள்ளப் படும்.

இதனால், குறிப்பிட்ட அளவு தொகை மாத்திரமே ATM அட்டை மூலம் பெற முடியும் எனவும் அதை விட அதிகமான தொகைப் பணம் பெற வேண்டு மாயின் வங்கிக்கு நேரடியாக வந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தற்போது சில வங்கிகள் மட்டுப் படுத்தியுள்ளன.

**4. கருப்பு பெட்டித் தாக்குதல் (The black box attack)**

இணையத்தின் மூலம் பெறப்பட்ட அல்லது வங்கி யில் உள்ள ஒருவரின் உதவியுடன் பெற்ற இயந்திரத் தின் திறப்பைக் கொண்டு ATM ஐ திறப்பர். ATM இதன் மூலம் Maintenance Mode இற்கு மாற்றப்படும். அதாவது, வங்கியினர் பழுது பார்க்கவோ அல்லது பணம் வைக்கவோ திறந்திருப்பதாக ATM இற்கு கட்டளை வழங்கப்படும்.

பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட USB Port கொண்ட குறித்த போலிக் கருப்புப் பெட்டியை இதனுடன் இணைப்பர். குறித்த கருப்புப் பெட்டி காசு வழங்கியைக் கட்டுப்படுத்தும்.

வாடிக்கையாளர்களுக்கு ATM தற்போது Main tenance Mode இல் இருப்பது போல் Display இல் 'சேவையில் இல்லை (Out of Service) என்று காண்பிக் கும். ஆனால், பணம் வழங்கியோ கருப்புப் பெட்டி யின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கிக் கொண்டு இருக்கும். காசு வெளி வந்து கொண்டிருக்கும்.

இந்தக் கருப்புப் பெட்டியை Smart Phone மூலம் Wireless தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இயக்க வும் முடியும் எனச் சொல்லப்படுகிறது. அதேபோல், வேலை முடிந்ததும் குறித்த போலிக் கருப்புப் பெட்டி அழிக்கப்பட்டு விடும்.

**5. பல ATM களை இணைத்துள்ள Server ஐ குறிவைத்து சகல ATM களையும் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரல்.**

வங்கியில் பணிபுரிபவர்களின் உதவியின்றி எதுவும் செய்ய முடியாது. எனவே, வங்கியில் பணிபுரியும் ஒரு அதிகாரியிடம் இருந்து திறப்பு வாங்கப்படும். அல்லது அவரது ஒத்துழைப்பு பெறப்படும். அந்த திறப்பை வைத்து இயந்திரத்தை திறக்க முடியும். இருப்பினும் காசு வழங்கியை திறக்க முடியாது. ஆனால், Network Cable களை இணைக்க முடியுமான வகையில் உள்ளே எல்லா Cable களும் இருக்கும். அந்த Cable களுடன் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட Hacking Server ஐ இணைப்பர்.

இப்படி இணைத்து விட்டு பின்னர் வங்கி Server இல் உள்ளவற்றை குறித்த Hacking Server இற்கு பெற்றுக் கொள்வர். பின்னர் தாம் திருட எண்ணும் ATM ஐ தேவையான போது குறித்த வங்கியின் Server தொடர்பில் இருந்து துண்டித்துவிடுவர்.

பிறகு திருடர்கள் தமது வசதிக்கு ஏற்ப ATM களில் இருந்து தயாரித்த போலி அட்டைகளைப் செலுத்தி பணத்தைத் திருடிவிடுவர்.

**6. RFID Card இல் இருந்து பணம் திருடுதல்.**

கையில் உள்ள ATM Card ஐ சற்று அவதானி யுங்கள். Card இல் Wifi Waves போன்று ஒரு குறி யீடு காணப்படும். அப்படி ஒரு குறியீடு இருந்தால் அந்த Card, RFID வசதியுள்ள Card ஆகும். அதாவது, அந்த Card ஐ Cash Swipe Machine களில் தேய்த்து பணம் செலுத்த முடியும் என்பதைப் போலவே சில Machine களில் Card ஐ தேய்க்காம லேயே பணம் செலுத்த முடியும். அதாவது, சில Machine களுக்கு பக்கத்தில் கொண்டு சென்றாலே போதுமானது. WiFi மூலம் குறித்த Card ஐ Read செய்து பணத்தை பரிமாற்றி விடும். இதனை, (contactless smart card) என்றும் அழைப்பர்.

இப்படியான அட்டைகளை வாசிக்கத் கூடிய, தானியங்கச் செய்யும் போலிக் கருவிகளை எமது அட்டைக்குப் பக்கத்தில் கொண்டு வந்தால், எமது வங்கி அட்டை தொடர்பான சகல தகவல்களையும் திருடர்களுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

### வங்கிகள் முன்னெடுக்கும் பாதுகாப்பு முறைகள்

ஆனால், இந்த மேற்சொன்ன எல்லா முறைகளி லும் பணம் திருட, மோசடி செய்ய முடியுமாக இருந் தாலும் அவை அந்தளவு இலகுவான காரியமல்ல.

தகவல் தொழில்நுட்ப அறிவு (IT), எண்ம அறிவு (Digital), மென்பொருள் அறிவு (Software), வலைப் பிண்ணல் இணைப்பு அறிவு (Networking) போன்ற வற்றில் தேர்ச்சி பெற்றவர்களால் மாத்திரமே அது முடியும். அதேபோல், சில திருட்டுகள் வங்கி ஊழியர்கள் தொடர்புபடாமல் செய்யவும் முடியாது.

இப்படியான வழிகளில், ATM திருட்டுக்கள் ஏற்படலாம் என்பதை அறிந்து சில வங்கிகள் முன் னேற்பாடுகளை செய்துள்ளன. செய்து வருகின்றன.

குறிப்பாக, மிகவும் பாதுகாப்பான ப்ரொடொ கோல் முறை (Secure Protocol), பாதுகாப்பான குறியீட்டு மொழியில் தரவுகளை வைத்திருந்தல் (Secure Encryption), தரவுக் களஞ்சியத்தின் பாது காப்பை உறுதிப்படுத்தல் (Database Security), உள்நுழைவு இடங்களின் போது கூடுதல் பரீட்சிப்பு செய்தல் (Access Authentic Verification), கெமரா மூலம் உடனுக்குடன் அவதானித்துக் கொண்டிருத் தல் (Real-time Monitoring System), சிக்கலான மற்றும் இரகசியமான WiFi Password களை பயன்படுத்துதல், பாதுகாப்பான மென்பொருள்கள் பயன்படுத்தல் (Security Software), முக்கியமான வன்பொருட்களை (Hardware) யாருக்கும் நுழைய முடியாத வகையில் வைத்திருத்தல் போன்ற முறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் வங்கி கள், தமது ATM ஊடாக அல்லது கணனி தொழில் நுட்பத்தினூடாக திருட்டுக்கள் இடம்பெறுவதி லிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

அதேபோல், இந்த இந்த மென்பொருள்கள் எமது வங்கி வலைப் பின்னல்களுக்கு (white list softwares) பாதிப்பு இல்லாதவை (Standard), நிலையானவை. இவை அல்லாதவை பாதிப்பு ஏற்படுத்தக்கூடியவை (black list softwares) என கணனி வலைப்பின்னல் களுக்கு முன்கூட்டி கட்டளைகளை வழங்கி வைத்திருத்தல். அதன்படி, இப்படியான பாதிப்புகளை ஏற்படுத்தும் Software Install செய்யப்பட்டால் உடன் System செயலிழக் கும் வகையில் Server ஐ வைத்திருப்பதும் பாதுகாப்பானது.

## திகன... (10 ஆம் பக்கத் தொடர்)

தீயினால் கருக்கப்பட்டிருந்த கெங்கல்ல பள்ளிவாசலை, ஒருவருடத்துக்குப் பின்னர் கடந்த 10 நாட்களுக்கு முன்னர்தான் திருத்தியமைப்பதற்கு ஆரம்பித்திருக்கிறார் கள். தாக்கப்பட்ட பல பள்ளிவாசல்கள் இன்னும் நிதி திரட்டும் நிலையில் இருக் கின்றன. இவற்றுக்கெல்லாம் அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்காத நிலை யிலேயே ஜனாதிபதி புத்தர் சிலையைத் திறந்து வைக்க திகனவுக்கு வருகிறார்.

திகனவிலும் அதனைச் சூழவுள்ள பிர தேசங்களிலும் சுமுக நிலை நிலவுவது போலத் தோன்றினாலும், சாம்பலுக்குக் கீழ் கனன்று கொண்டிருக்கும் நெருப்பாக இனவாதம் இன்னும் புதைந்திருப்பது மக்களுடைய கருத்துக்களில் இருந்து புரி கிறது. மிகவும் பரபரப்பாக இயங்கி வந்த தும்பர பேக் ஹவுஸ், தனது வாடிக்கை யாளர்களில் 30 வீதமானவர்கள் தற்போது தம்மிடம் வருவதில்லை என்கிறது.

நுஸ்ரா ஸ்டோர்ஸின் உரிமையாளர் நியாஸ், நான்கு மாதங்களிலேயே தான் கடையை மீண்டும் ஆரம்பித்தாலும் தற் பொழுது வியாபாரம் நடக்கின்ற அளவுக்கு வாடிக்கையாளர்கள் வருவதில்லை என்கி றார். கம் தாவ கிராமத்தில் வாழ்ந்த ஐந்து முஸ்லிம் குடும்பங்களினதும் வீடுகள் தீக் கிரையாகியதனால், அந்த ஐந்து குடும்பங் களையும் அங்கிருந்து எடுத்து ருக்குள் அவர்களுக்குக் காணி வாங்கி ஐந்து வீடு களைக் கட்டிக் கொடுப்பதற்கு ஜம்இய்ய துல் உலமா ஏற்பாடு செய்து வருகிறது. இப்படியே இன உணர்வுகள் மேலும் கூர்மையடைந்து வருவதையே திகனவின் ஒருவருடத்துக்குப் பிந்திய நிலைமைகள் தெளிவுபடுத்துவதாக இருந்தன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதிலும் அரசாங்கம் இன்னும் இழுத்தடித்துக் கொண்டே இருக்கிறது. தாக்குதலில் சேதமாக்கப்பட்டதாக அரசாங் கம் எண்ணி வைத்துள்ள 546 சொத்துக் களில், ஒரு இலட்சத்துக்கு உட்பட்ட நஷ் டங்களைக் கொண்ட 372 சொத்துக்களுக்கு முழுமையான நஷ்டஈடுகள் வழங்கப்பட் டுள்ளதாக பிரதமரின் கீழுள்ள புனர் வாழ் வுத் திணைக்களம் அறிவித்திருக்கிறது. ஆனால் பர்ஹான் ஹாஜியுடைய துணி மணிக் கடையில் விசாரித்த போது அவர் களது இழப்பு 08 கோடி எனவும், அவர் களுக்கு அரசாங்கம் ஒரு இலட்ச ரூபாவை நஷ்டஈடாகத் தந்ததாகவும் தெரிய வந்தது.

தெருச் சண்டையில் கொல்லப்பட்ட சாரதிக்கு வழங்கப்பட்டது போல, அப்துல் பாஸித்துடைய இழப்புக்கு அரசாங்கம் ஐந்து இலட்சங்களை நஷ்டஈடாக வழங்கி யிருந்தது. ஆனால் அவருடைய வயதான தந்தையும் தாயும் செய்து வந்த சப்பாத்துக் கடையின் இழப்பு 15 இலட்சம் எனவும், இதற்கு அரசாங்கம் எந்த நஷ்டஈடும் வழங்கவில்லை எனவும் அவருடைய தந்தை கூறினார். உடைக்கப்பட்ட பள்ளி வாசல்களில் பள்ளித் திருத்த வேலைக்கான நிதியுதவி கோரிய பனர்கள், சேதமாக்கப் பட்டதன் புகைப்படங்களுடன் காட்சி யளிக்கின்றன. அரசாங்கம் சிறியதொரு தொகையை நஷ்டஈடாகத் தந்தாலும், இந்தத் தாக்குதலுடன் தலைமறைவான நிறையக் கடன்காரர்கள் கடனைத் திருப் பித் தராததால் வந்த இழப்பு, கடைகளைத் திருத்தி அமைக்கும் வரையான காலத்தி லுண்டான நஷ்டம், அது இது என சமூகம் இன்னும் அல்லல்பட்டுக் கொண்டிருக் கிறது.

ஜம்இய்யதுல் உலமாவின் கீழ் தற்போது இயங்கும் Digana Relief Management Unit பாதிக்கப்பட்டவர்களுக்காகச் சேகரிக்கப் பட்ட நிதியிலிருந்து அவர்களால் கணிக்கப் பட்ட மொத்த சேதத்தின் 20 வீதமான இழப்பை ஈடுசெய்திருக்கிறார்கள் என ஜம்இய்யதுல் உலமாவின் DRMU வின் கணக்காளர் மௌலவி ஸப்ரான் புர்கானி தெரிவித்தார். ஹிஜ்ராபுர பள்ளிவாசலில் நடந்த தாக்குதலின் போது [illegible] னரிடம் இருந்து தப்புவதற்காக [illegible] இருவர் வீழ்ந்து காயப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் மூன்று பிள்ளைகளின் தந்தை யான இர்பானுடைய இடுப்பு உடைந்து அவர் இன்னும் நடமாட முடியாதவராக இருக்கிறார். அதேபோல நெருப்புக் காயங்களுக்கு உள்ளான பாஸித்துடைய சகோதரன் பயாஸ் இன்னும் கோர்ட்டும் கையுமாக அலைந்து கொண்டிருக்கிறார். அப்துல் பாஸித்துடைய மரணத்துக்கான வைத்திய அறிக்கையில் அவர் கலவரத் துக்கு முந்திய நாள் (04 ஆம் திகதி) மரணித்ததாக குறிப்பிட்டுக் கொடுக்கப் பட்டுள்ளது. அவருடைய மரணச் சான் றிதழ் ஒரு வருடமாகியும் வழங்கப்படா மல் இன்னும் இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இது தொடர்பில் ஆரம்பத்தில் உழைத்த பலரும் இப்பொழுது சோர்ந்து போய் விட்டார்கள். ஆவணப்படுத்தல் வேலை களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போர மும் ஜேஎம் மீடியாவும் இணைந்து ஈடுபடுவதாகச் சொன்ன போதும் இன்னும் இது தொடர்பான பூரணமான ஆவணம் எதனையும் காணக் கிடைக்கவில்லை. பொலிஸில் முறைப்பாடு செய்தல் போன்ற சட்டரீதியான விடயங்களையும் ஜம்இய்ய துல் உலமா சார்பான நிவாரணக் குழு வினர் முன்னெடுப்பதாக அந்த நேரம் தெரிவிக்கப்பட்ட போதிலும் இந்த முறைப் பாடுகளுக்கு என்ன நடந்தது என்று தெரி யாமல் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவுக்கெல்லாம் அலை ந்து திரிகிறார்கள். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இவர்களது முறைப் பாடு தொடர்பில் நாம் விசாரித்தபோது, இவை தொடர்பான முழுமையான அறி க்கை ஒன்றை நாம் தயாரித்துக் கொண்டி ருக்கிறோம். இப்பொழுது மாவனல்லை விடயத்தையும் அறிக்கைப்படுத்த வேண்டி யிருப்பதனால் சற்றுத் தாமதமாகியது. விரைவில் அந்த அறிக்கையை நாங்கள் வெளியிடுவோம் என்றனர்.

அரசாங்கத்தின் [illegible] இராணுவத்தினரின் உதவியுடன் தான் எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எனவே அரசாங்கம் தான் இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர். பிரதம ரைக் காப்பாற்றுவதற்கு நீதிமன்றம் போன முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏன் எங்களுடைய விவகாரத்துக்கு நீதி பெற்றுத் தராமலிருக்கின்றனர் என்று விவரம் தெரிந்தவர்கள் கேள்வி எழுப்பு கின்றனர். கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், அரசாங்கம் சொல்வது தான் மெய் என்பதனை அவர் கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஒரு முறை அடித்தே மீள முடியாமல் செத்துப் பிழைக்கிறோம். அடுத்த முறை வந்தால் எதிர்த்து நிற்பேன். போனால் அல்லாஹ் தந்த உயிர் தானே போகப் போகிறது என்கிறார் நுஸ்ரா ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஜெய்னுலாப்தீன் முஹம்மத் நியாஸ்.

இவர்களை ஒரு வருடத்துக்குள்ளேயே சமூகம் மறந்து விட்டது போல் இருக் கிறது. ஒரு வருடத்தில் ஆறுகின்ற காயம் அல்ல அவர்களது. திகன என்பது இன வாதத்தின் தற்செயல் எழுச்சியுமல்ல. இது நீண்டு செல்லும் இனவாதப் பாதையின் மைல்கல். வருடத்துக்கொரு முறையாவது, சமூகத் தலைமைகள் என்று யாரும் இருந் தால், சென்று அவர்களை வழிப்படுத்துவது தான் சிறந்தது.

## தெரணிகல சந்த... (10 ஆம் பக்கத் தொடர்)

அமைத்தார்கள். சிங்கள, முஸ்லிம், தமிழ் பாடசாலைகளை உருவாக்கினார்கள். அவ ரவர் தத்தமது கலாசாரங்களை சீர்செய் தார்கள்.

ஆனால் ஒருவரும் கலப்பு முறை யிலான கலாசாரத்தை உருவாக்கவில்லை. இதனாலேயே இனங்களுக்கிடையில் பிரச் சினை ஏற்படுகிறது. இது மிகப்பெரும் வர லாற்றுத் தவறாகும். நாட்டுத்தலைவர்கள் இவற்றை நிவர்த்திசெய்வதற்கு சட்டங் களை மாத்திரமே உருவாக்குகிறார்கள். பிரச்சினைகள் ஏற்பட்ட பின்னரே அதற்கு நடவடிக்கை எடுக்கப்பார்க்கிறார்கள். திகன போன்ற சம்பவம் ஏற்பட்டால் சம்பந்தப் பட்டவர்களை பிடித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்கிறார்கள்.

தலதா மாளிகை பௌத்த வழிபாட்டி டமாகும். அதே போன்று அது உலக மரபுரி மையும் கூட. அதை நாம் உடைத்துவிடும் போது எமக்கு வருகின்ற அந்நியச் செலா வணி இல்லாமல் போகின்றது. அது போன்று தான் சீகிரியாவும். அவற்றை பாதுகாப்பது தொடர்பில் முறையான போத னைகளை வழங்கும் திட்டங்கள் ஆட்சி யாளர்களிடம் இல்லை. முறையான கல்வி யின்மையே மக்களுக்கு மத்தியில் சந்தே கம் வலுப்பதற்கு காரணமாக அமைகிறது.

ஒவ்வொரு இனத்திலும் உள்ள கல்வி முறைகளே அவர்களது பண்பாடுகளை மாற்றுகிறது. அதில் குறைபாடுகள் இருந் தால் நாட்டிற்கே அதற்கான நஷ்டஈட்டை செலுத்த வேண்டியேற்படும். மாவ னெல்லை விவகாரத்தை பாருங்கள், முஸ் லிம் பிள்ளைகளுக்கு மதக் கொள்கைகள் தெரியாததே அத்தகைய தவறை இழைப்ப தற்கு காரணமாக அமைந்திருக்கிறது. தூபி யின் மேல் உட்கார்ந்து புகைப்படம் பிடிக்கி றார்கள். அடுத்தவர்களின் மதத்தை பற்றிய சரியான போதனைகள் அவர்களுக்கு வழங் கப்படாமையே இது போன்ற தவறுகளுக்கு காரணம். இதனாலேயே பிரச்சினைகள் ஏற் படுகின்றன.

மத கலாசார இடங்களுக்கு சேதாரம் ஏற்படாமல் அவற்றை பார்வையிடுமாறும் அவற்றை நிந்திக்கும் வகையில் செயற் படக்கூடாது என்பது தொடர்பிலும் நாம் அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண் டும். எனவே இவையனைத்தும் சரியாக முகாமை செய்யப்படாமையினாலேயே பிரச்சினை ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2020 ஒலிம்பிக்:

## இலங்கையருக்கான வாய்ப்பு குறைவு

ஜப்பான் - டோக்கியோவில் 2020ம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டித் தொடருக்காக அமைக்கப்பட்ட அடைவு மட்டங்கள் மற்றும் நுழைவுக்கான தரம் என்பவற்றுக்கு சர்வதேச மெய் வல்லுனர் சம்மேளனங்களின் சங்கம் அனுமதியளித்துள்ளது. அதேநேரம், போட்டியிடவுள்ள வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் அடைவு மட்டத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் தொடருக்கான தகுதிக்காலம் எதிர்வரும் மே முதலாம் திகதி ஆரம்பமாவதுடன், 2020 ஆம் ஆண்டு ஜுன் 29 ஆம் திகதி நிறைவுக்கு வரவுள்ளது. இந்த காலப்பகுதிக்குள் டயமண்ட் லீக் உட்பட பல்வேறு சர்வதேச மெய்வல்லுனர் தொடர்கள் நடைபெறவுள்ள நிலையில், அதன் மூலம் வீரர்கள் தங்களுடைய வாய்ப்புகளை தக்கவைத்துக்கொள்ள முடியும். அதேநேரம், ஒலிம்பிக் தொடருக்கான பயிற்சிகளை மேற்கொள்வதற்கு அதிக காலத்தினை வழங்கும் முகமாக, மரதன் மற்றும் 50 கிலோ மீற்றர் வேக நடை போட்டிகளுக்கான இறுதித் திகதி

TOKYO 2020

2020 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றது.

டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டித் தொடருக்கான வீரர்களை தெரிவு செய்யும் இரண்டு முறைகளை சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனம், அறிமுக்கப்படுத்தியிருந்தது. ஒலிம்பிக் போட்டிகளுக்கான அடைவு மட்டம் மற்றும் சர்வதேச மெய் வல்லுனர் சம்மேளனத்தினால் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள வீரர்கள் தரவரிசை என இரண்டு முறைகளின் கீழ் வீரர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

இதன்படி 50 சதவீதமான வீரர்கள் அடைவு மட்டங்களின் அடிப்படையிலும், மிகுதி 50 சதவீதமான வீரர்கள் சர்வதேச மெய்வல்லுனர் தரவரிசையின் அடிப்படையிலும் ஒலிம்பிக் தொடருக்கு உள்வாங்கப்படவுள்ளனர். அதேநேரம், இவ்வாறு புதிதாக வெளியிடப்பட்டிருக்கும் தெரிவுக்கான புதிய முறைகள் குறித்து வீரர்கள், பயிற்றுவிப்பாளர்களுக்கு தெளிவுப்படுத்தும் செயலமர்வுகளை நடத்த சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதேவேளை, சர்வதேச மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதிய தெரிவுக்கான அடைவு மட்டங்களை பார்க்கும் போது, ஒலிம்பிக் தொடரில் இலங்கை வீர, வீராங்கனைகள் பங்கேற்பது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அநேகமான அடைவு மட்டங்கள் இலங்கையின் தேசிய சாதனைகளை விடவும் அதிகமாக உள்ளன. இதனால், இலங்கையின் வீர, வீராங்கனைகள் கடந்த காலங்களை விடவும், இம்முறை அதிகமான திறமைகளை வெளிப்படுத்தும் பட்சத்திலேயே ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகியுள்ளது.

## கேள்வி இலக்கம் - 03

நிலை மாறு நீதியை நடைமுறைப்படுத்தும் நோக்கில் ஐ நா மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பில் நிறைவேற்றிய தீர்மானத்தின் இலக்கம் என்ன ?

- கடந்த இதழில் கேட்கப்பட்ட கேள்விக்கான சரியான விடை: 20

### வெற்றியாளர்கள்

500 ரூபா பணப் பரிசினை பெறும் வெற்றியாளர்:

- M.F.F. Shasniya - Kahatowita

ஆறுதல் பரிசினை பெறும் வெற்றியாளர்கள்:

1. M.A.Amazir - Kumarimulla Pugoda
2. M.A.Dhurrah - Hemmathagama
3. A.R.M.Randees - Old Postal Road, Oluvil

விடைகளை 0777798096 என்ற இலக்கத்துக்கு, உங்களது பெயரையும் ஊரையும் பத்திரிகை வெளியிடப்பட்டு ஒரு வாரத்துக்குள் அனுப்பி வையுங்கள்.

### வெளிவந்து விட்டது






அண்மையில் காலமான மனித நேய ஊடகவியலாளர் ஜயதிலக்க டி சில்வாவுக்கான இரங்கல் கூட்டமொன்று கொழும்பில் நடைபெற்றது. பலஸ்தீன் விவகாரத்தில் அவர் காட்டிய அக்கறையை முன்வைத்து இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கம் இதனை ஒழுங்கு செய்திருந்தது. நிகழ்வில் இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர், ஜயதிலக்க டி சில்வாவின் குடும்பத்தார், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




SLS (9001:2015) தரச் சான்றிதழைப் பெற்ற முதல் இஸ்லாமிய கலாபீடமான குருநாகல குரீகொட்டுவ ஹாதியா இஸ்லாமிய நிறுவனத்தின் இரண்டாவது பட்டமளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. 114 மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்ட இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நீர் வழங்கல், நகர திட்டமிடல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.




அஷ்ரப் ஷிஹாப்தீன் மீள்பார்வையில் தொடராக எழுதி வந்த 'எனக்குள் நகரும் நதி' பத்தி எழுத்துக்களின் தொகுப்பு நூலாக வெளியிடப்பட்டது. கொழும்பு YMMA மண்டபத்தில் மீள்பார்வை ஆசிரியர் பியாஸ் முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கவிஞர் ரவூப் ஹஸீர், Dr. அர்ஷத் அஹமத் ஆகியோர் நூலை முன்வைத்து உரையாற்றினர். இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் யூ.எல். யாகூப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதோடு, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளர் ஷாமிலா முஸ்தீன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd. 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org